வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959    Reg. No. : P . 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர் ஈழநாடு

Email : news@eelanadu.lk    மலர் : 04    23.07.2023 ஞாயிற்றுக்கிழமை    இதழ் : 225    பக்கங்கள் : 20



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


07 மௌன விரதத்தை முடித்தார் மோடி!


08 நான்கு தசாப்தங்கள் கடந்த பிறகும் நழுவிக்கொண்டு போகும் அரசியல் தீர்வு!


11 இலங்கை,இந்திய நட்புறவுக்கு 13ஆம் திருத்தம் நல்ல பகடைக்காய்!


16 கொலம்பியாவில் போர் நிறுத்தம் சாத்தியமா?

# பொலிஸ் அதிகாரம் தொடர்பில் தனித்து முடிவெடுக்க முடியாது!

## மோடியிடம் தெரிவித்தார் ரணில்

கொழும்பு, ஜூலை 23

**அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள பொலிஸ் அதிகாரத்தை வழங்குவது தொடர்பில் தன்னால் தனித்து முடிவெடுக்க முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவுக்கு தெளிவுபடுத்தினார் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**

இந்திய விஜயத்தை முடித்துகொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை தூதுக்குழுவினர் நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பினர். இந்நிலையில்

19



## ஜனாதிபதித் தேர்தலை நடத்த தயாராகும் ரணில்

### நிதி ஒதுக்கம் குறித்தும் அறிக்கை

கொழும்பு, ஜூலை 23

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு எவ்வளவு நிதி தேவைப்படும் என்பது தொடர்பில் மதிப்பிட்டு தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என சிங்கள இணைய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்களுடன் ஜனாதிபதி அண்மையில் பேச்சு நடத்தியிருந்தார்.

இதன்போது ஜனாதிபதித் தேர்தலுக்கு அடுத்த பாதீட்டில் நிதி ஒதுக்கவேண்டி இருப்பதால் அது தொடர்பான மதிப்பாய்வு அறிக்கையை நிதி அமைச்சுக்கு விரைவில் அனுப்புமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் முற்பகுதியில் நடத்தப்படலாம் என அரசியல் வட்டாரங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. (அ)

## இலங்கை அரசை தொடர்ந்தும் இந்தியா கண்காணிக்கவேண்டும்

### சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை 23

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் தமிழ் மக் களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தரவாதங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆவன செய்யவேண்டும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள விசேட அறிக்கை ஒன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசாங்கம் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஒரு தரப்பு என்ற அடிப்படையில், இந்திய

19

## நாம் ஆட்சியைக் கைப்பற்றினால் உண்மை கூறி பிரச்னை தீர்ப்போம்

### கூறுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூலை 23

“நாம் ஆட்சியைக் கைப்பற்றினால் முதலில் செய்வது மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவது. அது இந்த அரசு செய்யாத வேலை. அதே வேளை, பாதிக்கப்பட்ட தொழில் முயற்சியாளர்கள் பற்றி ஆய்வு செய்வோம். பாதிப்பை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம்.”

- இவ்வாறு ஜே.வி.பியின் முக்கியஸ்தரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

மலேசியாவில் பொருளாதாரப் பிரச்னை வந்த போது அந்நாட்டுப் பிரதமர் மஹாதீர் முஹம்மட்

19

## ஒற்றையாட்சியை பாதுகாக்கவே நாட்டு மக்கள் ஆணை வழங்கினர்

### மொட்டு கட்சி செயலர் கூறுகிறார்

கொழும்பு,ஜூலை 23

நாட்டைப் பிளவுபடுத்துவதற்காக அல்ல, ஒற்றையாட்சியைப் பாதுகாக்கவே நாட்டு மக்கள் பொதுஜன பெரமுன கட்சிக்கு வாக்களித்து, ஆணை வழங்கினர் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் நேற்று தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சியின்

19



## ரயிலுடன் மோதுண்டு வயோதிபர் மரணம்!

### மீசாலையில் துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூலை 23

தென்மராட்சி, மீசாலை - புத்தூர் சந்திக்கு அருகாமையில் ரயிலுடன் மோதுண்டு வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த 68 வயதுடைய செல்லையா பரமசாமி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொழும்பு- கோட்டையில்

19

## இலங்கையும் இந்தியாவும் நில ரீதியாக இணைப்பு!

### சாத்திய ஆய்வு விரைவில் ஆரம்பம்

புதுடில்லி, ஜூலை 23

“இலங்கை மற்றும் இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி மற்றும் செழுமையை ஊக்குவிப்பதற்காக திருகோணமலை மற்றும் கொழும்பு துறைமுகங்களுக்கான தரை மார்க்கமான பிரவேசத்தை விரிவாக்கும் வகையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நிலத் தொடர்பை உருவாக்குதல்

19

## சுகாதார அமைச்சர் பதவியை பெறுவதற்காக கடும் போட்டி!

கொழும்பு, ஜூலை 23

விரைவில் சுகாதார அமைச்சு மாற்றம் செய்யப்பட வாய்ப்புள்ளதாக அரசியல் வட்டாரத்தில் தகவல்கள் பரவி வருவதை அடுத்து சுகாதார அமைச்சு பதவியை பெற்றுக்கொள்வதில் அரசியல் போட்டி ஏற்பட்டுள்ள தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

19

## ஜனாதிபதித் தேர்தலில் ரணில், டலஸ் போட்டி!

கொழும்பு, ஜூலை 23

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார்கள் என அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

வத்தளையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு

19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

நேற்றைய இந்தப் பத்தியில் இனமொன்றின் குரல் என்ற பெயரில் முகநூலில் ஒருவர் எழுதியிருந்த குறிப்பு பற்றி குறிப்பிட்டிருந்தேன்.

அதனைப்பற்றி நினைக்கின்றபோது சில வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவம் ஒன்றுதான் ஞாபகத்துக்கு வருகின்றது.

எனக்கு தெரிந்த நண்பர் ஒருவர் நீரிழிவு நோயாளி. அவரது வலது கால் பெருவிரலில் ஒரு காயம் ஏற்பட்டுவிட்டது. நீரிழிவு நோயளிகளுக்கு காயம் ஏற்பட்டுவிட்டால் அந்த புண் மாறுவதற்கு நீண்ட காலம் எடுக்கும். அது உரியமுறையில் கவனிக்கப்படாமல் விட்டுவிட்டால் அந்த புண் பெரிதாகி பின்னர் விரலையோ, ஏன் காலையோ வெட்டி எடுக்க வேண்டி ஏற்பட்டுவிடும்.

கொழும்பில் அரச வைத்தியசாலை ஒன்றில் அவர் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த போது அவரது மகனும் அவருடன் தங்கியிருந்து அவரைக் கவனித்து வந்தார். பல நாட்களாகியும் அந்த புண் மாறுவதாக தெரியவில்லை. பல நாட்கள் வைத்தியசாலையில் இருந்த அவருக்கு சிகிச்சையளித்துவந்த டாக்டர், ஒருநாள் அவரது காலை வெட்டியே ஆகவேண்டும் என்று கூறிவிட்டார்.

அவரது மகன் எனக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு டாக்டர் தெரிவித்த தகவலை கூறி எனது ஆலோசனையைக் கேட்டான். நானும் எனக்கு தெரிந்த ஒரு டாக்டரிடம் கேட்டு அவர் ஆலோசனையின் பெயரில் கொழும்பிலுள்ள பிரபல தனியார் வைத்தியசாலை ஒன்றில் சேர்த்து அவருக்கு சிகிச்சையளிக்கத் தொடங்கி சில நாட்கள்தான் இருக்கும். ஒருநாள் நண்பரை பார்ப்பதற்காக அந்த தனியார் வைத்தியசாலைக்கு சென்றிருந்த போது, அவர் நல்ல தெம்பாக இருந்தார். அப்போது அவர் அருகே இருந்த மகன் என்னிடம் கேட்டான்,

"அங்கிள், அரச ஆஸ்பத்திரியில் வேலைசெய்கின்ற டாக்டர்களும், இங்கே வேலைசெய்கின்ற டாக்டர்களும் வேறவேற இடத்திலையா படிச்சவை?" என்று.

அவன் ஏன் அப்படிக் கேட்டான் என்பதை வாசகர்கள் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நினைக்கின்றேன். அதற்காக அரச ஆஸ்பத்திரிகளில் பணியாற்றுகின்ற டாக்டர்கள் எல்லோருமே அப்படி என்று யாரும் சொல்லப்போவதில்லை. அவன் சந்தித்த டாக்டர் அப்படி இருந்திருக்கவேண்டும்.

தனியார் ஆஸ்பத்திரிகளுக்கே செல்லாமல் தமது சேவையை அர்ப்பணிப்புடன் வழங்கும் ஏராளமான டாக்டர்களை நாம் சந்தித்திருக்கின்றோம்.

அதுவல்ல, இன்று இங்கே செல்ல வருவது.

வழக்கு ஒன்றில் குற்றவாளிக்காகவும் வழக்காளிக்காவும் ஆஜராகின்ற சட்டத்தரணிகள் எல்லோருமே ஒரே சட்டத்தைத் தான் படித்தவர்கள். ஆனால், ஒருவர் சரி என்று வாதிடுவதை மற்றவர் பிழை என்று வாதிடுவது அவர்களுக்கு பழக்கமானது.

அதுதானோ என்னவொ, கலாநிதி குருபரன் மாகாண சபை பற்றி எதிர்மறையாக கருத்து சொல்லியிருக்கிறார். அவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சட்டபீட தலைவராக இருந்தவர். அவர் அந்தப் பதவியில் இருந்து திடீரென்று விலகியமை ஏன் என்பதை தெரிந்தவர்கள் சிலர்தான். அதுபற்றி எழுதுவதென்றால் அதற்கு தனியான பத்தி ஒன்றே தேவைப்படும். அதுபற்றி அவசியம் வந்தால் பிறிதொரு நாளில் பார்ப்போம்.

ஆனால், அவர் பதவி விலகிய பின்னர் அந்தப் பதவியில் இருப்பவர் கோசலை மதன் அவர்கள். அவர் அண்மையில் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்ற பதின்மூன்றாவது திருத்தம் பற்றிய கூட்டம் ஒன்றில் தெரிவித்தது:

"பதின்மூன்றை தமிழ் மக்கள் இன்றைய நிலையில் கைவிடக் கூடாது" என்று.

அவர் தெரிவித்த கருத்துக்களை டான் ரீவியின் முகநூல் பக்கத்தில் உள்ள காணொலியை முழுமையாக கேட்ட பின்னர் மூத்த ஊடகவியலாளர் வீ. தனபாலசிங்கம் அவர்கள், அந்த பேச்சை அப்படியே ஈழநாடுவில் பிரசுரியுங்கள் என்று கேட்டிருந்தார்.

முதலில் குருபரன் போன்றவர்கள் அதனைக் கேட்கவேண்டும்.

அண்மையில், இலங்கையின் புகழ்பெற்ற சட்டவாளரான றொமேஸ் டி சில்வா ஒரு சிங்கள தொலைக்கட்சியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் மாகாண சபைகள் பற்றி பேசிய கருத்துக்கள் கவனிக்கப்பட வேண்டியவை.

பதின்மூன்றை முழுமையாக இல்லாமல் செய்யவேண்டும் என்ற கருத்துள்ளவர்களில் அவரும் ஒருவர். அவர் அந்த நிகழ்ச்சியில் சொன்னார், மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் கொடுத்தால், மத்திய பொலிஸார் காகம் கலைக்கக் கூட முடியாது போய்விடும் என்று.

ஆனால், நமது குருபரனோ, மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கினாலும் மத்திய பொலிஸார்தான் அதனால் இன்னும் பலம் பெறுவார்கள். மாகாண பொலிஸார் எந்த அதிகாரமும் இல்லாமல் இருப்பார்கள் என்று.

றொமேஸ் டி சில்வா, மிகக் குறைந்த வயதில் ஜனாதிபதி சட்டத்தரணி யானவர் என்ற பெருமைக்குரியவர். கோட்டாபய ஜனாதிபதியாக இருந்த போது புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்காக இவர் தலைமையிலேயே குழு ஒன்றையும் நியமித்திருந்தார். அவர் சொல்வது தவறு என்கிறார் நமது குருபரன்.

எது எப்படியோ, இருக்கின்ற மாகாண சபையை காப்பாற்றாமல் விட்டுவிட்டால், சமஷ்டி என்ன தமிழீழம் கிடைத்தாலும் அதனை அனுபவிக்க தமிழர்கள் வடக்கு மாகாணத்திலும் பெரும்பான்மையுடன் இருக்க மாட்டார்கள் என்ற யதார்த்தத்தை புரிந்துகொண்டால் சரி.

- ஊர்க்குருவி.

# அதிகாரிகளின் கருத்து சுதந்திரத்துக்கு கட்டுப்பாடு விதித்த சுகாதார அமைச்சு

கொழும்பு, ஜூலை 23

சுகாதார சேவைகள் தொடர்பில் ஊடகங்களுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ தவறான தகவல்களை வழங்குவதை கட்டுப்படுத்தும் விசேட அறிவிப்பை சுகாதார அமைச்சின் செயலாளர் அசேல குணவர்தன, வெளியிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் அரசாங்க அதிகாரிகள் ஊடகங்களுக்கு வழங்கிய சில தகவல்கள் பிரச்னைக்குரிய சூழ்நிலைகளுக்கு வழிவகுத்ததாக செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரச்னைக்கு உடனடி தீர்வு காணவேண்டும் என்றும், இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படாமல் தடுக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சுக்கு உட்பட நிறுவனங்கள், திணைக்களங்களின் சுற்றறிக்கையின் இரண்டாவது பிரிவின் XLVII, தொகுதியின் 6 மற்றும் 7ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு இணங்குமாறு அமைச்சின் செயலாளர் அதிகாரிகளுக்கு இந்த சுற்றறிக்கை ஊடாக அறிவித்துள்ளார்.

இந்த விதிமுறைகளில் இருந்து விலகிச் சென்று தெரிவிக்கும் கருத்துகளால் சிக்கல் நிலை ஏற்பட்டால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறித்த அறிவிப்பில் எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜப்பானியத் தொழில் வாய்ப்புகளில் இலங்கை இளைஞர்களுக்கு வாய்ப்பு

கொழும்பு, ஜூலை 23

இலங்கையின் இளைஞர் யுவதிகளை, ஜப்பானில் தொழில்நுட்ப பயிலுநர்களாக இணைத்துக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயுமாறு, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, ஜப்பான் நிறுவனம் ஒன்றிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜப்பானில் தொழில்நுட்ப பயிலுனர்களை ஆட்சேர்ப்பு செய்யும் அமைப்பான ஐ.ஆர்.ஓ நிறுவனத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட விசேட தூதுக்குழுவினர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு விஜயம் செய்து அமைச்சரைச் சந்தித்தபோதே அமைச்சர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

குறித்த கோரிக்கைக்கு, ஜப்பானிய அதிகாரிகள் சாதகமாக பதிலளித்துள்ளதுடன், இலங்கையின் தொழில்நுட்ப திறனையும் பாராட்டி உள்ளனர்.

ஜப்பானின் ஐ.ஆர்.ஓ மற்றும் இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆகியவற்றுக்கு இடையே இலங்கை இளைஞர்களை ஜப்பானில் உள்ள தொழில்நுட்ப பயிற்சியாளர்களாக பணிபுரிய வழிநடத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தம் 2021 டிசெம்பரில், கைச்சாத்திடப்பட்டது.

நேற்று முன் தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் ஏ.ஏ.எம். ஹில்மி, பொது முகாமையாளர் டி.டி.பி.சேனநாயக்க, பிரதிப் பொது முகாமையாளர் செனரத் யாப்பா மற்றும் ஐ.ஆர்.ஓ வேலைத்திட்டத்தின் கீழ் ஜப்பான் செல்லத் தயாராகவுள்ள தொழிலாளர் குழுவினரும் கலந்துகொண்டனர். (அ)

# வவுனியா துப்பாக்கிச் சூடு; சந்தேக நபர் நேற்று கைது!

வவுனியா, ஜூலை 23

வவுனியா - நெடுங்கேணி பொலிஸ் பிரிவில் பட்டிக்குடியிருப்பு கிராமத்தில் ஒருவரை சுட்டுக் கொன்ற சந்தேகநபர் நேற்று காலை கைது செய்யப்பட்டதாக நெடுங்கேணி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை அழகையா மகேஸ்வரன் என்பவரே இடியன் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

விவசாயியான அவர், தனது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது, பக்கத்து தோட்டத்தில் நின்ற ஒருவருடன் ஏற்பட்ட தகராறையடுத்து இந்த கொலை நடந்ததாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரும், 39 வயதான சந்தேக நபரும் முன்னாள் போராளி எனக் கூறப்படுகிறது.

குறித்த சந்தேக நபர் மீது சுமார் 5 வரையான வழக்குகள் உள்ளன.

கடந்த வாரம் சட்டவிரோதமாக இடியன் துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

20ஆம் திகதி வவுனியா நீதிமன்றத்தால் அவருக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்தது.

அன்றைய தினமே தண்டப் பணத்தைச் செலுத்தி விட்டு வந்து, மற்றொரு இடியன் துப்பாக்கியை பெற்று அதன் மூலமே சூடு நடத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது. (அ)

# தாயும்,குழந்தையும் மரணம்; சந்தேக நபர் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை 23

ஹொரணை - அங்குருவாதோட்டை பகுதியில் தாயொருவரும் அவரது 11 மாத குழந்தையும் மரணித்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹொரணை - வரகாகொட பகுதியில் வைத்து அவர் நேற்று காலை கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

சந்தேகநபரை கைதுசெய்ய முற்பட்ட போது அவர் பொலிஸாரை கூரிய ஆயுதத்தால் தாக்கிவிட்டு தன்னைத் தானே காயப்படுத்திக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது அவர் ஹொரணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்டவர், உயிரிழந்த பெண்ணின் கணவரின் மைத்துனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார். (அ)

# இலங்கைக்கு கடத்தப்பட இருந்த பெற்றோல் தமிழகத்தில் பறிமுதல்

சென்னை, ஜூலை 23

தமிழகம் தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 400 லீற்றர் பெற்றோலை வடபாகம் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

தூத்துக்குடி திரேஸ்புரம் கடற்கரையில் வடபாகம் தனிப்படை பொலிஸார் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகு ஒன்றை சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, 9 கொள்கலன்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 400 லீற்றர் பெற்றோல் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், குறித்த பெற்றோலை இலங்கைக்குக் கடத்தத் திட்டமிடப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது. (அ)

# ரணிலின் திட்டத்தை வரவேற்றார் மோடி!

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜூலை 23**

**நடைமுறைச் சாத்தியமான முறையில் மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வரவேற்று இருப்பதுடன் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.**

இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை நேற்றுமுன்தினம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் குறித்த பயணத்தில் இணைந்து கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இந்திய பிரதமரினால் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் தொடர்பாக தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இலங்கையின் அரசியல் சூழலை நன்கு புரிந்து வைத்துள்ள இந்தியப் பிரதமர், தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தாத வகையில் அரசியலமைப்பின் 13 ஆம் திருத்தச் சட்டமான மாகாணசபை முறைமையை அமுல்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்திருக்கும் திட்டத்தில் காணப்படும் நியாயத்தினை ஏற்றுக் கொண்டதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி செல்வதன் மூலமே தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க முடியும் என்று வலியுறுத்தி வருகின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்த 3 கட்டங்களாக மாகாண சபை முறையை அமுல்ப்படுத்துவது சாத்தியமான வழிமுறை எனவும் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாட்டுக்கு அச்சுறுத்தலாக எதையும் செய்யமாட்டோம்

## கூறுகிறார் அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, ஜூலை 23

நாட்டுக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய எதையும் ஜனாதிபதியோ அல்லது அரசாங்கமோ ஒருபோதும் செய்யமாட்டார்கள் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் நெருங்கிய மற்றும் நீண்ட கால நட்பு நாடான இந்தியாவுடன் புரிந்துணர்வு உறவைக் கட்டியெழுப்புவது இரு நாடுகளுக்கும் அதே போன்று பிராந்தியத்திற்கும் மிகவும் நல்லதொரு நிலையாகும் என்று நாங்கள் நம்புகிறோம்.

அடுத்த இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களில் உலகின் மொத்த வளர்ச்சியில் 2/3 ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் ஏற்படும் என்பது இன்று அனைவரும் ஏற்றுக்கொள்ளும் விடயம்.

மேலும் இந்தியாவும் சீனாவும் அதில் முன்னிலை வகிக்கும் என்பது எவ்வித விவாதமும் இன்றி சர்வதேசம் ஏற்றுக் கொண்டுள்ள உண்மையாகும்.

எனவே, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள இந்த பாரிய அபிவிருத்தி வாய்ப்புகளை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாகும்.

ஐரோப்பிய ஒன்றியத்தை உற்றுநோக்கினால், அந்நாடுகள் இணைந்து செயற்பட்டதன் காரணமாக முழு ஐரோப்பிய பிராந்தியமும் வளர்ச்சியடைந்தது.

மத்திய கிழக்கு நாடுகளைப் பொறுத்தவரையிலும் இதே நிலைதான். சீனாவைப் போலவே, அமெரிக்கப் பிராந்தியமும் அதே முறையில் அபிவிருத்தியடைந்தது. இந்த அபிவிருத்தி வாய்ப்புகளைப் பயன்படுத்தி முன்னேறுவதே எமது எதிர்பார்ப்பாகும்.

இந்து சமுத்திர பிராந்தியம் முழுவதையும் பாதுகாப்பான வலயமாக எவ்வாறு பராமரிப்பது மற்றும் பரஸ்பர பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இல்லாத விடயங்களை மேற்கொள்வதற்கு அர்ப்பணிப்புடன் கூட்டாகச் செயல்படுவது குறித்தும் இரு தரப்பும் இணைக்கப்பாட்டுடன் கலந்துரையாடப்பட்டது - என்றார். (அ)

# புதிய சுற்றுலா தலங்களாக 24 கரையோரப் பகுதிகள்!

கொழும்பு, ஜூலை 23

இலங்கையில் 24 கரையோரப் பகுதிகள் சுற்றுலாத் தலங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்துக்கு பங்களிக்கும் வகையில் தற்காலிகமாக இந்த சுற்றுலாத் தலங்களை முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் பணிப்புரையின்பேரில் கொழும்பு, எல்ல, நுவரெலியா, கண்டி மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகள் சுற்றுலாப் பயணிகளை கவரும் பகுதிகளாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதற்குரிய நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ கூறினார். (அ)

# வலி. வடக்கு இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் தொடரும் திருட்டுக்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 23

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள பிரதேசங்களில் இராணுவத்தினரால் மீளக் கையளிக்கப்படவுள்ள பகுதிகளுக்குள் திருடர்கள் ஊடுருவி, பொருட்களை திருடி செல்வதாக காணி உரிமையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வலி. வடக்கில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக கடந்த 33 வருடங்களுக்கு மேலாக உள்ள பிரதேசங்களில் சில பகுதிகளை இராணுவத்தினர் காணி உரிமையாளர்களிடம் மீள கையளிக்கும் நோக்குடன், அந்த காணிகளில் இருந்து வெளியேறி வருகின்றனர்.

குறிப்பாக தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட, காங்கேசன்துறை மாங்கொல்லை பகுதி மற்றும் தெல்லிப்பழை தென்மயிலை பகுதி ஆகிய பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர். அவ்வாறு இராணுவத்தினர் வெளியேறி உள்ள போதிலும் அவை உயர் பாதுகாப்பு வலயமாகவே தற்போதும் உள்ளன. குறித்த பகுதிகளை மாவட்ட செயலரிடம் உத்தியோகபூர்வமாக தாம் கையளித்த பின்னரே காணி உரிமையாளர் காணிக்குள் பிரவேசிக்க முடியும் என இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

அதனால், காணி உரிமையாளர்கள் உயர்பாதுகாப்பு வலய முட்கம்பி வேலிக்கு வெளியே நின்றே விடுவிக்கப்படவுள்ள காணிகளை பார்க்க முடிகிறது.



இந்நிலையில் தமது காணிக்குள் வெளியாட்கள் சிலர் நடமாடுவது தொடர்பில் அறிந்து காணிக்குச் சென்றபோது, உயர் பாதுகாப்பு வலய வேலிக்கு உள்ளே வாகனங்களுடன் நடமாடும் திருடர்கள் காணிக்குள் திருட்டுக்களில் ஈடுபடுவதனை அவதானித்துள்ளனர்.

அது தொடர்பில், கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோருக்கு அறிவித்தபோது, குறித்த பகுதிகள் இராணுவ கட்டுப்பாட்டு பகுதி, அப்பகுதிகளை இராணுவத்தினர் உத்தியோகபூர்வமாக கையளித்த பின்னரே தாம் அப்பகுதிக்குள் செல்ல முடியும். அதுவரையில் அவை உயர் பாதுகாப்பு வலயமே என தெரிவித்துள்ளனர்.

அது தொடர்பில் இராணுவத்தினரிடம் முறையிட தாம் அஞ்சுவதாகவும், உயர் பாதுகாப்பு வலயத்தினுள் வாகனங்களுடன் சென்று பொருட்களை களவாடுகிறார்கள் என்றால், நிச்சயம் அவர்களுக்குச் செல்வாக்கு இருக்கும். அது தொடர்பில் இராணுவத்தினரிடம் முறையிடச் சென்றால் தமக்கு ஆபத்து ஏற்படலாம் எனவும் காணி உரிமையாளர்கள் அச்சம் தெரிவித்தனர். (அ)

# தும்புத் தொழிற்சாலையில் திடீரென ஏற்பட்ட தீ விபத்து!

வவுனியா, ஜூலை 23

வவுனியா, ஈரப்பெரியகுளத்தில் அமைந்துள்ள தும்புத் தொழிற்சாலையில் திடீர் தீ விபத்து ஏற்பட்டு தொழிற்சாலையின் ஒரு பகுதி தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 5.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் அமைந்துள்ள தும்புத் தொழிற்சாலையின் ஒரு பகுதியில் திடீரென தீ பரம்பல் ஏற்பட்டதை அவதானித்தவர்கள் உடனடியாக பொலிஸாருக்கும், வவுனியா மாநகரசபை தீயணைப்பு பிரிவினருக்கும் தகவல் வழங்கினர்.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்கு சென்ற வவுனியா மாநகர சபை தீயணைப்புப் பிரிவினர் இராணுவத்தினரின் துணையுடன் தீயை கட்டுப்படுத்த கடும் முயற்சிகளை மேற்கொண்டனர்.



எனினும் தும்புத் தொழிற்சாலையின் இரு பகுதிகளில் தீ பரவல் ஏற்பட்டது.

தீ விபத்துக்கான காரணம் குறித்து ஈரப்பெரியகுளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# தடுப்பூசி போட்ட குழந்தைகளுக்கும் அம்மை நோய் தாக்கும் அபாயநிலை

கொழும்பு, ஜூலை 23

தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகளுக்குக்கூட அம்மை நோய் தாக்கும் அபாயம் உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரதி மருத்துவப் பணிப்பாளர் வைத்தியர் ஜி.விஜேசூரிய இதனைத் தெரிவித்தார்.

மருத்துவ நிலைமைகள் அல்லது போசாக்கு குறைபாடுகள் காரணமாக நோய் எதிர்ப்பு சக்தி குறையும் குழந்தைகளுக்கு அம்மை நோய் தாக்கும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டிற்குப் பிறகு, அம்மை நோயை ஒழித்த நாடாக இலங்கை கருதப்படுகிறமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 13ஆவது திருத்தம் குறித்து ஆராய சகல கட்சித் தலைவர்கள் கூட்டம்

## அமைச்சர் ஜீவன் தகவல்



கொழும்பு, ஜூலை 23

**இந்தியப் பிரதமரால் வலியுறுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக அனைத்துக் கட்சித் தலைவர்களுடனும் விரிவாகக் கலந்துரையாடப்படும் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.**

ஜனாதிபதி குழாமினர் இந்தியாவுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பியிருந்தனர்.

இதன்போது விமான நிலையத்தில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தினை கூட்டுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். இதன்போது இந்தியப் பிரதமாரால் வலியுறுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக அனைத்துக் கட்சித் தலைவர்களுடனும் விரிவாகக் கலந்துரையாடப்படும்.

அதன்பின்னர் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான விடயங்களை முன்னெடுத்துச் செல்வது குறித்து தீர்மானிக்கப்படும்.

அதேபோல் பல முக்கிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. குறிப்பாக திருகோணமலையை பொருளாதார ரீதியில் வலுப்படுத்தும் செயற்திட்டங்களை முன்னெடுப்பது மற்றும் வலுசக்தி திட்டங்கள் ஆகியவற்றிற்கு இந்தியா தனது முழுமையான பங்களிப்பை வழங்கியிருக்கின்றது.

எனவே எதிர்காலத்தில் இந்தியாவுடன் இணைந்து பல்வேறு துறைகளில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு திட்டமிட்டுள்ளோம். எமது இந்தியப் பயணம் வெற்றியளித்துள்ளது.

குறிப்பாக மலையக சமூகம் 200 வருடங்களைக் கடந்து பயணித்துக் கொண்டிருக்கின்றது. எமது இந்தியப் பயணத்தின்போது 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் விசேடமாக நாட்டினது பொருளாதார நெருக்கடி மற்றும் மலையக மக்களது வாழ்வாதாரம் உள்ளிட்ட பல்வேறுபட்ட விடயங்கள் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

அதனடிப்படையில் கிட்டத்தட்ட மூவாயிரம் மில்லியன் ரூபாவினை மலையகத்தினது வீட்டுத்திட்டம் மற்றும் கல்வி உள்ளிட்ட பல்வேறு வாழ்வாதாரப் பிரச்னைகளுக்காக ஒதுக்குவதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

விசேடமாக மலையகத்தின் கல்வி மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளுக்காக இந்த நிதி பயன்படுத்துவதற்கு நாம் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்-என்றார். (அ)



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் பல இலட்சம் ரூபா உதவிகள்

வடமராட்சி, ஜூலை. 22

வடமராட்சி செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தால் இவ்வாரம் பல இலட்சம் ரூபா உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 19 ஆம் திகதி திருகோணமலை மாவட்டம் - செல்வநாயகபுரம் பிரதேசத்தில் உள்ள உதயபுரி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு முத்துக் குமாரசுவாமி அறநெறிப் பாடசாலை கட்டட பணிக்காக ஏழாவது கட்டமாக ரூபா 100,000 நிதியும், திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்தில் உள்ள திருக்கரசை மாநகரம், பெரும்பான்மை இனத்தவரால் கையகப்படுத்தும் நிலையில் உள்ள கங்குவேலி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் புனரமைப்பிற்காக ரூபா 150,000 நிதியும்,

முல்லைத்தீவு மாவட்டம் - நெடுங்கேணி, சேனைப்பிலவு கிராமத்தில் அமைந்துள்ள உமையவன் அறநெறிப் பாடசாலையின் 154 மாணவர்களுக்கு 116,000 ரூபா பெறுமதியான சீருடைத் துணிகளும் வழங்கப்பட்டதுடன் மாணவர்களுக்கான தையல் கூலியாக ரூபா 32,000 நிதியும் வழக்கப்பட்டது.

மேலும் முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள முத்துஐயன்கட்டு, கனகரத்தினபுரம் கிராமத்தில் அமைந்துள்ள நம்பிக்கை விநாயகர் ஆலயத்தின் கட்டட பணிக்காக ரூபா 150,000 நிதியும் கையளிக்கப்பட்டது.

மலையகப் பிராந்தியம் - இங்கிரியகல பிரதேசத்தில் வசிக்கின்ற ஊடகவியலாளரின் கோரிக்கைக்கு அமைவாக மருத்துவ தேவைக்காக ரூபா 50,000 நிதி அவரது வங்கி கணக்கில் வைப்பிலிடப்பட்டது.

இதேவேளை நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை துணவி அ.மி.த.க பாடசாலை முதல்வரின் கோரிக்கைக்கு அமைவாக 25,000 ரூபா பெறுமதியான எழுதுபொருட்கள் வழங்கப்பட்டன.

குறித்த உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கௌரவ கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாக வழங்கினார். (அ-02)

# முதல் காலாண்டில் முதலீட்டுச் சபைக்கு 211 மில்லியன் அமெ. டொலர் முதலீடுகள்!

கொழும்பு, ஜூலை 23

இவ்வாண்டின் முதல் காலாண்டில் இலங்கை முதலீட்டுச் சபைக்கு 211 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகள் கிடைத்துள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் முதலீடு செய்வதற்கு இடையூறாக காணப்படும் சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள 7 பேர் கொண்ட குழுவின் ஊடாக முதலீட்டாளர்களின் பிரச்னைகளுக்கு தீர்வு வழங்கப்படும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக இடைநிறுத்தப்பட்ட 73 முதலீட்டுத் திட்டங்களில் 70 முதலீட்டுத் திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# போதைப்பொருளுடன் ஒருவர் துன்னாலையில் வைத்து கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 23

துன்னாலை பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

உடுப்பிட்டி வடக்கு கம்பர் மலை பகுதியைச் சேர்ந்த 43 வயதானவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைதானவரிடமிருந்து ஒரு கிராம் 960 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டது.

விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட குறித்த நபர் நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேக நபரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ-02)

# இலங்கையில் மூன்று வருடங்களில் வீதி விபத்துக்களில் 7,172 பேர் பலி!

கொழும்பு, ஜூலை 23

இலங்கையில் கடந்த மூன்று வருடங்களில் (2020, 2021 மற்றும் 2022) வீதி விபத்துக்களில் 7 ஆயிரத்து 172 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மூன்று ஆண்டுகளில் 67 ஆயிரத்து 687 வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு வீதி விபத்துக்களில் 2 ஆயிரத்து 515 பேரும், 2021 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 513 பேரும், 2020 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 144 பேரும் உயிரிழந்துள்ளனர். (அ)

# பொலிஸ் அதிகாரிகள் போல் நடித்து கொள்ளையில் ஈடுபட்ட 10 பேர் கைது

கொழும்பு, ஜூலை 23

பொலிஸ் அதிகாரிகளைப் போல் செயற்பட்டு பல்வேறு பகுதிகளில் பணம், சொத்துகளைக் கொள்ளையிட்டமை தொடர்பில் 10 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மில்லனிய, கஹதுடுவ, அங்குருவாதொட்ட, பாதுக்க, கொஸ்கம, இங்கிரிய, கிரிந்திவெல, பண்டாரகம பகுதிகளில் பணமும் சொத்துகளும் கொள்ளையிடப்பட்டமை தொடர்பில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனங்கள் சிலவற்றை வாளால் சேதப்படுத்திய சம்பவத்துடனும் இவர்கள் தொடர்புபட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த சம்பவங்களின் பிரதான சந்தேகநபர் கடந்த 18 ஆம் திகதி ஹொரணை - பொக்குனுவிட்ட சந்தியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை ஹொரணை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி, தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கான அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய, ஏனைய 9 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொல்கஸ்ஓவிட்ட, பாதுக்க, ஹொரணை, ஹல்தோட்ட, கிருலப்பனை பகுதிகளை சேர்ந்த 20 முதல் 48 வயதிற்கு இடைப்பட்ட சந்தேகநபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்களால் கொள்ளையிடப்பட்ட இரண்டு முச்சக்கர வண்டிகள், 6 மோட்டார் சைக்கிள்கள், வெவ்வேறு எடை கொண்ட 3 தங்கக் கட்டிகள், பொலிஸ் என குறிப்பிடப்பட்ட ரி-சேர்ட் மற்றும் ஜக்கெற் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் ஒருவரிடமிருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரணை செய்யவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# 'இசைப்புலவர்' சண்முகரத்தினம் நினைவு விழா இன்று நல்லூரில்

யாழ்ப்பாணம், ஜூலை 23

ஈழத்தின் பிரபல கர்நாடக இசைக்கலைஞர் ராக விளங்கிய 'இசைப்புலவர்' என். சண்முகரத்தினத்தின் நினைவு விழா இன்று மாலை 3 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறுகிறது.



இந்திய கலைஞர்களுடன் இலங்கை கலைஞர்களும் பங்குபற்றும் பரதநாட்டியம், வாய்ப் பாட்டு, பரத நாட்டிய நிகழ்ச்சிகள் விழாவில் நடைபெறுகின்றன.

கர்நாடக இசை விற்பன்னர்களான முசிரி சுப்பிரமணிய பிள்ளை, மகாராஜபுரம் விஸ்வநாதையர், ரைகர் வரதாச்சாரியார், திருப்பாம் புரம் சுவாமிநாத பிள்ளை முதலானவர்களிடம் இசைபயின்ற இசைப் புலவர் சண்முகரத்தினம், திருச்சி வானொலியில் தொடர்ந்து பல காலம் பாடிய ஈழத்துக் கலைஞர் என்ற பெருமைக்குரியவர். 'வெண்கல குரலி'லான இவரது கச்சேரிகள் வானொலிகளிலும் இசை அரங்குகள், கோவில் திருவிழாக்கள், திருமண வைபவங்களிலும் ஒரு காலத்தில் பெரும் பிரபல்யமும் மதிப்பும் பெற்றிருந்தன.

உடுவிலில் 1915இல் பிறந்த இவர், 1987இல் மறைந்தார். பிரபல பாடகரான சண்முகராகவன், மிருதங்க வித்வான் பிரணவநாதன் ஆகியோர் இவரின் புதல்வர்கள். (அ-08)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
23.07.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆடி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்தியாவின் நிலைப்பாடு

இந்தியாவின் தலையீட்டைக் கோரி நான்கு கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. தமிழ்த் தேசியக் கட்சிகள் மத்தியிலிருந்து மூன்று கடிதங்களும், சிவில் சமூகத்திடமிருந்து ஒரு கடிதமும் அனுப்பப்பட்டிருந்தது. கட்சிகளை பொறுத்தவரையில், ஒப்பீட்டடிப்படையில், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியும் இணைந்து அனுப்பிய கடிதத்தில், 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயம் மற்றும் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தும் விடயம் வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஏனைய கட்சிகளான, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (முன்னணி) மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சி ஆகியவை, இந்தியா சமஷ்டியை வலியுறுத்தவேண்டுமென்று, கோரியிருந்தன. ஆனால் சிவில் சமூகத்தின் கடிதம் ஒன்றுதான், மிகவும் தெளிவாகவும், இந்தியாவின் அயலுறவுக் கொள்கை தொடர்பான புரிதலுடன் முன்வைக்கப்பட்டிருந்தது.

சிவில் சமூகம் சுட்டிக்காட்டியவாறு, இந்தியா அதன் நிலைப்பாட்டை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியிருக்கின்றது. அதாவது, 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது மற்றும் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தும் கடப்பாட்டை இலங்கை நிறைவேற்றுமென்று தாம் எதிர்பார்ப்பதாக, இந்திய பிரதமர், நரேந்திர மோடி தெரிவித்திருக்கின்றார். இந்தியாவின் இந்த நிலைப்பாடு ஆச்சரியமானதல்ல. இது – இந்தியாவின் கொள்கை நிலைப்பாடாகும். ஆனால் இதனை விளங்கிக்கொண்டு செயலாற்றுவதில்தான் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் என்போர் தொடர்ந்தும் பின்நிற்கின்றனர். ஒரு நாட்டின் அழுத்தங்களை கோரும்போது, அந்த நாட்டின், அயலுறவுக் கொள்கை தொடர்பான தெளிவு இருக்கவேண்டியது கட்டாயமானது. ஆனால் அனுபவமுள்ள தலைவரென்று கருதப்படும் இரா.சம்பந்தன், தொடர்ந்தும் ஏன் தவறிழைத்துக் கொண்டிருக்கின்றார் என்பதைத்தான் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றது.

இந்தியாவின் தலையீட்டைக் கோரிய சிவில் சமூக பிரதிநிதிகளிடம் இருக்கின்ற தெளிவு, ஏன் கட்சிகளிடம் இல்லாமலிருக்கின்றது? அல்லது, தமிழ் மக்களுக்கு எந்தவொரு அரசியல் தீர்வும் கிடைத்துவிடக்கூடாதென்பதில் கட்சிகளின் தலைவர்கள் என்போர் உறுதியாக இருக்கின்றனரா?

இந்திய பிரதமரின் தெளிவான செய்தி ஒரு விடயத்தை தெளிவுபடுத்துகின்றது. அதாவது, இந்தியாவை நோக்கி சமஷ்டியை வலியுறுத்தியவர்கள், இந்தியாவுக்கு வரலாறு போதிக்க முற்பட்ட சம்பந்தன் ஆகியோரது, வேண்டுகோள்கள் புதுடில்லியால் கண்டுகொள்ளப்படவில்லை. உண்மையில் அவைகளை ஒரு பொருட்டாகக்கூட புதுடில்லி கருத்தில் கொள்ளவில்லை. உண்மையில், இந்தியாவிடம் சமஷ்டியை கோரி, கடிதங்கள் எழுதுவதை இந்தியா ஒருபோதும் வரவேற்காது-மாறாக, தங்களுக்கு தேவையற்ற வகையில் இராஜதந்திரச் சங்கடங்களை ஏற்படுத்துவதாகவே அவர்கள் நோக்குவார்கள்.

ஏனெனில், ஒரு நாடு, அதன் நிலைப்பாட்டை முன்வைத்த பின்னர், அதற்கு மாறான கோரிக்கைகளுடன் செல்வதானது, அந்த நாட்டின் அணுகுமுறைகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையே சுட்டிக்காட்டும். அவர்கள் வலியுறுத்தும் ஒன்றின் மூலம் சென்று, அதிலிருந்து, முன்னோக்கிச் செல்ல முற்பட்டால் – அது சரியானதாகும். இதுவரை இந்தியாவை அணுகியவர்களில், அண்மையில் முன்னெடுக்கப்பட்ட சிவில் சமூக முன்னெடுப்பு ஒன்றுதான், இந்தியாவின் அயலுறவுக் கொள்கையை புரிந்து கொண்டு, முன்னெடுக்கப்பட்ட ஒரேயொரு நகர்வாகும். அந்த வகையில் சிவில் சமூகத்தின் தலையீடு அதன் இலக்கை நிறைவு செய்திருக்கின்றது. இந்தியாவின் நிலைப்பாடு மிகவும் தெளிவானது. இனியாவது, இதனை புரிந்துகொண்டு, செயற்படுத்தற்கான முயற்சிகளை தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைமைகள் மேற்கொள்ள வேண்டும்.

# பாராளுமன்றின் அனுமதி பெறப்பட்ட பின்பே இந்தியாவுடனான ஒப்பந்தங்கள் நடைமுறை!

## அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 23
பாராளுமன்றம் அனுமதி வழங்கிய பின்னரே இந்தியாவுடனான ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் இந்திய விஜயம் தொடர்பிலும், விஜயத்தின் போது கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பிலும் வெளிவிவகார அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

அரசாங்கங்களுக்கிடையில் மாத்திரமன்றி, தனியார் துறையினருக்கிடையிலும் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான பின்னணியை உருவாக்குவது தொடர்பில் இந்தியாவுடன் கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் அலி சப்ரி கூறினார்.

வடக்கில் மீனவர்களால் மேற்கொள்ளப்படும் இழுவைமடி மீன்பிடியை நிறுத்துவது தொடர்பிலும், இலங்கை மீனவர்களுக்கு அரபிக் கடலுக்குச் செல்வதற்கான அனுமதியை வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

பரஸ்பர பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத விடயங்களை மேற்கொள்வது தொடர்பில் இருதரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்பட இணங்கியுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# போதைப்பொருள் சோதனை; 7 மாதங்களில் 78,169 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 23
நாடளாவிய ரீதியாக, இந்த ஆண்டு ஆரம்பம் முதல் கடந்த 15ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சோதனை நடவடிக்கைகளின் போது 78 ஆயிரத்து 169 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, 32 ஆயிரத்து 334 சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 389 கிலோ 721 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 32 ஆயிரத்து 361 பேர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட 34 ஆயிரத்து 709 சோதனை நடவடிக்கைகளில் 5 ஆயிரத்து 654 கிலோ கிராம் கஞ்சாவுடன், 34 ஆயிரத்து 486 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம் ஹொக்கெய்ன், ஐஸ் போதைப் பொருள் மற்றும் ஏனைய போதைப்பொருட்களுடன் 11 ஆயிரத்து 322 பேர் குறித்த காலப்பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# இந்த மாதம் முதல் 20 நாட்களில் 90 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள்!

கொழும்பு, ஜூலை 23
இந்த மாதத்தின் முதல் 20 நாட்களில் சுமார் 90 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில், 15 ஆயிரத்து 330 இந்திய சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அத்துடன் ஐக்கிய இராச்சியத்தில் இருந்து 10 ஆயிரத்து 184 சுற்றுலாப் பயணிகளும் சீனாவிலிருந்து 5 ஆயிரத்து 963 சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்துள்ளனர்.

ஜேர்மனியிலிருந்து 5 ஆயிரத்து 141 பேரும், ரஷ்யாவிலிருந்து 4 ஆயிரத்து 561 பேரும் வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# உயர்கல்வி ஆணைக்குழு அமைப்பதற்கு பரிந்துரை


கொழும்பு, ஜூலை 23
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு பதிலாக தேசிய உயர்கல்வி ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் உயர்கல்வி வாய்ப்புகளை இலகுபடுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கான பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு இதற்கான பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

இது தொடர்பான அறிக்கையை அந்த தெரிவுக்குழுவின் தலைவர் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் 1995 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை ஆகியவற்றை மறுசீரமைத்து தேசிய உயர்கல்வி ஆணைக்குழுவை நிறுவுவதற்கு அந்தத் தெரிவுக்குழு பரிந்துரைத்துள்ளது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -87

# இந்திய ஒன்றியத்தில் அங்கமாயுள்ள மணிப்பூரில் என்ன நடக்கிறது?

**கணபதி சர்வானந்தா**

வெடித்து எரிந்துகொண்டிருக்கும் மணிப்பூரின் ஓலம் கேட்காத காதுகள் இந்தியாவில் இல்லை என்று சொல்லுமளவுக்கு கலவர பூமியாக மாறியுள்ளது மணிப்பூர் மாநிலம். சமூகவலைத் தளங்களில் அது பலவிதமாகப் பதிவிடப்படுகிறது.

வரலாற்று நிகழ்வுகளிலும் சரி, சமகால நிகழ்வுகளிலும் சரி, திரிபுகளை உருவாக்கி, மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி, உணர்ச்சிவசப்படுத்தி, அரசியல் ஆதாயம் பெறுவது சர்வ சாதாரண நிகழ்வாகிவிட்ட போது மணிப்பூர் கலவரம் பற்றிய உண்மையான புரிதல் அவசியம் என எண்ணுகிறேன். அண்டைய நாட்டு விவகாரம் எனினும் அதன் உண்மை நிலவரத்தை நாம் அறிந்து வைத்திருப்பது அவசியம், ஏனெனில் அது பெண்களோடு, பெண்களின் மானத்தோடு தொடர்புபட்ட விடயம் மட்டுமல்ல ஒரு இனத்தின் மீது கட்டவிழுத்து விடப்பட்ட அடக்குமுறை சார்ந்தது. இதனை நாமும் அனுபவித்துள்ளோம், அனுபவித்தும் வருகிறோம்.

இந்திய ஒன்றியத்தில் மணிப்பூரின் பரப்பளவு 22,327 சதுர கிலோ மீட்டர் மட்டுமே. அதில் 90% நிலப்பரப்பு மலைக் காடுகள். 10% நிலப்பரப்பு சமவெளிப் பகுதியான நகர்ப்புறம். 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மணிப்பூரில் 28,55,794 மக்கள் உள்ளனர். அதில் 57.2% மக்கள் விஷ்ணுவை மூலக்கடவுளாகக் கொண்ட வைணவ சமயத்தைச் சேர்ந்த மெய்தி இன மக்கள். இந்திய அரசியலமைப்புச் சாசனத்தின்படி இந்துக்கள். மீதமுள்ள 42.8% மக்கள் மலைக் காடுகளில் வாழும் பழங்குடியினர். இவர்களில் நாகா மற்றும் குக்கி இனத்தவர்களும் அடங்குவர். குக்கி இன மக்கள் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுபவர்கள். 90% மலைக்காட்டுப் பகுதியில் குக்கி பழங்குடி இன மக்கள் வாழ்கிறார்கள். 10% நிலப்பரப்பான நகர்ப்புறங்களில் மெய்தி இன மக்கள் வாழ்கி றார்கள். இந்தச் சதவீத விகிதாசாரத்தை மேம்போக்காக செய்தித்தாள்கள் வெளியிடுகின்றன. அதாவது 90% இடத்தை ஆக்கிரமித்துள்ள குக்கி மக்கள் இட ஒதுக்கீட்டை அனுபவிக் கின்றனர் என்றும், 10% இடத்தில் வாழும் மெய்தி மக்களுக்கு இட ஒதுக்கீடு கிடைக்கவில்லை என்றும் செய்தித்தாள்கள் செய்திகளைப் பிரசுரிக்கின்றன.

அதன் விளைவாக 90% நிலத்தை ஆக்கிரமித்துள்ள குக்கி இன மக்கள், வசதி வாய்ந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்கிற தவறான புரிதல் மக்களைச் சென்றடைகிறது. 10% நிலப்பரப்பில் வாழும் மெய்தி இனத்தவர்கள் படிப்பறிவு கொண்டவர்கள். பெரும்பாலும் கல்வியிலும் அரசு வேலை வாய்ப்புகளிலும் முன்னிலையில் இருப்பவர்கள். இவர்கள் விவசாயிகளாகவோ புடவை மற்றும் உணவுப்பொருட்கள் விற்பனை செய்யும் கடைகளின் உரிமையாளர்களாகவோ சமூகத்தில், குக்கி இன மக்களைவிட மேம்பட்ட நிலையில் வாழ்கின்றனர். 90% காட்டுப் பகுதியில் இயற்கையோடு இயைந்து வாழும் குக்கி பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் அந்த மலைக்காடுகளை நம்பியிருக்கிறது. அவர்களின் குடியிருப்பு குடிசைகள்தாம்! காலங்காலமாக கல்வியறிவும் அதிகாரமும் மறுக்கப்பட்ட சிறுபான்மை மக்கள்.

இந்நிலையில் மெய்தி இன மக்கள் தங்களையும் பட்டியல் இனத்தில் சேர்க்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் கோரிக்கை வைத்தனர். ஒடுக்கப்பட்ட பழங்குடி மக்களுக்கு வழங்கப்படுவதைப் போல், இட ஒதுக்கீடு தங்களுக்கும் வேண்டுமென்றனர். அதைக் குக்கி இனத்தவர் எதிர்க்கவே வெடித்தது கலவரம்.

ஏறத்தாழ 80 நாட்களுக்கு மேலாக நடந்து கொண்டிருக்கும் கலவரத்தில் இதுவரை 150க்கும் மேற்பட்டவர்கள் கொலையுண்டிருக்கிறார்கள். பல தேவாலயங்கள் இடிக்கப் பட்டுள்ளன. சாதி மதம் சாராத கட்சி என்று வெளிப்படையாக அறிவித்துக் கொண்டு, தன்னுடைய இந்து மதத்தை மட்டுமே சார்ந்து இயங்கும் 'பாரதிய ஜனதா கட்சி' இந்திய ஒன்றியத்தின் மத்திய அரசையும், மணிப்பூர் மாநில அரசையும் ஒருசேர ஆட்சி செய்வதாலோ என்னவோ இதுவரை இந்து மதத்தைச் சார்ந்த மெய்தி இனத்தவர் நிகழ்த்திக் கொண்டிருக்கும் கலவரத்தை ஒடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தற்போது மணிப்பூரின் இணைய இணைப்பைத் துண்டித்திருக்கிறார்கள். இதுவே கொடுமைமிக்க நடவடிக்கை அல்லவா?

கிட்டத்தட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட மெய்தி இன ஆண்கள், இரண்டு குக்கி இனப்பெண்களை நிர்வாணமாக இழுத்து வரும் காட்சி வலைத்தளங்களில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஆண்களின் கூட்டத்துக்கு நடுவே, ஒருவன் அப்பெண்ணின் முலைகளைப் பிடித்து இழுத்து வரும் காட்சியைக் காணொ ளியில் கண்டு குலை நடுங்கியது. காட்சி ஒளிபரப்பினூடே ஒருவன் அப்பெண்ணின் பிறப்புறுப்பில் கை வைக்கும் காட்சி... மனிதம் நேயம் கொண்டவர்களின் இதயம் துடிப்பதை நிறுத்திக் கொண்டிருக்க வேண்டும்... காட்டு மிராண்டிகளாக மனித இனம்?

ரத்தச் சகதிக்குள் நிகழ்ந்து முடிந்துவிட்ட இந்த வன்புணர்வுச் சம்பவமும் எதிர்கால வரலாற்றிலிருந்து மறைக்கப் படலாம். ஓர் இனத்தை அவமானப்படுத்த அந்த இனத்தின் பெண்களை அசிங்கப்படுத்துவதா? இது போல ஒரு காட்டு மிராண்டித்தனம் இருக்க முடியுமா? இது என்ன மாதிரியான உளவியல்? நிர்வாணமாக்குதலையும் வன்புணர்வு செய்தலையும் எந்த நாட்டின் அரசையலமைப்புச் சாசனம் ஒருவருக்குக் கொடுக்கும் தண்டனையாக வரையறை செய்துள்ளது? அப்படியொரு சாசனம் இருக்குமெனில் அது மலத்திற்குச் சமம்.

காணொளி வெளியாகிவிட்டதால் சம்பவத்தை மறைக்க இயலவில்லை. பல நாட்களாக இது பற்றிப் பேசாத பிரதமர் வாய் திறந்துவிட்டார்."மணிப்பூரின் மகள்களுக்கு அநீதி இழைத்தவர்களை மன்னிக்க மாட்டோம்" என்றொரு அறிக்கை கொடுத்து விட்டார். போதாதா என்ன?

இந்த காணொளி வெளியாகிவிட்டதால், இந்த வழக்கு மட்டும் நிச்சயமாக நீதிமன்றத்துக்குச் செல்லும். மணிப்பூர் விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்க அரசு தவறினால், உச்ச நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கும் என்று கூறியிருக்கிறது.

(இந்திய நாவலாசிரியர் சக்தி மீனாவின் இணையப்பதிவில் இருந்து எடுக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில்...!)

# இந்தவார ராசிபலன் 23.07.2023 - 29.07.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - ஆடி 06
நல்ல நேரம்: 7.30 - 9.00
ராகு காலம் : 9.00 - 10.30
திதி : பஞ்சமி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

நீங்கள் கசப்பான நிகழ்வுகளைப் பற்றி கவலைப்படமாட்டீர்கள். தோல்வியைக் கண்டு துவளாமல் தீவிர முயற்சியின் மூலம் வெற்றியைத் தேடி முன்னேறுவீர்கள். அதேநேரம் பிறருக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் போகலாம். உயரதிகாரிகள் அலுவல் பணி காரணமாக மிகுந்த பரபரப்புடன் காணப்படுவர். எனவே உத்தியோகஸ்தர்கள் தங்கள் கோரிக்கைகளைத் தற்போது வலியுறுத்தாமல் இருப்பது நல்லது.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

எந்த காரியத்தையும் நிதானமாக செய்ய வேண்டிய வாரம் இது. மிகுந்த பொறுமையை கடைப்பிடித்தாலும் இடையில் சிறுசிறு தொல்லைகள் ஏற்படும். தேவையற்ற பயணத்தை தள்ளிவைப்பது நல்லது. தீவிர முயற்சியே முன்னேற்றத்தை தரும். எதிர்பார்க்கும் பண வரவு, சிறிது தாமதமாகும். உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலகத்தில் பணி மாற்றமோ அல்லது பதவி மாற்றமோ உண்டாகும். அதே நேரம் வேலைப்பளு அதிகரிக்கும். சொந்தத் தொழிலில் புதிய நபர்களின் அறிமுகத்தால் தொழில் ரீதியான முன்னேற்றம் உண்டு.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

நண்பர்கள் உங்கள் செயல்களில் ஒத்துழைப்பு தந்து உதவிகரமாக இருக்கும் வாரம் இது. தாய் வழி உறவில் முக்கிய நிகழ்ச்சியில் பங்கு கொண்டு பொருளுதவி செய்யும் நிலை ஏற்படும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பதிவேடுகளை தேவையான சமயத்தில் தேடி எடுக்க முடியாமல், அதிகாரிகளின் கோபப் பார்வைக்கு இலக் காக நேரிடும். பணிச்சுமை அதிகரிக்கும் வேளையில், சக ஊழியர்களிடம் இருந்து உதவி கிடைக்காது. கூட்டுத்தொழிலில் செலவுகள் அதிகமாகி சிரமம் கொடுக்கும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

காரியங்களை தீவிர முயற்சியுடன் திட்டமிட்டு செய்தாலும், திடீர் திருப்பங்களால் பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். பண வரவு இருந்தாலும் வரவுகளை விட செலவுகள் மிகுதியாகும். உத்தியோகஸ்தர்கள் பணிகளில் திருப்பமான சூழ்நிலையைச் சந்திப்பார்கள். அலுவலகத்தில் சிலருக்கு எதிர்பார்த்த பண வரவுகள் கிடைத்து, விடுபட்ட பணிகளைத் தொடருவீர்கள். சொந்தத்தொழிலில் சிறப்பான திருப்பம் கூட்டுத் தொழில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும்

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

முக்கியமான காரியங்களை ஒத்திவைப்பது நல்லது. நீண்ட நாள் எதிர்பார்த்த நண்பரை சந்திக்க நேரும். சில விஷயங்களை மனம் விட்டு பேசுவதால் பழைய பகை மறையும். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு சம்பள உயர்வும், இடமாற்றமும் ஏற்படலாம். பணிகளில் கவனமாக இல்லாவிட்டால் சொந்தத்தொழில் நன்றாக நடைபெறும். பணவரவுகளில் தாமதம் ஏற்பட்டாலும் கைகளுக்கு வந்து சேர்ந்து விடும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

வரவேண்டிய சலுகைகள் தள்ளிப்போகும். அவசியமான வேலையாக இருந்தாலும் கொஞ்சம் தள்ளிப்போடுங்கள். புதிய உறவுகள் தேடிவரும். பகை உணர்ச்சி மாறும். பண வரவுகளால் மகிழ்ச்சி உண்டாகும். உத்தியோகத்தில் மாற்றங்கள் நேரக்கூடும். சிலருக்கு பதவி உயர்வும், இடமாற்றமும் ஏற்படும். மேலதிகாரிகள் அனுகூலமாக இருப்பார்கள். சொந்தத்தொழிலில் ஏற்றமான போக்கு காணப்படும். பண வரவு இருந்தாலும் செலவுகளும் அதிகரிக்கும். கூட்டுத் தொழிலில் முன்னேற்றம் காணப்படும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

நெருங்கியவர்களாக இருந்தாலும் ரகசியங்களை பகிர்ந்து கொள்ள வேண்டாம். உறவுகளுடன் மனக்கசப்பை சந்திக்க நேரிடும். உத்தியோகஸ்தர்கள் பணிகளில் கவனமாக இருப்பதோடு பதிவேடுகளை பாதுகாப்பாக வைத்துக்கொள்வது அவசியம். சக ஊழியர்கள் எதிர்பார்த்த ஒத்துழைப்பு தரமாட்டார்கள். அனைவரிடமும் கனிவாக நடந்து கொள்ளுங்கள்.சொந்தத் தொழிலில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். வாடிக்கையாளர்கள் முழு திருப்தி அடைவர். கூட்டுத்தொழில் சிறப்பாக நடைபெறும். எதிர்பார்க்கும் லாபம் இருக்கும்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

முக்கியமான காரியங்களில் தீவிரமாக செயல்பட்டு வெற்றி பெறுவீர்கள். இருப்பினும் சனிக்கிழமை பகல் 1.30 மணி முதல் திங்கட்கிழமை வரை சந்திராஷ்டமம் உள்ளதால், கொடுக்கல்-வாங்கலில் நிதானமாக முடிவெடுங்கள். உத்தியோகஸ்தர்கள் பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டியதிருக்கும். சில எதிர்பார்ப்புகள் தள்ளிப்போகும். நீண்ட நாள் எதிர்பார்த்த ஒரு நல்ல செய்தி எதிர்பாராமல் தேடிவரும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதை தவிர்க்கவும். சகோதர வழியில் பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமான சிக்கல் தீரும். உத்தியோகஸ்தர்கள் உற்சாகமாக பணிகளில் ஈடுபட்டு, உயர் அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுவர். தள்ளிவைத்த பணியொன்றை உடனே செய்ய நேரிடும். சொந்தத்தொழில் செய்பவர்கள், சுறுசுறுப்பாக பணியாற்றி வாடிக்கையாளரின் பாராட்டு களைப் பெறுவர்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

பயணங்களை தள்ளிவைப்பது நல்லது. எதிர்கால வெற்றிகளுக்காக திட்டமிடுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு, அலுவலகத்தில் எதிர்பார்த்த பணம் வந்து சேரும். திட்டமிட்டு பணியாற்று வதால் உழைப்பின் லாபத்தை அடைவீர்கள். சொந்தத்தொழில் செய்பவர்கள் புதிய வாடிக்கையாளர்களின் பணியினை விரைவாகச் செய்து கொடுக்கும் முயற்சியில் ஈடுபடுவர். சிறுசிறு பிரச்சினைகளும் தோன்றி மறையும்.


## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

செய்யும் காரியங்கள் அனைத்தும் முக்கியமான திருப்புமுனைகளை கொண்டதாக அமையும். செலவுகள் அதிகரித்தாலும் அதற்கேற்ற வரவுகளும் வந்துசேரும். காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருந்து வாழ்க்கையில் முன்னேறுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம், பதவி மாற்றம், சம்பள உயர்வு போன்றவற்றை எதிர்பார்க்கலாம். புதிய வேலைகளில் அதிகக் கவனம் செலுத்த வேண்டியதிருக்கும். சொந்தத்தொழில் லாபகரமாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும்

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

எடுக்கும் முயற்சிகள் பலவற்றில் வெற்றியைக் காண்பீர்கள். எதிர்பார்க்கும் பணவரவுகள் குறிப்பிட்டபடி வந்துசேரும். கடன்களை அடைக்க வாய்ப்பு உண்டாகும். கவனமுடன் இருப்பது அவசியம். உத்தியோகஸ்தர்களின் பணிகளில் மாற்றம் ஏற்படலாம். வேலைகள் முன்பு இருந்ததை விட அதிகரிக்கலாம். அவசியமான பணி ஒன்றினை உயரதிகாரிகளின் விருப்பத்திற்கு இணங்க விரைவாக செய்து முடிக்க நேரலாம். சொந்தத் தொழிலில், பணிகள் விறுவிறுப்பாக நடைபெறும். வாடிக்கையாளர் களின் எண்ணப்படி செய்து கொடுத்த பணி ஒன்றுக்காகப் பாராட்டு பெறுவீர்கள்.

# மணிப்பூர் மௌனவிரதத்தை முடித்தார் மோடி! ‘140 கோடி இந்தியர்களும் தலை குனிகிறோம்’



சென்னை மடல்
-பகவான் சிங்-

அண்மையில் பெங்களூருவில், மோடி எதிர்ப்பு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றுகூடி, ‘இந்திய தேசிய வளர்ச்சிக்கான உள்ளடக்கிய கூட்டணி’ - Indian National Developmental Inclusive Alliance (INDIA) என்ற பெயரில், ஒரு மோடி எதிர்ப்பு அணியை அறிவித்தது குறித்து என் கருத்தைக் கேட்டார் ஒரு நண்பர். என்னைப்பொறுத்தவரை, வரும் 2024 மே மாத மக்களவைத் தேர்தலில் மோடியை வீழ்த்தும் ஒரே நோக்கத்தில் உருவாக்கப்பட்ட ஓர் எதிர்க்கட்சிக் கூட்டணியாகவே மக்கள் இதைப் பார்க்கலாம். ஐனுஐயு, இந்தியாவிற்கு வேறு எதையும் தருவதாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட சூழலில், நாட்டிற்கு எந்த நலனுமின்றி, வெறும் மோடி வெறுப்பை மட்டுமேகொண்டு உருவாக்கப்பட்ட அந்தக் கசப்பை, மக்களும் ஏற்கவேண்டும் என்று எதிர்பார்க்கும் கட்சிகளின் இந்தக் கிச்சடி-கதம்பத்தை விட மோடியையே மக்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்பது என் கருத்து. அனைவரையும் உள்ளடக்கிய அரசியலையும் பொது வாழ்க்கையையும் INDIA அணி முன்வைக்கிறது. மேலும், மோடி மற்றும் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி (என் டி ஏ) அரசில், சிறுபான்மையினர், தலித்துகள், பழங்குடியினர், எதிர்க்கட்சிகள் மட்டுமல்லாமல், நரேந்திர மோடி அரசைப் பாராட்டாத அனைவரும் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதும் அவர்கள் குற்றச்சாட்டு. மோடியை விமர்சிப்பவர்கள், மோடி ஆதரவாளர்களை ‘பக்தர்கள்’ என்று ஏளனமாகக் குறிப்பிடுகிறார்கள்.

பக்தர் என்றால் கடவுளின் பக்தர் என்பதுதான் பொருள். ஆனால், அண்மைக் காலங்களில், மோடி அரசின் அனைத்துக் கொள்கைகளையும் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கும் ஒரு நபரைக் குறிப்பிட, சமூக ஊடகங்களில், ‘குருட்டு பக்தர்’ என்ற சொற்றொடர் குறிப்பிடப்பட்டதையடுத்து, அரசியல் வட்டாரங்களில் இது பிரபலமடைந்துவிட்டது. இப்போது, மோடி எதிர்ப்பு ஊடகங்கள், எதிர்க்கட்சிகள் மற்றும் காவிக்கு எதிரான அறிவு ஜீவிகள் அனைவரும், மோடியையும் அவர் அரசையும் ஆதரிக்கும் எவரையும் ‘பக்தர்’ என்று ஏளனமாகக் கூறுவதை வழக்கமாக்கிக்

கொண்டுள்ளனர். மோடி எதிர்ப்புக் கண்டனங்களை நேரடியாக ஆதரிக்காமல், சுதந்திரமான கருத்துகள் கொண்டவர்கள்கூட இந்த ‘பக்தர்கள்’ கூட்டத்தில் சேர்க்கப்படுகிறார்கள். மோடி ஆதரவு ஊடகங்கள், ‘குதிரை ஊடகங்கள்’ என்று குறிப்பிடப்படுகின்றன. காரணம், இந்தப் பத்திரிகையாளர்களும் அவர்களது முதலாளிகளும் மற்ற விஷயங்களைக் கருத்தில் கொள்ளாமல், கடிவாளம்போட்ட குதிரைகள்போல் சிந்திப்பதாக அவர்கள் மீதான விமர்சனம் எழுகிறது.

நான் இதைப் பலமுறை எனது ‘ஈழநாடு’ கட்டுரைகளில் குறிப்பிட்டிருக்கிறேன், இப்போது மீண்டும் கூறுகிறேன் - நான் மோடி பக்தன் இல்லை. காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் முறைகேடுகளின் முடை நாற்றத்திற்கு மத்தியில், ஓர் இளந்தென்றலாய் அவர் நுழைந்தபோது நான் அந்த மனிதரைப் பாராட்டினேன் என்பது உண்மைதான். மன்மோகன் சிங் தலைமையிலான யூபிஏ அரசின் ‘புகழ்பெற்ற’ 2ஜி ஊழலில் குறிப்பிடப்பட்ட தொகையில் எத்தனை

பூஜ்ஜியங்கள் வரும் என்று செய்தித் தாள்கள் தலைப்புச் செய்திகள் எழுதிய அந்தக் காலத்தை யாராலும் மறக்கமுடியாது. யூபிஏ அமைச்சரவையில் இருந்தவர்கள் அடித்த கொள்ளை மட்டும் விஷயமல்ல. அந்தக் காலகட்டத்தில் நடந்த அரசியல் முறைகேடுகள் - ஆளும் கூட்டணியின் சிறிய, பெரிய அங்கத்தினர்கள், ஜவஹர்லால் நேரு மற்றும் இந்திரா காந்திக்கு அடுத்தபடியாக நீண்ட காலம் ஆட்சியிலிருந்துவந்த, வாயில்லாப் பூச்சியான மன்மோகன் சிங்கை மிரட்டி, அச்சுறுத்தி, தங்கள் சுயலாபத்திற்காக வானளாவிய அதிகாரங்களைப் பெற்றுக் கொழுத்ததையும் மக்கள் மறந்திருக்க முடியாது. இந்திய அரசியல் வரலாற்றின் பக்கங்களைத் திருப்பிப் பார்ப்போம் - 2004ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் ஆட்சியமைக்கும் அளவுக்குத் தனிப்

பெரும்பான்மை கிடைக்காத நிலையில், இடது சாரிகளுடன் இணைந்து காங்கிரஸ் அமைத்த கூட்டணி அரசுதான் மன்மோகன் சிங் அரசு.

இப்போது, நரேந்திர மோடி விஷயத்திற்கு வருவோம் - நான் அவரது பக்தன் இல்லை. ஒரு பக்தனுக்குத் தனது கடவுள் அல்லது குருவின் எந்தக் குறையையும் காணமுடியாது. ஆனால், நான் தற்போது எங்கள் பிரதமரிடம் பல குறைகளைக் காண்கிறேன். கடந்த ஒன்பதாண்டுகளில், இரண்டு முறை ஆட்சிக் காலத்தில், அவர் சிறுபான்மையினரைவிட, இந்துக்களையே அதிகம் நேசித்தார் என்பதை விட, அனைவரையும் சமமாகப் பாவித்து அக்கறை காட்டினார் என்ற பிம்பத்தைக் கட்டமைக்க மேலும் முயன்றிருக்கலாம் என்பது என் எண்ணம். ஒட்டுமொத்தமான சமூக - பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்து, புவிசார் அரசியலில் இந்தியாவை வலுவான இடத்தைப் பெறச் செய்த தலைவராகப் பார்க்கப்பட்டதைவிட, தனது இந்துத்வா கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தவராகவே பார்க்கப்படுகிறார் என்பது என் ஆதங்கம். இவர், ஜனநாயகவாதி இல்லை என்றும் சர்வாதிகாரி என்றும் எழுந்த விமர்சனங்கள் தவறென்று நிரூபிக்கப் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. தனது ‘மனதின் குரலை’ வானொலி வழியாகக் குடிமக்களுடன் பகிர்ந்து, அதைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பியதுடன் நிறுத்திக்கொள்ளாமல், அவ்வப்போது ஊடகங்களைச் சந்தித்திருந்தால் நான் மகிழ்ந்திருப்பேன். இவையனைத்தையும்விட, எனக்கு மிகுந்த மன வருத்தமும்



ஏமாற்றமும் கோபமும் ஏற்பட்டது, மணிப்பூரில் சமவெளிப் பகுதிகளில் வாழும் பெரும்பான்மை மெய்த்தி அநேகமாக இந்துக்கள்) இனத்தினருக்கும், மலைப் பகுதிகளில் வாழும் சிறுபான்மை குகி (பெரும்பான்மை கிறிஸ்தவர்கள்) பழங்குடியினருக்கும் இடையில், கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக நடந்துவரும் கொடும் வன்முறைச் சம்பவங்கள் குறித்த பிரதமரது காதைப் பிளக்கும் மௌனத்தைக் கண்டுதான். மெய்த்தி இனத்தவரும் ஷெட்யூல்டு பழங்குடியினருக்கான ஒதுக்கீட்டுப்

## மோடியை வீழ்த்தும் ஒரே நோக்கில் ‘INDIA’

பலன்களைப் பெறும் வண்ணம் அவர்களுக்கு பழங்குடியின அந்தஸ்து வழங்கும் அரசின் முயற்சியை எதிர்த்து, மே 3ஆம் திகதி குகி இனத்தவர் நடத்திய ‘அமைதிப் பேரணி’யைத் தொடர்ந்து இந்த வன்முறை வெடித்தது. இதைக் கையாள்வதில் அம் மாநில பாஜக முதலமைச்சர் பிரேன் சிங் பெரும் தோல்வி அடைந்துள்ளார். இதற்கு முக்கிய காரணம், மாநிலக் காவல் துறையில் பெரும்பான்மையாக மெய்த்தி இனத்தவர் இருப்பதால், அவர்கள் ஒரு பக்கச்சார்பு நிலை எடுத்து, குகி இனத்தவர் தாக்குதலுக்கு உள்ளானபோது, மௌனமாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்ததாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. முன்னாள் பத்திரிகையாளர் ஒருவர், எனது நெருங்கிய நண்பர். அவர் இப்போது மணிப்பூர் மலைப்பகுதிகளில் வசித்துவருகிறார். மணிப்பூரில் முகாமிட்டிருக்கும் அஸ்ஸாம் ரைபில்ஸ் மத்திய பாதுகாப்புப் படையினர் சுதந்தரமாகச் செயல்பட அனுமதிக்கப்பட்டிருந்தால் வன்முறை சில நாட்களிலேயே கட்டுக்குள் வந்திருக்கும் என்று அவர் கூறுகிறார்.

தற்சமயம், அந்தப் படைகள், தங்கள் முகாம்களுக்குள் இருக்கவே உத்தரவாகியிருப்பதாகவும், மெய்த்தி ஆதிக்கம் நிறைந்த மாநிலக் காவல் துறையிடம்தான் அமைதி மீட்புக்கான பொறுப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படும் நிலையில், மெய்த்தி இனத்தவர் குகி மக்களைத் தாக்கும்போது கண்டும் காணாமல் இருந்ததாகக் குற்றம் சாட்டப்படுகிறது. மேலும், மலைப்பகுதிகளில் போதை மருந்துச் செடிகளை வளர்த்து, அதன் மூலம் வருவாய் ஈட்டிவரும் குகி இனத்தவருக்கு, அண்டை மாநிலமான நாகாலாந்து வழியாக சீனாவிலிருந்து நிதி மற்றும் நவீன ஆயுதங்கள் வழங்கப்படுவதாகவும் எனது மணிப்பூர் நண்பர் கூறுகிறார். இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில், இமய மலையில் அமைந்திருக்கும் ஒரு சிறிய மாநிலத்தில் நடக்கும் விஷயங்களை விரிவாக விளக்கி உங்கள் ஞாயிறு காலையை நான் வீணடிக்க விரும்பவில்லை. உண்மையில், அங்கு பல நாட்களாக நடக்கும் வன்முறையால் நூற்றுக்கணக்கான உயிர்களும், பெருமளவு பொருளும் சேதமடைந்து, கூட்டம் கூட்டமாக மக்கள் புலம் பெயர்வது குறித்து இந்தியாவிலேயே பலருக்கும் கவலை இல்லை. இந்தக் கொடூரங்கள் குறித்த செய்திகளையடுத்து எதிர்க்கட்சிகள் மட்டுமல்லாமல், முக்கியமான உலகத் தலைவர்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் யாவும் குரல் கொடுத்தபின்னரும்கூட, நாட்டின் பிரதமர் இத்தனை நாட்களாக மௌனம் காத்து வந்துள்ளார்.

ஜூலை 20 அன்று நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் தொடங்கிய நிலையில், அவையில் மணிப்பூர் விவகாரம் விவாதிக்கப்படவேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தன்னிடம் கூறியதை அடுத்தே, பிரதமர் தனது மௌனத்தைக் கலைத்தார். அதற்கு முந்தைய நாளில்தான், இரண்டு குகி இனப் பெண்களை ஆயுதமேந்திய மெய்த்தி கூட்டம் ஒன்று, நிர்வாணமாகச் சாலையில் இழுத்துச்சென்ற காணொலி வெளியாகிப் பரவியது. இந்தக் கொடூரச் சம்பவம் மே 4ஆம் திகதி நடந்துள்ளது. மூன்றாவது பெண்மணியும் ஆடைகளைக் களையக் கட்டாயப்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது, ஆனால், அது அந்தக் காணொலியில் இடம்பெறவில்லை. அந்த இரு பெண்களில் ஒருவரை, அவரது 56 வயது தந்தையையும் 19 வயது சகோதரனையும் கொன்ற பின், இந்தக் கூட்டம் பாலியல் வன்புணர்வு செய்ததாகவும் செய்திகள் கூறுகின்றன.

இந்தக் காணொலி வெளியாகி நாட்டையே உலுக்கிய பிறகுதான் பிரதமர் மணிப்பூர் குறித்த தனது மௌன விரதத்தை முடித்துக்கொண்டார். நாடாளுமன்றக் கூட்டத் தொடர் தொடங்கும் நாளில் எழுந்த குரல்களுக்கிடையில், அந்தப் பெண்களுக்கு நேர்ந்த கொடுமைக்காக 140 கோடி இந்தியர்களும் தலைகுனிவதாகவும், குற்றவாளிகளுக்குத் தண்டனை நிச்சயம் பெற்றுத் தரப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். மணிப்பூர் குறித்து இவ்வளவு தாமதமாகக் கருத்து தெரிவித்தது மட்டுமல்லாமல், ஆயிரக்கணக்கான குகி மற்றும் மெய்த்தி இன மக்களின் பெரும் துன்பங்களனைத்தையும், சமூக ஊடகங்களில் வெளியான ஒரு கொடூரச் சம்பவத்தின் வீடியோவிற்குள் அடக்க நினைத்ததும் அவரது மிகப் பெரிய தவறாக நான் பார்க்கிறேன். ஏனென்றால், பரவலான இந்தக் காணொலிக் கொடூரத்தைப்போலவே வேறெத்தனை அராஜகங்கள் நடந்திருக்கின்றனவோ? இவை, இதுவரை வெளிச்சத்துக்கு வராமல் இருக்கலாம். ஆனால், அரசாங்கத்துக்கு இதுபோன்ற கொடூர வன்முறைகள் நடந்தது தெரியாமல் இருந்திருக்குமா? இது மணிப்பூர் மக்களுக்கு மட்டுமல்லாமல், இந்தியா முழுவதற்கும் இழைக்கப்பட்ட அவமானம். இந்தக் காணொலி வெளியானதையடுத்துக் காவல் துறை ‘தானாக முன்வந்து’ (suo motu) நடவடிக்கை எடுத்து ஒருவரைக் கைதுசெய்துள்ளதாக ஜூலை 20 அன்று மணிப்பூர் முதலமைச்சர் பிரேன் சிங் ட்விட்டரில் அறிவித்தார். அந்தக் காணொலியில் காணப்பட்ட ஒரு 32 வயது நபர் காவலில் வைக்கப்பட்டுள்ளார், அந்தக் காணொலி வெளியாகிவிட்ட நிலையிலும், மே 18 அன்று காலையில் உள்ளூர் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யப்பட்டிருக்கும் நிலையிலும், காவல் துறை தானாக முன்வந்து வழக்கை எடுத்ததாக முதல்வர் கூறுவது முட்டாள் தனமாகவும் சிறுபிள்ளைத் தனமாகவும் இருக்கிறது.

தென்னிந்தியாவில் பாஜக வலுவாக இருக்கும் ஒரே மாநிலமான கர்நாடகா தேர்தலில், இரண்டு மாதங்களுக்கு முன்பு, மே மாதத் தொடக்கத்தில், நரேந்திர மோடியும் பாஜகவும் தோல்வி என்னும் பின்னடைவைச் சந்தித்தனர். ஆட்சிக்கு எதிரான பொதுவான மனப்போக்குடன், உட்கட்சிப் பூசலைக் கட்சி மேலிடம் முறையாகக் கையாளத் தவறியதும் அந்தத் தோல்விக்கு முக்கியமான காரணங்கள். வடகிழக்கில் ஒரு மூலையில் இருக்கும் சிறிய மாநிலம் என்பதால் ஊடகங்களில் அதிகம் இடம்பெறாத மணிப்பூர் விவகாரம், இப்போது, தனது நீண்ட மௌனத்தினாலும் இந்த வெடி குண்டு போன்ற காணொலியாலும் அவருக்கு ஒரு சங்கடமாக உருவெடுத்துள்ளது.

2014இல் பாரதப் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்றபோது, அவர் இந்தியாவைப் புதிய உச்சங்களுக்கு இட்டுச் செல்வார் என்ற நம்பிக்கை பிறந்தது. ஆனால், தற்போது நான் மிகக் கவலையுடனும் அச்சத்துடனும் இருக்கிறேன், எனினும், நான் நம்பிக்கையை இழக்கவில்லை. அவரது மூன்றாவது முறை ஆட்சிக்கு ஒரு சவாலாக இந்த ‘INDIA’ என்ற கிச்சடி-கதம்பம் எழும்பும் என்றும் நான் நம்பவில்லை. 13ஆவது சட்ட திருத்த அமுல் குறித்த தமிழர்களின் கோரிக்கையை உங்கள் அதிபர் மறுத்தது குறித்தும், ஜூன் 21, வெள்ளியன்று டில்லியில் அவர் பாரதப் பிரதமர் மோடியைச் சந்தித்தது குறித்தும் எனது கருத்துகளைப் பகிர விரும்பினேன். ஏற்கெனவே உங்கள் நேரத்தையும் மனம் கவர்ந்த ‘ஈழநாடு’ இதழின் இடத்தையும் நான் பிடித்துக் கொண்டுவிட்டேன். அவை குறித்து, அடுத்த ஞாயிறு உரையாடலாம்.

வணக்கம்.

# கறுப்பு ஜூலைக்கு பிறகு


## நான்கு தசாப்தங்கள் கடந்த பிறகும் நழுவிக்கொண்டு போகும் அரசியல் தீர்வு!

இலங்கையில் இனங்களுக்கு இடையிலான உறவுகளைப் பொறுத்தவரை, ஒரு எல்லைக் கோடாக அமைந்த 1983 ஜூலை இனவன்செயல்களுக்கு பிறகு இந்த வாரத்துடன் நான்கு தசாப்தங்கள் உருண்டோடிவிட்டன.

ஒரு வாரத்துக்கு மேலாக தலைவிரித்தாடிய வன்செயல்களின் கொடூரம், அதனால் நேர்ந்த உயிரிழப்புகள், சொத்து அழிவுகளுக்கு அப்பால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட வேதனை அதிர்ச்சியும் உளவியல் தாக்கமும் கணிப்பிடமுடியாதவை.

1983 ஜூலை 22 வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்பாணக் குடாநாட்டில் திருநெல்வேலியில் விடுதலை





புலிகள் நடத்திய கெரில்லாத் தாக்குதலில் 13 இலங்கை இராணுவத்தினர் பலியான சம்பவம் அன்றைய அரசாங்கத்திற்குள் ஆதிக்கம் செலுத்திய சிங்கள இனவாதச் சக்திகள் நாடு பூராவும் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்வதற்கு ஏற்கெனவே திட்டமிட்டுவந்த வன்செயல்களை கட்டவிழ்த்துவிடுவதற்கு வாய்ப்பாக அமைந்தது.

இலங்கை அரசியலில் முன்னரைப் போன்று மீண்டும் எதுவுமே இருக்காது என்பதை நிறுவிய அனர்த்தங்கள் நிறைந்த அந்த மாதத்தை காலஞ்சென்ற பிரபல பத்திரிகையாளர் மேர்வின் டி சில்வா " கறுப்பு ஜூலை " (BLACK JULY ) என்று வர்ணித்தார்.

**அரசாங்கத்தின் மனநிலை**

கறுப்பு ஜூலை வன்செயல்களுக்கு ஒரு வாரம் முன்னதாக லண்டன் ரெலிகிராவ் பத்திரிகைக்கு அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன அளித்த பேட்டியொன்றில் தெரிவித்த கருத்துக்கள் தமிழர்கள் தொடர்பில் அரசாங்கம் எத்தகைய மனநிலையில் இருந்தது என்பதை தெளிவாக வெளிப்படுத்தியது.

"இப்போது நான் யாழ்ப்பாண மக்களின் அபிப்பிராயத்தைப் பற்றி கவலைப்படவில்லை. அவர்களைப் பற்றி அல்லது அவர்களது உயிர்களைப் பற்றி அல்லது எம்மைப் பற்றி அவர்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப் பற்றி இப்போது எங்களால் சிந்திக்கமுடியாது. வடக்கு மீது எந்தளவுக்கு நெருக்குதல்களைப் பிரயோகிக்கின்றோமோ அந்தளவுக்கு சிங்கள மக்கள் மகிழ்ச்சியடைவார்கள்" என்று அவர் சொன்னார்.

ஜெயவர்வர்தனாவின் அந்த கருத்துக்கள் கறுப்பு ஜூலை வன்செயல்கள் யாழ்ப்பாணத்தில் படைவீரர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தினால் சிங்களவர்கள் ஆவேசமடைந்ததால் மாத்திரம் மூண்டதல்ல, இனவாதச் சக்திகள் நீண்ட நாட்களாக தீட்டிவந்த திட்டத்தின் விளைவானது என்பதை அம்பலப்படுத்தியது.

உள்நாட்டுப்போரில் தமிழ் மக்கள் அனுபவித்த அவலங்களும் உயிரிழப்புகளும் சொத்து அழிவுகளும் கறுப்பு ஜூலையில் அவர்கள் அனுபவித்தவற்றை விடவும் விபரிக்கமுடியாத அளவுக்கு அதிகமானவை என்றபோதிலும், அந்த ஜூலையே தமிழர்கள் மத்தியில் ஆயுதப்போராட்ட இயக்கங்கள் பெருகுவதற்கு வழிவகுத்து உள்நாட்டுப்போரை மூளவைத்தது என்பதால் இலங்கையின் அரசியல் வரலாற்றில் அதற்கு பித்தியேகமான ஒரு எதிர்மறைக்குறியீடு இருக்கிறது.

அந்த வன்செயல்களில் நாடுபூராவும் சொல்லொணா அவலங்களைச் சந்தித்து ஆயிரக்கணக்கில் அகதிமுகாம்களில் தஞ்சமடைந்த தமிழ் மக்களுக்கு அனுதாபமாக ஒரு வார்த்தையையேனும் கூறுவதற்கு அரசாங்கத்தின் எந்தவொரு தலைவரும் முன்வரவில்லை.

**வன்செயல்களை நியாயப்படுத்திய ஜனாதிபதி**

வன்செயல்கள் மூண்டு கிட்டத்தட்ட ஒரு வாரத்துக்கு பிறகு ஜூலை 28 வியாழக்கிழமை தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி ஜெயவர்தன அந்த வன்செயல்களை தமிழ் அரசியல்வாதிகளின் நாட்டுப் பிரிவினைக் கோரிக்கைக்கு எதிரான சிங்கள மக்களின் இயல்பான பிரதிபலிப்பு என்று கூறி நியாயப்படுத்தி னாரே தவிர பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று கிஞ்சித்தேனும் நினைக்கவில்லை.

வன்செயல்களை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது மாத்திரமல்ல, படையினரும் பொலி சாரும் வன்முறைக் கும்பல்களுக்கு அனுசரணையாகவே செயற்பட்ட னர்.

அரசாங்க அரசியல்வாதிகள் பல அமைச்சர்களும் கூட தங்கள் பகுதிகளில் முன்னணியில் நின்று தமிழர்களுக்கு எதிராக வன்முறைகளை தூண்டிவிட்டார்கள்.

வன்முறைக் கும்பல்களைக் கலைக்க படையினர் ஏன் துப்பாக் கிப் பிரயோகம் செய்யவில்லை என்று ஜெயவர்தனவிடம் பி.பி.சி. பேட்டியொன்றில் கேட்கப்பட்டபோது "படையினர் மத்தியில் தமிழர்களுக்கு எதிரான உணர்வுகள் பெருமளவுக்கு இருந்தது என்று நான் நினைக்கிறேன். கலவரங்களில் ஈடுபட்ட சிங்களவரைச் சுடுவது சிங்கள சமூகத்துக்கு விரோதமான செயலாக இருக்கும் என்று படையினர் உணர்ந்திருக்கக்கூடும். சில இடங்களில் கலகக்காரர்களை படையினர் உற்சாகப் படுத்தியதையும் கண்டோம்" என்று பதிலளித்தார்.

கறுப்பு ஜூலை வன்செயல்களுக்காக ஜெயவர்தனவோ அல்லது அன்று பிரதமராக இருந்து பிறகு ஜனாதிபதியாகவும் வந்த ரணசிங்க பிரேமதாசவோ அல்லது ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தில் முக்கியமான பதவிகளில் இருந்த அரசியல்வாதிகளில் எவருமோ உயிருடன் இருந்தவரை தமிழ் மக்களிடம் வருத்தம் தெரிவித்ததில்லை.



**மன்னிப்புக் கோரிய சந்திரிகா**

பின்னாளில் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மாத்திரமே இலங்கை அரசின் சார்பில் பகிரங் கமாக மன்னிப்பு கோரினார்.

கறுப்பு ஜூலையின் 21 வது வருட நினைவைக் குறிக்குமுகமாக கொழும்பில் வைபவம் ஒன்றில் உரையாற்றிய அவர், "அந்த வன்செயல்களுக்காக இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் கூட்டாக குற்றப்பொறுப்பை ஏற்றுக்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும். இலங்கை அரசு மற்றும் இலங்கையின் சகல குடிமக்கள் சார்பிலும் மன்னிப்புக்கோரும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

**இந்தியத்தலையீடு**

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவின் நேரடித் தலையீட்டுக்கு கறுப்பு ஜூலை வழிவகுத்தது.

அன்றைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நிலைவரங்களை அவதானிக்க தனது வெளியுறவு அமைச்சர் பி.வி. நரசிம்மராவை கொழும்புக்கு அனுப்பினார்.

அவர் வந்திறங்கிய தினமான ( 29 ஜூலை 1983) கொழும்புக்கு விடுதலை புலிகள் வந்துவிட்டதாக புரளியைக் கிளப்பிய இனவாதச் சக்திகள் தமிழர்கள் மீது மீண்டும் படுமோசமான தாக்குதல்களை மேற்கொண்டன. அன்றைய தினமே பெருமளவு கொலைகள் இடம்பெற்றதாகக் கூறப்படுவதுண்டு.

தமிழர்கள் சார்பில் இந்தியா தலையீடு செய்வதற்கு சிங்களவர்களின் எதிர்ப்பை வெளிக்காட்டவே நரசிம்மராவ் கொழும்பில் இருந்தவேளை இனவாதச் சக்திகள் மீண்டும் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டன என்பதில் சந்தேகமில்லை.



**வீரகத்தி தனபாலசிங்கம்**

கறுப்பு ஜூலைக்கு பிறகு ஐக்கிய தேசிய கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் கூட்டமொன்றில் உரையாற்றிய அமைச்சர் காமினி திசாநாயக்க இந்தியா இலங்கை மீது படையெடுத்தால் 24 மணித்தியாலங்களுக்குள் தமிழர்கள் கொல்லப்படுவார்கள் என்று பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது.

கறுப்பு ஜூலைக்கு பின்னரான காலகட்டத்தில் அதிகாரத்தில் இருந்த சகல அரசாங்கங்களுமே இனப்பிரச்சினைக்கு அரசியல் இணக்கத்தீர்வைக் காண்பதற்கு முயற்சிப்பதாகக் கூறிக்கொண்டு மறுபுறத்தில் இராணுவத்தீர்விலேயே அக்கறை காட்டின.

ஐரிஷ் குடியரசு அரசியல்வாதியும் சின் ஃபீன் இயக்கத்தின் முன்னாள் தலைவருமான ஜெரி அடம்ஸ் வட அயர்லாந்து நெருக்கடிக்கு தீர்வைக் காண்பதற்கு முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் தொடர்பில் கருத்து வெளியிட்டபோது "சமாதான முயற்சிகள் வேறு மார்க்கங்களிலான போர்தான்" (Peace process are war by other means) என்று குறிப்பிட்டார். இலங்கையின் சமாதான முயற்சிகளும் அவ்வாறே அமைந்தன என்பதை அனுபவ வாயிலாக நாம் கண்டோம்.

> **கறுப்பு ஜூலையில் இருந்து உள்நாட்டுப்போரில் இருந்தும் படிப்பினைகள் பெற்றுக்கொள்ளப்பட்டதற்கான எந்த அறிகுறியையும் சிங்கள அரசியல் சமுதாயத்தின் நிலைப்பாடுகளில் காணவில்லை. மீண்டும் ஒரு கறுப்பு ஜூலை நிகழாது என்பதற்கு உத்தரவாதம் இல்லை.**

**போர்ப்பிரமை**

சிங்கள அரசியல் தலைவர்கள் அடிப்படையில் தமிழர் பிரச்சினை தொடர்பிலான தங்களது சிந்தனையில் "போர்" பற்றிய ஒரு பிரமையைக் கொண்டிருந்தார்கள். இதற்கு இரு உதாரணங்களை நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும். (மறு பக்கம் பார்க்க)



1977 ஜூலை பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி மாபெரும் வெற்றிபெற்று ஜெயவர்தன பிரதமராக பதவியேற்ற சில வாரங்களில் தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் தமிழர்களுக்கு எதிராக வன்செயல்கள் மூண்டன. அப்போது தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவர்.

அந்த வன்செயல் நாட்களில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் ஜெயவர்தன அமிர்தலிங்கத்தை நோக்கி "சமாதானம் என்றால் சமாதானம். போர் என்றால் போர்" என்று கூறினார்.

அதற்கு இரு தசாப்தங்களுக்கு முன்னர் 1956 ஜூன் 5 பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அரசாங்கம் சிங்களத்தை மாத்திரம் அரசகரும மொழியாக்கும் சட்டத்தை கொண்டுவந்ததை எதிர்த்து தந்தை செல்வா தலைமையில் இலங்கை தமிழரசு கட்சி கொழும்பு காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தியது. அரசாங்கத்தின் தூண்டுதலுடன் காடையர்கள் பொலிசார் பார்த்துக்கொண்டு நிற்க சத்தியாக்கிரகிகளை கொடூரமாக தாக்கினார்கள்.



அந்த தாக்குதலில் காயமடைந்தவர்களில் ஒருவரான அமிர்தலிங்கம் தலையில் தனது காயத்துக்கு கட்டுப்போட்டுக்கொண்டு பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்தபோது அவரை விளித்து "கௌரவ போர்க்காயங்களே" (Honourable Wounds of War) என்று பண்டாரநாயக்க பேசினார்.

தமிழர்கள் ஆயுதமேந்துவதற்கு வெகு முன்னதாகவே தமிழர்களின் நியாயபூர்வமான உரிமைப் போராட்டத்தை சிங்களத் தலைவர்கள் ஒரு போர் மனோபாவத்துடனேயே நோக்கினார்கள் என்பது தெளிவாகிறது. இறுதியில் அந்தப் போர் வருவதை எவராலும் தடுக்கக் கூடியதாக இருக்கவில்லை. அதற்கு பின்னரானவை அண்மைக்கால வரலாறு.

**இராணுவத்தீர்வு**

சகல ஜனாதிபதிகளும் உலக ஒப்பாசாரத்துக்காக அரசியல் தீர்வைப் பற்றி பேசினார்களே தவிர இராணுவத்தீர்வை காணும் முயற்சிகளுக்கு தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்கிவிட்டே சென்றார்கள்.

இந்தியாவின் தலையீடோ அல்லது சர்வதேசத்தின் பங்களிப்போ இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு பதிலாக இராணுவத்தீர்வை நோக்கிய செயன்முறைகள் முனைப்படைந்து இறுதியில் முழுவீச்சிலான போர் மூளுவதையே உறுதிசெய்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

சர்வதேச அரசியல் நிகழ்வுப்போக்குகளில் ஏற்பட்ட மாறுதல்கள் வன்னியில் விடுதலை புலிகளை தோற்கடித்து உள்நாட்டுப்போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான வாய்ப்பை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு கிடைக்கச் செய்தன. போரில் அரசாங்கப் படைகள் வெற்றிபெறுவதற்கு உறுதியான அரசியல் தலைமைத்துவத்தை வழங்கிய ஒரே ஜனாதிபதி தானே என்று உரிமைகோரிய ராஜபக்ச போர்வெற்றியை மையப்படுத்தி சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரங்களை முன்னெடுத்து உச்சபட்ச அரசியல் ஆதாயத்தை அறுவடை செய்தார்.

இராணுவவாத அணுகுமுறையுடன் சிங்கள பௌத்த பெரும்பான்மை இனவாத அரசியல் கொள்கைகளை முன்னெடுத்த ராஜபக்சாக்கள் இறுதியில் தங்களது தவறான ஆட்சிமுறை, ஊழல் மோசடி, அதிகார துஷ்பிரயோகம் மற்றும் குடும்ப ஆதிக்க அரசியலுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த மக்களினால் ஆட்சியதிகாரத் தில் இருந்து தூக்கியெறியப் பட்டார்கள். அவர்களின் வீழ்ச்சி உண்மையில் பெரும்பான்மை இனவாத அரசியலின் தோல்வியை பறைசாற்றியது எனலாம்.

நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகளில் இருந்து கவனத்தை திசைதிருப்பவும் தவறான ஆட்சிமுறையை மூடிமறைக்கவும் இனிமேலும் பெரும்பான்மை இனவாத அணி திரட்டல்களுக்கு இடமளிக்கக்கூடாது என்பதே இலங்கை வரலாறு காணாத படுமோசமான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் உணர்த்தி நிற்கும் முக்கிய படிப்பினையாகும்.

ஆனால் அண்மைக்காலமாக மீண்டும் இனவாத அரசியல் அணிதிரட்டல்கள் தீவிரமாக முன்னெடுக்கப்படுவதை காண்கிறோம். இன அடிப்படையிலான பிரச்சினை இப்போது தீவிரமாக மதங்களுக்கு இடையிலான பிரச்சினையாகவும் திசை திருப்பப்படுகிறது.

**மீண்டும் இனக்கலவரம் பற்றிய பேச்சுக்கள்**

அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தினால் இலங்கை இதுவரை காணாத மிகப்பெரிய இனக்கலவரம் மூளும் என்ற விமல் வீரவன்ச, சரத் வீரசேகர போன்ற இனவாத அரசியல்வாதிகள் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அடிக்கடி அச்சுறுத்தல் விடுக்கிறார்கள். சிங்கள பௌத்த மக்களின் பொறுமைக்கு ஒரு எல்லை உண்டு என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

இத்தகைய பின்னணியிலே, மீண்டும் ஒரு கறுப்பு ஜூலை நிகழாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. கறுப்பு ஜூலையில் இருந்தும் அதற்கு பின்னரான நான்கு தசாப்தகால அரசியல் நெருக்கடிகளில் இருந்தும் சிங்கள அரசியல் சமுதாயம் ஏதாவது படிப்பினையை பெற்றிருக்கிறதா என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எழுகிறது.

**தமிழ் மக்களின் இன்றைய நிலை**

உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்த பிறகு கறுப்பு ஜூலையை நாம் நினைவுகூருவது இது பதினான்காவது வருடமாகும். இந்த கட்டத்தில் இலங்கைத் தமிழர்களின் நிலை என்னவாக இருக்கிறது?

நான்கு தசாப்தங்களிலும் 15 இலட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் வெளிநாடுகளுக்கு குறிப்பாக மேற்கு ஐரோப்பாவுக்கும் வட அமெரிக்காவுக்கும் புலம்பெயர்ந்து நவீன யூதர்கள் போன்று வாழ்கிறார்கள். மேற்கு நாடுகளில் உள்ள செல்வாக்குமிக்க ஆசிய புலம்பெயர் சமூகங்களில் குறிப்பிடத்தக்க ஒரு பிரிவினராக இலங்கை தமிழர்கள் விளங்குகிறார்கள்.

இலங்கையில் வந்து முதலீடுகளைச் செய்து தாய் நாட்டின் வளர்ச்சிக்கு உதவுமாறு அரசாங்கத் தலைவர்கள் கோரிக்கை விடுக்கின்ற அளவுக்கு புலம்பெயர் இலங்கை தமிழர்களில் பலர் பொருளாதார ரீதியில் வலிமைமிக்கவர்களாக இருக்கிறார்கள். இலங்கையில் தமிழர்கள் எதிர்நோக்கும் மனிதாபிமானப் பிரச்சினைகள் மற்றும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணும் முயற்சிகள் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் குறிப்பாக மேற்குலக நாடுகளின் கவனத்தை இடைவிடாது ஈர்க்கும் அரசியல் செயற்பாடுகளிலும் அவர்கள் மத்தியில் உள்ள அமைப்புக்கள் ஈடுபட்டுவருகின்றன.

வடக்கு, கிழக்கில் போரின் விளைவான அவலங்களில் இருந்து இன்னமும் முழுமையாக விடுபடமுடியாமல் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடர்பாடுகளை அனுபவித்துக்கொண்டிருக்கின்றன.

போரின் முடிவுக்கு பின்னரும் தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவமயத்தை வலுப்படுத்துவதிலேயே அரசாங்கங்கள் அக்கறை காட்டுகின்றன. தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகத்தில் குடிப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்குடன் அரசாங்க அனுசரணையுடன் திட்டமிட்ட குடியேற்றங்கள் மதவாத சக்திகளின் துணையுடன் தீவிரப்படுத்தப்படுவதையே காணக் கூடியதாக இருக்கிறது.

தொல்பொருள் ஆராய்ச்சி, வனப்பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்புத் தேவைகள் என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்பு நடவடிக்கைகள் இன்று வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் எதிர் நோக்குகின்ற பாரதூரமான உடனடிப் பிரச்சினையாக இருக்கிறது.

கறுப்பு ஜூலைக்கு பிறகு இந்தியாவின் நேரடித் தலையீட்டை அடுத்து 1987 ஜூலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை மாகாணசபைகளை அமைக்கப்படுவதற்கு வழிவகுத்தது. அதற்காக கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் 36 வருடங்கள் கடந்தும் கூட முழுமையாக நடைமுறைப் படுத்தப்படவில்லை. சமாதான உடன்படிக்கையின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதை சகல அரசாங்கங்களுமே உறுதிசெய்துகொண்டன.

இந்தியாவினால் கூட அது விடயத்தில் இலங்கையை வழிக்கு கொண்டுவர முடியவில்லை. சமாதான உடன்படிக்கைக்கு பின்னரான காலப்பகுதியில் அரசியல் தீர்வை நோக்கிய பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தின் 1991 மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழு, திருமதி குமாரதுங்கவின் ஆட்சியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2000 புதிய அரசியலமைப்புக்கான யோசனைகள், மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் 2006 பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வ கட்சி பிரதிநிதித்துவக் குழுவின் யோசனைகள் மற்றும் மைத்திரிபால - ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தில் புதிய அரசியலமைப்பை வரைவதற்கு முன்னெடுக்கப்பட்ட செயன்முறை ஆகியவையே அவையாகும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவராக இருந்த இரா.சம்பந்தன் அவர்கள் அரசாங்கங்களுடனான பேச்சுவார்த்தைகளிலும் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பல சந்தர்ப்பங்களிலும் இந்த முயற்சிகளைப் பற்றி திரும்பத்திரும்ப விளக்கிக் கூறிவந்தார். இறுதியாக ஜனாதிபதி விக்கிரமசிங்கவுடன் நடத்திவந்த பேச்சுவார்த்தைகளிலும் கூட சம்பந்தன் அவற்றைப் பற்றி சிலாகித்தார். ஆனால் ஜனாதிபதி அவற்றில் அக்கறை காட்டக்கூடிய மனநிலையில் இல்லை.

சம்பந்தனைப் பொறுத்தவரை அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்துக்கு அப்பால் இனப்பிரச்சினைக்கு அதிகபட்ச அதிகாரப்பரவலாக்கலுடன் கூடிய அரசியல் தீர்வொன்றைக் வகுப்பதற்கு புதிதாக எதையும் ஆராயத் தேவையில்லை, மேற்கூறப்பட்ட முயற்சிகளின் போது வரையப்பட்ட யோசனைகளை பரிசீலனைக்கு எடுத்தால் போதும் என்பதே நிலைப்பாடாக இருந்தது.

அண்மைக்காலமாக தமிழ்க்கட்சிகளுடன் ஜனாதிபதி விக்கிரமசிங்க நடத்திவந்த பேச்சுவார்த்தை களிலும் முன்னேற்றத்தைக் காணமுடியாமல் இருக்கிறது.

இலங்கையின் 75 வது சுதந்திர தினத்துக்கு முன்னதாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்போவதாகக் கூறிக்கொண்டு விக்கிரமசிங்க கடந்த டிசம்பரிலும் ஜனவரியிலும் இரு தடவைகள் சர்வகட்சி மகாநாடு என்ற பெயரில் பாராளுமன்ற கட்சிகளின் மகாநாட்டை கூட்டினார். அந்த முயற்சியை தொடர்ந்து முன்னெடுக்க முடியாமல்போன நிலையில் இறுதியாக தமிழ்க்கட்சிகளுடன் மாத்திரம் அவர் பேசினார்.

13 வது திருத்தத்தை இரு வருடங்களில் முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தனது அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கும் என்று யாழ்நகரில் தைப் பொங்கல் விழாவில் விக்கிரமசிங்க அறிவித்தார். அரசியலமைப்பில் இருக்கும் அந்த திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவது ஜனாதிபதி என்ற வகையில் தனது கடமை என்று அதை எதிர்க்கும் அரசியல் சக்திகளுக்கு கூறிய அவர் ஒன்றில் அந்த திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் அல்லது அதை ஒழித்துவிட எவராவது பாராளுமன்றத்தில் புதிய திருத்தச்சட்டம் ஒன்றை தனிநபர் பிரேரணையாகக் கொண்டுவரவேண்டும் என்றும் கூட குறிப்பிட்டார்.

பொலிஸ் இல்லாத பதின்மூன்று

ஆனால், தென்னிலங்கையில் கிளம்பிய எதிர்ப்பையடுத்து அவர் பிறகு பதின்மூன்றைப் பற்றி பேசுவதை தவிர்த்துக்கொண்டார். இப்போது இறுதியாக இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்னதாக கடந்தவாரம் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் பொலிஸ் அதிகாரங்களை தவிர்த்து 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து அவர் யோசனையை முன்வைத்தார்.



ஆனால், தமிழ்க்கட்சிகள் அதை திட்டவட்டமாக நிராகரித்துவிட்டன. இந்தியாவுக்கு செல்வதற்கு முன்னதாக அந்த யோசனையை விக்கிரமசிங்க வெளியிட்டதற்கு ஒரு அந்தரங்க நோக்கம் இருந்தது என்பதில் சந்தேகமில்லை.

புதுடில்லியில் இந்திய அரசாங்கத்திடமிருந்து 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி விரைவில் மாகாணசபை தேர்தல்களை நடத்தவேண்டும் என்று வலியுறுத்தல் வரும்போது தன்னால் அது விடயத்தில் செய்யக்கூடியது என்ன என்பதை அவர்களுக்கு முன்கூட்டியே தெரியப்படுத்தும் நோக்குடன்தான் பொலிஸ் இல்லாத 13 பற்றி ஜனாதிபதி கொழும்பில் பேசினார்.

தமிழ்க்கட்சிகள் அதை நிராகரித்துவிட்ட நிலையில் இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகளை மீண்டும் எவ்வாறு தொடங்குவது என்பதில் பெரிய சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. ஜனாதிபதி தேர்தல் பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கும் விக்கிரமசிங்க தமிழர்களை வென்றெடுப்பதை விடவும் தென்னிலங்கை தேசியவாத சக்திகளை பகைத்துக் கொள்ளாமல் இருப்பதிலேயே கூடுதல் அக்கறை காட்டக்கூடும்.

கறுப்பு ஜூலைக்கும் உள்நாட்டுப் போருக்கும் வழிவகுத்த இனப்பிரச்சினைக்கு நிலையான அரசியல் தீர்வொன்றைக் காணவேண்டிய அவசியம் இருப்பதாக தென்னிலங்கை அரசியல் சமுதாயம் உணருவதாக இல்லை. தீர்வு முயற்சிகளுக்கு எதிரான நிலைப்பாடு இன்று மூன்றரை தசாப்தங்களுக்கும் கூடுதலான காலமாக அரசியலமைப்பில் இருந்து வரும் ஒரு திருத்தத்தைக் கூட கைவிடவேண்டும் என்று போர்க்கொடி தூக்குகின்ற அளவுக்கு வலுவடைந்திருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு நழுவிக் கொண்டே போகிறது. ●

# முரண்பாட்டில் ஆசிரியர்-மாணவர் உறவு...! தீர்வுக்கு வழி என்ன?

மாணவர்களே ஒரு சமூகத்தின் – இனத்தின் – நாட்டின் எதிர்காலம். சிறந்த சமூகத்தின் – நாட்டின் எதிர்காலம் மாணவர்களாலேயே உருவாக்கப்படுகின்றது. இத்தகைய மாணவர்களை சிறந்தவர்களாக – நற்பிரஜைகளாக உருவாக்குபவர்கள் ஆசிரியர்கள். எனவேதான், ஆசிரியர் – மாணவர் உறவு என்பது மிகவும் அற்புதமானதாகவும் சிறந்ததாகவும் பார்க்கப்படுகின்றது. ஆனால், இந்த அற்புத உறவு அண்மைக்காலமாக முரண்பாடுகள் – குழப்பங்கள் நிறைந்ததாக மாறியுள்ளது. இது யாரின் தவறு?

வெறுமனே தொழிலாக மட்டுமே பார்க்கப்படும் நிலைமைக்கு ஆசிரியத்துவம் தடம் மாறியதும் – வியாபார நிறுவனங்கள் நிர்ணயிக்கும் இலக்கு போன்று ஆசிரியர்களுக்கும் இலக்குகள் நிர்ணயிக்கப்படுவதும் ஆசிரியர் – மாணவர் உறவு சிக்கலடைந்ததில் செல்வாக்கு செலுத்துகின்றன. அத்துடன், இன்றைய நவீனத்துவத்தின் போக்கும் இதில், செல்வாக்கு செலுத்துகிறது. ஆனாலும், மாணவர்கள் மீதான அக்கறையும் அன்பும் கொண்ட ஆசியர்கள் இன்னமும் அற்றுப்போய்விடவில்லை. எனினும், நீடிக்கும் ஆசிரியர் – மாணவர் குழப்பம் இங்கு சிலர் கருத்து வெளியிடுகின்றனர்....!

## நாசூக்காக பிள்ளைகளை அணுகவேண்டும்



**எஸ்.கணபதி**
ஓய்வு நிலை உதவி கல்விப்பணிப்பாளர்

அண்மைக்காலங்களில் மாணவர்கள், அதிபர்கள் ஆசிரியர்களுடன் ஏற்படும் முரண்பாடுகள் தொடர்பில் பத்திரிகைகளில் செய்திகளை பார்க்கின்றோம். அனைவருக்கும் இது தெரியும். நான் ஏற்கனவே தீவக கல்வி வலயத்தில் உதவி கல்வி பணிப்பாளராக நீண்ட காலமாக சேவையாற்றி தற்போது ஓய்வு நிலை யில் இருக்கின்றேன். இப்படியான சம்பவங்களை பார்க்கும்போது உண்மையில், ஆரம்ப காலத்தில் கடந்த 10 வருடங்களுக்கு முதல் நான் 15 வருடங்களாக தீவக வலயத்தில் கடமையாற்றி இருக்கின்றேன்.

இவ்வாறான சம்பவங்கள் அரிதாக இருந்தன. ஆனால், தற்போது அதிக சம்பவங்கள் நடக்கின்றன நாங்கள் பத்திரிகைகள் வாயிலாக அறியக் கூடியதாக உள்ளது. பாடசாலையில் மாணவர்களை அதிபர் தாக்கினார், மாணவர்களை ஆசிரியர் கடுமையாக தாக்கினார் போன்ற செய்திகளை பத்திரிகைகளில் அறியக்கூடியதாக உள்ளது

ஆனால், இவ்வாறான சம்பவங்களை கேள்விப்படும் போது மிகவும் கஷ்டமாக உள்ளது. மாணவர்களை ஆசிரியர்கள் பாடசாலையில் தங்களுடைய பிள்ளைகளைப் போல பார்க்க வேண்டும் அவ்வாறு பார்க்கும் போது உண்மையில் பிள்ளைகள் நல்ல கரிசனை கொண்டு நடப்பது மாத்திரம் அல்ல பிள்ளைகள் சிறு வர்கள் எனவே, பிள்ளைகளை தமது பிள்ளைகள்போல பார்த்து அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். எனவே, பாடசாலையில் முக்கியமாக ஆசிரியர்கள், அதிபர்கள் பாடசாலையில் உள்ள மாணவர்களை தமது பிள்ளைகளாக பார்த்து நல்வழிப்படுத்தினால் அந்தப் பிள்ளை நல்வழியில் செயல்படக்கூடியதாக இருக்கும்.

மாணவர்கள் பாடசாலையில் பிழை விடுவார்கள் என்பது தெரியும். அதனை ஆசிரியர்கள் நாசூக்காக அணுக வேண்டும். அன்பாக - பண்பாக - வன்முறையாக மாணவர்களை அணுகாது அவர்களை நாசூக்காக அன்பான முறையில் அணுகினால் அவர்கள் சாதகமாக தங்களை திருத்திக் கொள்கின்றார்கள். எனவே, இவ்வாறான செயல்பாடுகளை தடுக்க வேண்டுமாக இருந்தால் உளவியல் ரீதியான செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

தீவக வலயத்தில்தான் அண்மையில், ஒரு சம்பவம் இடம்பெற்று அந்த சம்பவம் நீதிமன்றம் வரை சென்றிருக்கின்றது எனவே பாடசாலையில் அதிபர் ஒரு மாணவனை கடுமையாக தாக்குகின்றார் என்றால் அதனை தடுப்பதாக இருந்தால் அதற்கு உளவியல் ரீதியான சிகிச்சை மாத்திரமே சரியான விடயமாக காணப்படுகின்றது.

பெற்றோர்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு ஆசிரியர் அதிபர்களை நம்பியே அனுப்புகின்றார்கள். ஆகவே, பாடசாலையில் ஆசிரியர்கள் மாணவர்களை தங்களுடைய பிள்ளைகள்போல பார்த்தால் மாத்திரமே பிள்ளைகளை நல்வழிப்படுத்த முடியும். அத்தோடு பிள்ளைகளை மிகவும் அன்பாக வழிநடத்த வேண்டும். அதைத் தவிர்த்து நீங்கள் வன்முறை ரீதியாக இறங்கினால் அது பெரும் பிரச்னையாக ஏற்படும்.

எனவே, எதிர்காலத்தில் பாட சாலையில் உள்ள மாணவர்களை ஆசிரி யர்கள் அதிபர்கள் தமது பிள்ளைகள் போல் பார்க்க வேண்டும்.

**அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்**

## மாணவர் - ஆசிரியர் பாசம் குறைவதே காரணம்



**ச.மைக்கல்**
நீரிழிவு கழகத்தின் தலைவர்

தற்போதைய சூழ்நிலையில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கான முரண்பாடுகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. ஆசிரியர்கள் தங்களுடைய பொறுமையை இழந்து மாணவர்களை தாக்குகின்ற சம்பவங்கள் அண்மைய நாட்களில் அதிகரித்துள்ளன. மாணவர்கள் ஆசிரியர்களுக்கு எதிராக முரணான கருத்துகளை - முரண்பட்ட செயல்பாடுகளை மேற்கொள்வது அதிகரித்து செல்கின்றது.

இவ்வாறான செயல்கள் ஆசிரியர் மாணவர்களிடையே ஒற்றுமையும் - பாசமான செயல்பாடும் இல்லாததால்தான் அதிகரிக்கின்றன. இவற்றை இரு தரப்பினரும் ஆசிரியர்களும் மாணவர்களும் இதனை உணர்ந்து இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது. இருப்பதற்கு அவர்கள் ஆவன செய்ய வேண்டும். மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோரும் கலந்துரையாடி என்ன பிரச்னை இடம்பெறுகின்றது? ஏன் இவ்வாறு அடிக்க வேண்டும்? ஏன் பிள்ளை தவறாக செயல்படுகின்றது?

பாடசாலை நேரத்தில் அல்லது பாடசாலை முடிந்த பின்னர் ஒரு பிள்ளை எவ்வாறு செயல்படுகின்றது? என்பதை பெற்றோர் அவதானமாக பார்க்க வேண்டும். அத்தோடு பாடசாலையில் பெற்றோர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும்.

பிள்ளைகளை அன்பாக வழிநடத்த முற்பட வேண்டும். இவ்வாறான ஆசிரியர் மாணவர்களுக்கு இடையேயான சம்பவங்கள் அதிகரிக்குமாக இருந்தால், அது வன்முறை சம்பவமாக மாற்றமடையும். பாடசாலையில் பிள்ளைகளின் செயல்பாடுகளை நன்றாக ஆராய்ந்து ஆசிரியர் அதிபர்கள் அவர்களுடைய பெற்றோருக்கு அதனை தெரியப்படுத்த வேண்டும். பிள்ளைகளை ஆசிரியர்கள் கண்காணிப்பதன் மூலம் பெற்றோருக்கு தெரியப்படுத்த முடியும். அதை விடுத்து பிள்ளை மீது தாக்குவது என்பது தவறான விடயம்.

ஆனால், எங்களுடைய காலத்தில் நாங்கள் எத்தனை அடிகளை வாங்கியிருந்தோம். ஆனால், தற்போது இவ்வாறான வன்முறையான தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றதுஎன்பது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலான முரண்பாட்டை மேலும் அதிகரிக்கும். எனவே, பாடசாலை மட்டத்தில் பெற்றோர் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களிடையே உரிய கலந்துரையாடல்களை மேற்கொள்வதன் மூலம் இவ்வாறான முரண்பாடுகளை தவிர்க்க முடியும்.

## மாணவரை கையாள செயல்திட்டம் தேவை



**சா. கேசவராஜா**
பிரபல தொழிலதிபர்

மாணவர்கள் பிழை விட்டால் ஆசிரியர்கள் தண்டிப் பது எமது கலாசாரத்தில் உள்ள ஒரு வழமை. எம்மிடம் தற்போதுள்ள முரண்பாட்டு நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு இரண்டு விடயங்கள் செய்யவேண்டியுள்ளன. ஆசிரியர்கள் மாணவர்களை கையாளும் முறை எப்படி என்பதை அவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும்.

ஏனென்றால், மாணவர்களை எவ்வாறு கையாள வேண்டும் என்ற ஒரு பாடத்திட்டத்தை அல்லது ஒரு செயல் திட்டத்தை பாடசாலை மட்டத்தில் செயல்படுத்த வேண்டும். அத்துடன், ஆசிரியர்கள் மாணவர்களை எவ்வாறு கையாள வேண்டும் என்ற ஒரு விழிப்புணர்வு செயல்பாட்டை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு முன்னெடுப்பதால் இவ்வாறான பிரச்னைகள் ஏற்பாடாது.

இதேபோல, ஆசிரியர்கள்மீது மாத்திரம் நாங்கள் முறைப்பாடு தெரிவிக்க முடியாது. மாணவர்களும் எவ்வாறான முறையில் செயல்படுகின்றார்கள் என்பதை கட்டாயமாக அவதானிக்க வேண்டும். குறிப்பாக, ஒரு மாணவன்மீது அக்கறையுள்ள ஆசிரியர் அந்த மாணவனை நல்வழிப்படுத்துவதற்காக - திருத்துவதற்காக தண்டனை வழங்கினால் அதனை நாங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இதேபோல, ஆசிரியர்களுக்கு பாடசாலை மட்டத்தில் உளவியல் ரீதியான பயிற்சிநெறியை கட்டாயமாக வழங்குவதன்மூலம் இவ்வாறான செயல்பாடுகளை தடுக்க முடியும். குறிப்பாக, அரசசார்பற்ற நிறுவனங்கள் இந்த விடயத்தை செயல்படுத்துகிறார்கள். எனவே, அவர்களின் உதவியுடன் சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் இவ்வாறான உளவியல் சார்ந்த செயல் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் பாடசாலையில் மாணவர்கள் ஆசிரியர்களுக்கிடையில் ஏற்படும் முரண்பாடான சம்பவங்களை தவிர்க்க முடியும்.

## அன்பாலேயே மாணவரை திருத்தலாம்



**இரட்ணம் ராஜேஸ்வரன்**
ஏழாலை

இன்றைய காலகட்டத்திலேயே பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே முரண்பட்ட நிலைமை காணப்படுகிறது என்று பத்திரிகைகள் வாயிலாக அறிகின்றோம்.

ஒரு மனிதாபிமானமற்ற முறையில் மாணவர்கள் தாக்கப்படுவதும் அதனால் அவர்கள் துன்பப்படுவதுமாக பெற்றோர்கள் குறைகூறுகின்றார்கள். ஊரிலே உள்ளவர்கள் கதைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

மாணவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான் உதாரணமாக அன்றைய காலத்தில் நாங்கள் சிறுவர்களாக படிக்கின்ற காலத்திலே எங்களுக்கு கல்வி கற்பித்த ஆசிரியர் பூரணம்மா அவர்கள் பாடசாலைக்கு வரும்போது அந்த நாளையிலே பல்லி முட்டை இனிப்பு, அரிசி பொரி, நெல்லுப்பொரி, எள்ளுருண்டை போன்றவற்றை வீட்டிலே செய்து ஒரு பெரிய பேணியிலே போட்டுக் கொண்டு வந்து சரியாக படித்தால் - நல்ல பிள்ளையாக வளர்ந்தால் அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் அந்த இனிப்பு பண்டத்தை வழங்குவார். நாங்கள் அதனை அவரிடமிருந்து பெறுவதற்காக அந்த வகுப்பில் நல்ல பிள்ளையாக சிறப்பாக செயல்படுவோம்.

அன்றைய காலத்தில் அப்படி இல்லை. தண்டிக்கத்தான் வேண்டும் என்றால் கையிலேதான் நமக்கு அடிப்பார்கள். இதேபோல, அடி வாங்கியும் இருக்கின்றோம். ஆனால், தற்போது உள்ள நிலைமைபோல் முதுகில் குழாய்களால் - இரும்பு கம்பிகளால் அடிக்கின்ற நிலைமை அல்ல. எனவே, இந்த நிலைமை மாற்றபட வேண்டும். இவைகள் அனைத்தும் களையப்பட வேண்டும். மாணவர்களை அன்போடு அரவணைப்பதன் மூலமே சிறந்த மாணவர்களாக சிறந்த பிஜைகளாக இந்த நாட்டை வழிநடத்துகின்ற ஆற்றல் உள்ள பெரியவர்களாக வளர்க்க முடியும் என்பது என்னுடைய கருத்து. எனவே, ஆசிரியர்கள், அதிபர்கள் பாடசாலையில் மாணவர்களை நல்வழிப்படுத்துவதற்கு அன்பான முறையை பயன்படுத்த வேண்டும். அது தவறும் பட்சத்தில் அது முரண்பாடு வளர்ந்து கொண்டே இருக்கும்.

# இலங்கை - இந்திய நட்பரசியலுக்கு 13ஆம் திருத்தம் நல்ல பகடைக்காய்!

பனங்காட்டான்



இது ஒன்றும் எதிர்பாராத நிகழ்வு அல்ல. நன்கு திட்டமிட்ட ஒரு நிகழ்ச்சி நிரல். இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியாவுக்கான அதிகாரபூர்வ விஜயத்தையே இங்கு குறிப்பிடுகிறேன்.

கடந்த காலங்களில் இலங்கையில் ஆட்சித் தலைவராக தெரிவு செய்யப்படுபவர்கள் முதலாவது வெளிநாட்டு விஜயமாக அயல்நாட்டுப் பயணம் அமையும். கூப்பிட்ட குரலுக்கு முதலில் ஓடி வருபவர் அயலவர் என்பதற்கிணங்க இந்திய பயணம் அமைந்து வந்துள்ளது.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி என்ற பதவி வழியாக இந்தியாவுக்குச் செல்ல சரியாக ஒரு வருடம் சென்றுள்ளது. இதற்கான திகதித் தெரிவுதான் இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது.

மக்கள் புரட்சியால் மக்களால் தெரிவான ஜனாதிபதி கோதபாய ராஜபக்ச கடந்த வருடம் யூலை மாதம் 9ம் திகதி நாட்டை விட்டு தப்பியோட, அவரது கட்சியில் அமைச்சராகவோ, நாடாளுமன்ற உறுப்பினராகவோ இருந்திராத ரணில் விக்கிரமசிங்க தற்காலிக ஜனாதிபதியாக யூலை 13ஆம் திகதி பதவியேற்றார்.

யூலை 20ம் திகதி நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி தெரிவுக்கான வாக்களிப்பில் 134 எம்.பிக்களின் ஆதரவைப் பெற்று 8வது ஜனாதிபதியாக தெரிவாகி, மறு நாளான யூலை 21ஆம் திகதி அதிகாரபூர்வ மாக பதவியேற்றார்.

இது இடம்பெற்று முடிந்த ஒரு வருடத்துக்குள் எத்தனையோ நாடுகளுக்குப் பயணம் செய்த பின்னர் இந்த மாதம் 20ம் திகதி இந்தியா சென்று, 21ம் திகதி பிரதமர் மோடியைச் சந்தித்து பல்வேறு விடயங்களையும் கலந்துரையாடி இரு நாட்டு ஒப்பந்தங்கள் சிலவற்றையும் நிறைவு செய்துள்ளார்.

ஒருவகையில் பார்க்கையில், தமது ஜனாதிபதி பதவியின் முதலாண்டு பூர்த்தியை கொண்டாட இந்திய விஜயமும் மோடியின் சந்திப்பும் முக்கியமென ரணில் விரும்பியிருக்கலாமென கருத இடமுண்டு. இந்த யூலை மாதம் இலங்கை இந்திய விவகாரங்களுடன் நிறைய சம்பந்தப்பட்டது. நல்லதும் கெட்டதும், உறவும் பகையும் என இரு வகைப்பட்டதாக இவை அமைந்துள்ளன.

1983 யூலை தமிழின அழிப்பை அடுத்து இந்தியா நேரடியாக இலங்கை விவகாரத்தில் தலையிட நேர்ந்தது. இதே ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ஆம் திகதி அன்றைய பிரதமர் இந்திரா காந்தி இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில், கறுப்பு யூலையை இனஅழிப்பு என்று சொல்லலாமென சுட்டியிருந்தார்.

1987 யூலை 29ஆம் திகதி இந்தியப் பிரதமர் ராஜிவும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் தமிழர் நலனுக்கென அதிகார பகிர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதற்காகவே 13வது அரசியல் திருத்தம் நிறைவேற்றப் பட்டது.

இதே யூலை மாதத்தில் முக்கியமான அந்த நாட்களை ஒட்டிய வாரத்தை இந்திய விஜயத்துக்கு ரணில் தெரிவு செய்ததை தற்செயலானதாக பார்க்க முடியாது. தந்திரோபாய ராஜதந்திர நகர்வுகளுக்கு இந்த பயணத்தை அவர் பயன்படுத்துவதை இதற்கு முந்தைய நாட்களில் அவர் நடத்திய சந்திப்புகளையும் வெளியிட்ட கருத்துகளையும் வைத்துப் பார்க்கலாம்.

தமிழர் பிரச்சனைத் தீர்வுக்கு பல கால வரையறைகளை குறிப்பிட்டுக் கூறிய ரணில், அவைகளை நிறைவேற்றாது அவ்வப்போது தமிழர் பிரதிநிதிகளை சந்தித்து பேச்சு நடத்தி வந்தார். இறுதியாக இந்தியா பயணிப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் நடத்திய சந்திப்பு எல்லாவற்றிலும் உச்சமானது.

அதிகாரப் பகிர்வு விடயத்தை முக்கியத்துவப்படுத்தாது பொருளாதார விருத்திக்கான விடயங்களை முன்னிலைப்படுத்தி உரையாற்றியபோதே பிரச்சனை வெடித்தது. அதிகாரப் பகிர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென தமிழரசின் மூத்த தலைவர் சம்பந்தன் இடித்துரைத்ததும், தமிழரை தொடர்ந்தும் ஏமாற்ற வேண்டாமென அழுத்திக் கூறியதும் ரணிலுக்கு படுகோபத்தை ஏற்படுத்தி விட்டதாம். “பேச விரும்பாவிட்டால் எழுந்து செல்லுங்கள்” என்று சம்பந்தனை விளித்து ரணில் கூறியுள்ளார்.

அண்மையில் வெளிநாடொன்றில் தம்மைச் சந்தித்த தமிழர் குழுவில் ஒருவர் ஆங்கிலத்தில் உரையாற்றிக் கொண்டிருந்தபோது, அவரது ஆங்கில உச்சரிப்பை எள்ளி நகையாடுவது போன்று, “எனக்கு தமிழ் தெரியும், தமிழில் பேசுங்கள்” என்று நக்கல்தனமாக ரணில் கூறியது ஞாபகம் இருக்கலாம். அந்தப் பாணியிலேயே தம்மை ஜனாதிபதி என்றுகூட எண்ணாது சின்னத்தனமாக ரணில் சம்பந்தனிடம் நடந்து கொண்டாரென்பது வரலாற்றுப் பதிவில் இடம் பெறும்.

ரணில் இவ்வாறு கூறியதை ஆங்கிலத்தில் “பிளீஸ் கெற் அவுட்” (தயவு செய்து வெளியே போங்கள்) என்று சொல்லலாம். இவ்வாறு சொல்லப்பட்ட பின்னரும் சம்பந்தன் பொறுமையுடன் தொடர்ந்து கூட்டத்தில் கலந்து கொண்டார். இவ்வாறு அவர் கலந்து கொண்டதற்கு முக்கிய காரணமுண்டு.

இக்கூட்டத்தில் வைத்தே ரணிலுக்கு சொல்ல வேண்டியதை சொல்லிவிட வேண்டுமென்பதற்காகவே அங்கிருக்க விரும்பினாரென்று அறிந்து கொள்ளலாம். “பொலிஸ் அதிகாரமில்லாத 13வது திருத்தத்தை நாங்கள் ஏற்கவில்லை. உங்கள் கருத்து எதற்கும் எமக்கு உடன்பாடு கிடையாது. நீங்கள் போகவிருக்கும் இடத்துக்கு இவ்விடயம் நீங்கள் போவதற்கு முன்னராகவே சென்றடையும்” என்பதே சம்பந்தன் ஏவிய அம்புகள்.

90 வயதைத் தாண்டிய அரசியல்வாதியான சம்பந்தன் பொறுமையிழந்தவராகவே இவ்வாறு கூறியது புரிகிறது. “எங்களை ஏமாற்றிக் கொண்டு, தொடர்ந்து பேச்சுவார்த்தைக்கு அழைத்து எம்மை ஏமாற்றியவாறு, இந்தியாவின் காதிலும் பூ வைப்பதற்காக நீங்கள் அங்கு செல்வது எமக்குத் தெரியும். நீங்கள் அங்கு போவதற்கு முன்னர் உரிய முறையில் இதனை இந்தியாவுக்கு நாங்கள் அறியக் கொடுப்போம்” என்பதையே சம்பந்தன் ராஜரீக புரிபாசையில் ரணிலுக்கு நேரடியாக அடித்துக் கூறினார்.

**1971இல் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கும், 1987இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும் போதிய பாதுகாப்பு வழங்கியது போன்று இன்று ரணிலுக்கும் வழங்கி அதனூடாக 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த இந்தியா விரும்பினால் செய்ய முடியும். இதனைவிடுத்து திருகோணமலையை வலுசக்தி மையமாக அமைத்து அதனை தனது நலனுக்குப் பயன்படுத்தவே இந்தியா தமிழர் பிரச்னையை ஒரு துரும்பாக பயன்படுத்துகிறது என்றால்..... யாரைத்தான் நம்புவது?**

1987 யூலையில் ராஜிவும் ஜே.ஆரும் செய்த இந்திய ஒப்பந்தமே 13வது அரசியல் திருத்தத்தின் மூலம். ஏற்கனவே பல தடவை இப்பத்தியில் குறிப்பிட்டது போன்று இது ஒரு ஒப்பந்தம் அல்ல. அமுலில் உள்ள சட்டத்திருத்தம். 13க்குப் பின்னர் நிறைவேற்றப்பட்ட 18, 19, 20, 21, 22ம் திருத்தங்கள் போன்ற சட்டவலுவுடையது.

பொலிஸ் அதிகாரமும் காணி அதிகாரமும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய மாகாண சபைக்கான அதிகார பரவலாக்கலில் இடம்பெறுவதை இச் சட்டத் திருத்தம் கூறுகிறது. நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்ட சட்டம் இது. எனவே இதனை நடைமுறைப் படுத்த மீண்டும் நாடாளுமன்ற அங்கீகாரம் பெற வேண்டியதில்லை.

இதனை மறுதலித்து, பொலிஸ் அதிகாரமில்லாத அதிகார பரவலாக்கலை வழங்க சகல கட்சிகளின் ஆதரவும், நாடாளுமன்ற மூன்றிலிரண்டு ஆதரவும் தேவை என ரணில் கூறியிருப்பது இவ்விடயத்தை சிங்கள பௌத்தர்கள் மத்தியில் பரப்பி தமிழருக்கெதிரான ரணகளத்தை உருவாக்குவது போன்றது.

1987 ஒப்பந்தத்தின் பிரகாரம் முதலாவது மாகாண சபைத் தேர்தல் வடக்கு கிழக்கு இணைந்ததாக 1988 ல் இடம் பெற்றது. இரண்டு மாகாணங்களையும் நிரந்தரமாக இணைக்கும் கருத்துக் கணிப்பு தேர்தலை அதற்கான ஒரு வருடத்துக்குள் ஜே.ஆர்.ஜெயவர்த்தன நடத்தவில்லை.

1990ல் பிரேமதாச ஆட்சியில் வடகிழக்கு மாகாண சபை ஒழிக்கப்பட்டது. அதன் பின்னர் கிழக்கு மாகாணத்துக்கு தனியான தேர்தல் நடத்தப்பட்டது. ஆனால் வடமாகாண சபைக்கு ஒரு முறை மட்டுமே தேர்தல் நடத்தப்பட்டு ஐந்து வருடங்கள் மட்டுமே இயங்க அனுமதிக்கப்பட்டது.

2006ல் மகிந்தவின் ஆட்சியின்போது ஜே.வி.பி.யினர் தாக்கல் செய்த வழக்கின் பிரகாரம் வடக்கும் கிழக்கும் இணைக்க முடியாதென உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இரு மாகாணங்களின் இணைப்பு என்பது அகால மரணமாக்கப்பட்டது. மொத்தத்தில் கடந்த 36 ஆண்டுகளாக தமிழருக்கான மாகாண சபை நிர்வாகம் களிமண் பொம்மையாகவே அமைந்தது. தமிழர்களின் காணி பறிப்பு, தமிழர் வழிபாட்டு இடங்களின் உரிமை மறுப்பு, தமிழர் நிலங்கள் தொடர்பான நீதிமன்றங்களின் தீர்ப்பு உதாசீனம் என்பவை இனப்பாகுபாடும் இனரீதியான தாக்குதலும் அதிகரிக்க வழிவகுத்தது.

இவற்றுக்கு நிரந்தர தீர்வு காணப்படுமென பல தடவை பகிரங்கமாக உறுதியளித்த ரணிலின் ஏமாற்றம் தரும் செயற்பாடு ஒரு வருடத்துக்குள்ளேயே அம்பலமாகிவிட்டது. இந்திய பிரதமர் மோடியுடன் யூலை 21 சந்திப்பு ஒரு நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதற்கு முதல் கொழும்பில் தமிழர் தரப்புடன் அவர் நடத்திய சந்திப்பும் அவரது பேச்சும் செயற்பாடும் அந்த நம்பிக்கையில் கீறலை ஏற்படுத்தியது.

மோடியுடனான சந்திப்பின் பின்னர், இலங்கை அரசமைப்பின் 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தி தமிழர் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் வாழ்வதை இலங்கை உறுதி செய்ய வேண்டுமென ரணிலிடம் பிரதமர் மோடி எடுத்துக் கூறியதாக புதுடில்லி சந்திப்பின் பின்னர் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போதுள்ள நிலைமையில் இது போதுமானதாக தெரியவில்லை. கடந்த மூன்று தசாப்தமாக இந்தியா இதனைத் தான் கூறி வருகிறது. ஆனால் சிங்கள தேசத்துக்கு இது செவிடன் காது சங்கு. சிங்கள அரசியல் கட்சிகளை எதிர்த்து ரணிலினால் எதனையும் செய்ய முடியாது என்கிற பார்வை பரவலாக தோற்றம் அளிக்கிறது. இதனை இந்தியாவால் கையாள முடியும்.

1971 ஏப்ரல் ஜே.வி.பி. புரட்சியின் போது அதனை முறியடித்து பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கவுக்கு பாதுகாப்பளிக்க இந்தியப்படை இலங்கையைச் சுற்றி காத்து நின்றது. 1987 யூலை ராஜிவ் - ஜே.ஆர். ஒப்பந்தத்தின்போது ஜே.ஆருக்கும் அவரது அரசாங்கத்துக்கும் பாதுகாப்பளிக்க இந்திய முப்படைகளும் கொழும்புக் கடலில் சுற்றி நின்றன.

அவ்வாறான ஒரு பாதுகாப்பை ரணிலுக்கு வழங்கி அதனூடாக அதிகாரப் பகிர்வை - 13ம் திருத்தத்தினூடாக நடைமுறைப்படுத்த இந்தியா விரும்பினால் செய்ய முடியும்.

இதனைச் செய்யாது, ஈழத்தமிழரின் தலைநகரமாக விளங்கும் திருகோணமலையை வலுசக்தி மையமாக அபிவிருத்தி செய்வது குறித்து ரணிலும் மோடியும் விரிவாக ஆராய்ந்துள்ளனர் என வெளிவரும் தகவல், தனது நலனுக்காக தமிழர் பிரச்சனையை இந்தியா ஒரு துரும்பாக பயன்படுத்துகிறதா என்ற சந்தேகம் ஏற்படுவதை தவிர்க்க முடியவில்லை.




## ஜெயிலர் இசை வெளியீடு

நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடிப்பில் வெளியீட்டுக்கு தயாராகி வரும் திரைப் படம் ஜெயிலர். அனிருத் இசையமைக்கிறார். இதில் மோகன்லால், சிவராஜ் குமார், ஜாக்கி ஷெராப், சுனில், தமன்னா, மிர்ணா ஆகியோர் முக்கிய கதாபாத் திரங்களில் நடித்துள்ளனர்.

ஏற்கனவே இந்த படத்திலிருந்து வெளிவந்த இரண்டு பாடல்களும் ரசிகர்களிடையே வரவேற் பைப் பெற்றன. இந்த நிலையில் இந்த படத்தின் இசை வெளியீட்டு விழா வருகின்ற 28ஆம் திகதி சென்னை யில் நடைபெறும் என படக்குழுவினர்கள் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளனர்.


## மீண்டும் தமிழில் டாப்ஸி

வெற்றிமாறன் இயக்கிய ஆடுகளம் படத்தில் தனுஸூக்கு இணையாக நடித்தவர் டாப்சி. அதன் பிறகு ஆரம்பம், வந்தான் வென்றான் என பல படங்களில் நடித்தவர், 2021ம் ஆண்டு விஜய் சேதுபதிக்கு ஜோடியாக அனபெல் சேதுபதி என்ற படத்தில் நடித்திருந்தார்.

இந்த நிலையில் மீண்டும் தான் ஒரு தமிழ் படத்தில் நடித்து வருவதாக அவர் ஒரு தகவல் வெளியிட்டு இருக்கிறார். அதில், ஏலியன் சம்பந்தப்பட்ட கதையில் உருவாகி வரும் இந்த படத்தின் படப்பிடிப்பு தற் போது நடைபெற்று வருகிறது. இது ஓர் அழுத்தமான கதைக்களத்தில் உருவாகிறது. நான் இதில் ஏலியனாக நடிக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார் டாப்சி.

அதோடு ஏற்கனவே நான் நடித்து வெளியான கேம் ஓவர் படத்தை ரசித்தவர்களுக்கு இந்த படம் கண்டிப் பாக பிடிக்கும். இந்த படத்தில் நடிப்பது எனக்கு ஒரு வித்தியாசமான அனுபவமாக இருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.






## அதிரடி நாயகியாக நயன்

அட்லீ இயக்கத்தில், அனிருத் இசையமைப்பில், ஷாரூக்கான், நயன்தாரா, விஜய் சேதுபதி மற்றும் பலர் நடிக்கும் ஹிந்திப் படம் “ஜவான்“. இந்தப் படம் செப்ரெம்பர் 7ஆம் திகதி ஹிந்தி, தமிழ், தெலுங்கில் வெளியாகவுள்ளது.

தற்போது படத்தின் ஒவ்வொரு கதாபாத்திரத் தையும் அறிமுகப்படுத்தி போஸ்ரர்களை வெளியிட்டு வருகிறார்கள். நான்கு நாட்களுக்கு முன்பு “மொட்டை” தோற்றத்தில் உள்ள ஷாரூக்கின் போஸ் ரரை வெளி யிட்டார்கள். அடுத்து நயன்தாராவின் போஸ்ரரை வெளியிட்டனர்.

கையில் துப்பாக்கியுடன் நிற்கும் நயன்தாராவின் போஸ்ரரைப் பார்த்தால் அவர் படத்தில் அதிரடி நாய கியாக நடித்திருக்கிறார் என்பதை உறுதிபடுத்துகிறது. நயன்தாரா அறிமுகமாகும் ஹிந்திப் படம் இது என்ப தால் ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். தமி ழைப் போலவே ஹிந்தியிலும் நயன்தாரா வரவேற்பைப் பெறுவாரா என்பதை பொறுத்திருந்தே பார்க்கலாம்.

## ஹிந்தியில் ‘மாநாடு’



கடந்த 2021ஆம் ஆண்டில் வெங்கட் பிரபு இயக்கத்தில் சிலம்பரசன், எஸ்.ஜே. சூர்யா, கல்யாணி பிரி யதர்ஷன் உள்ளிட் டோர் நடித்து வெளி வந்த திரைப்படம் மாநாடு. இந்தப் படம் சிம்புவுக்கு சிறந்த மீள்வருகையாக அமைந்தது. இந்த படத்துக்கு விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் வரவேற்பை பெற்றது.

இந்த படத்தின் தெலுங்கு மீளுருவாக்கத்தில் ரவி தேஜா நடிக்கவுள்ளார். தற்போது இதன் ஹிந்தி மீளுருவாக்கத்தை நடிகர் ராணா டகுபதி கைப்பற்றி யுள்ளார்.இதில் நடிக்க பொலிவூட் நடிகர் வருண் தவான் உடன் பேச்சு நடக்கிறது.

## பொலிவூட் செல்லும் கீர்த்தி



கடந்த 2016ஆம் ஆண்டில் அட்லீ இயக்கத்தில் விஜய், சமந்தா, எமி ஜக்சன் நடித்து வெளி வந்த திரைப்படம் தெறி. இந்த படத்தை தற்போது ஹிந்தியில் மீளுருவாக்கம் செய் வதாக கூறப்படு கிறது. அட்லீ மற்றும் பிரபல ஹிந்தி தயாரிப்பாளர் முராத் கெதானி இருவரும் இணைந்து இந்தப் படத்தை தயாரிக்கின்றனர். பொலிவூட் நடிகர் வருண் தவான் கதாநாயகனாக நடிக்கும் இந்தப் படத்தை இயக்குநர் காளிஸ் இயக்குகிறார்.

இந்த படத்தில் கதாநாயகியாக நடிக்க கீர்த்தி சுரேஷ் உடன் பேச்சு நடைபெற்று வருகிறது. ஒருவேளை இந்த படத்தில் கீர்த்தி சுரேஷ் நடித்தால் இதுதான் இவரின் முதல் ஹிந்தி படமாகும். இந்த படத்தின் படப்பிடிப்பு வருகின்ற ஓகஸ்ட் மாதம் தொடங்கவுள்ளது.




**திரைப்படம் - கொலை**
**இயக்கம் - பாலாஜி கே குமார்**
**இசை - கிரிஷ் கோபாலகிருஷ்ணன்**
**நடிப்பு - விஜய் ஆண்டனி, ரித்திகா சிங், மீனாட்சி சவுத்ரி**




படத்தின் தலைப்பே இது என்ன மாதிரியான படம் என்பதை புரிய வைக்கிறது. ஒரு கொலை, அந்தக் கொலை எதற்காக, யாரால் நடத்தப்பட்டது, அதை செய்தது யார் ? என்பதுதான் இந்தப் படத்தின் கதை.

பத்து வருடங்களுக்கு முன்பு வெளிவந்த “விடியும் முன்“ என்ற குற்றம் நிறைந்த த்ரில் கதையைக் கொடுத்த இயக்குநர் பாலாஜி கே குமார், மீண்டும் அதேபாணியில் ‘கொலை’ படத்தைக் கொடுத்திருக் கிறார். படத்தின் உருவாக்கம், அரங்க அமைப்பு, காட்சிகளின் கோணம், விசாரணை, ஒளிப்பதிவு, பின்னணி இசை ஆகியவை இந்தப் படத்தைப் பற்றிப் பேச வைக்கின்றன.

பிரபல மொடலான மீனாட்சி சவுத்ரி அவரின் அபார்ட்மென்ட்டில் கொல்லப்படுகிறார். அந்த வழக்கு பற்றிய விசாரணையை காவல் துறை அதிகாரியான ரித்திகா சிங் நடத்த ஆரம்பிக்கிறார். உதவிக்காக முன்னாள் பொலிஸ் அதிகாரியான விஜய் ஆண்டனியை அழைக்கிறார். மீனாட்சியின் நண்பர் சித்தார்த்தா சங்கர், மொடல் போட்டோகிராபர் அர்ஜ/ன் சிதம்பரம், மொடல் ஏஜன்ட் முரளி சர்மா, மீனாட்சியின் முகாமை யாளர் என சொல்லிக் கொள்ளும் கிஷோர்குமார் ஆகியோர் சந்தேக வலையில் சிக்கு கிறார்கள். இவர்களில் யாராவது மீனாட்சியை கொன் றார்களா அல்லது வேறு யாரும் கொன்றார்களா என்பதை விஜய் ஆண்டனி, ரித்திகா எப்படி கண்டு பிடிக்கிறார்கள் என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

மனைவியை பிரிந்தும், கல்லூரி செல்லும் வயது டைய மகள் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் நிலையிலும் விஜய் ஆண்டனி இந்த வழக்கில் தன்னை ஈடுபடுத்தி கொள்கிறார். நடுத்தர வயது தோற்றம் என்பதால் விஜய் ஆண்டனியிடம் கொஞ்சம் மாற றத்தை ஏற்படுத்தியிருக்கிறார் இயக்குநர். ஆனாலும், முந்தைய படங்களில் பார்த்ததைப் போலவே, அதே உடல் மொழியுடனும் பேச்சுடனும் நடித்திருக்கிறார் விஜய் ஆண்டனி. படத்துக்கு படம் கதாபாத்திரத்திற் கேற்றபடி கொஞ்சம் மாற்றி நடித்தால் அவருக்கு நல்லது. இந்தப் படத்தில் தோற்றத்தில் மாறிவிட்டார் நடிப்பிலும் இனி மாறுவார் என எதிர்பார்க்கலாம்.

மேலதிகாரியான ஜோன் விஜயின் எதிர்ப்பையும் மீறி விஜய் ஆண்டனியை தனக்கு உதவி செய்ய வருமாறு அழைத்து சேர்த்துக் கொள்கிறார் ரித்திகா சிங். நிதானமாகவும் அக்கறையாகவும் எந்த அலட் டலும் இல்லாமல் தன் கதாபாத்திரத்தில் நடித்து ரசிக்க வைக்கிறார் ரித்திகா.

மற்ற கதாபாத்திரங்களுக்கும் படத்தில் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார் இயக்குநர். கொல்லப்படும் மொடலாக அறிமுக நடிகை மீனாட்சி சவுத்ரி. மொடல் என்று சரியாக நம்பும் அளவுக்கு நல்ல தேர்வு. அறிமுகப் படத்திலேயே கவனம் ஈர்க்கிறார். மீனாட்சியின் நண்பர் சித்தார்த்தா சங்கர், மொடல் போட்டோகிராபர் அர்ஜூன் சிதம் பரம், மொடல் ஏஜன்ட் முரளி சர்மா, மீனாட்சியின் முகா மையாளர் என சொல்லிக் கொள்ளும் கிஷோர் குமார் ஆகியோர் அவரவர் கதாபாத்திரங் களில் தங்களை சரியாகப் பொருத்திக் கொண்டிருக்கிறார்கள். ராதிகா சரத்குமார் ஓரிரு காட்சிகளில் மட்டுமே வந்து போகிறார்.

படத்தின் இயக்குநர் பாலாஜி கே குமார் ஹொலி வூட் படங்களில் பணியாற்றியவர் என்பதால் ஹொலி வூட் படங்களுக்குரிய ஸ்ரைலை தமிழிலும் கொடுக்க வேண்டும் என்று முயற்சித்திருக்கிறார். அவருடைய எண்ணத்துக்கு ஒளிப்பதிவாளர் சிவகுமார் விஜயன், இசையமைப்பாளர் கிரிஷ் கோபாலகிருஷ்ணன், எடிட்டர் ஆர். கே. செல்வா சரியான ஒத்துழைப்பை தந்திருக்கிறார்கள்.


ஆரம்பத்திலேயே நாம் குறிப்பிட்டபடி ‘உருவாக் கம்’ இந்தப் படத்தில் சிறப்பாக இருந்தாலும், உணர்வு பூர்வமாக நம் மனதைத் தொட மறுக்கிறது. கொல்லப் பட்டவர் மீது நமக்கு அனுதாபம் வந்தால்தான் அந்த உணர்வு கிடைக்கும். நடக்கும் விசாரணை மர்மமாகக் கடந்து போனாலும் சிலதை தவறவிட்டதாக என்று தோன்றுகிறது.

# ரென்னிஸ் உலகின் புதிய நாயகன் அல்கராஸ்

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்று ரென்னிஸ் உலகை திரும்பி பார்க்க வைத்துள்ளார் முதல் நிலை வீரரான - 20 வயதே ஆன ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ்.

இறுதிப் போட்டியில் 2-ம் நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜொகோவிச்சை 1-6, 7-6(6), 6-1, 3-6, 6-4 என்ற செற் கணக்கில் வீழ்த்தினார் அல்கராஸ். இந்த ஆட்டம் 4 மணி நேரம் 43 நிமிடங்கள் நடைபெற்றது. இந்த வெற்றியின் மூலம் புல் தரை கிராண்ட் ஸ்லாம் போட்டியில் தொடர்ச்சியாக 34 வெற்றிகளை குவித்த ஜொகோவிச்சின் வெற்றி வேட்டைக்கு தடை போட்டுள்ளார் அல்கராஸ். ஸ்பெயினின் ஜாம்பவான் ரபேல் நடால் போன்றே அல்கராஸும் களிமண் தரை ஆடுகளம் மற்றும் கடின தரை ஆடுகளங்களிலேயே தனது முத்திரையை பதித்து வந்தார். இதனால் அல்கராஸை, ஜொகோவிச் எளிதாக வீழ்த்தி 8ஆவது முறையாக கிண்ணத்தை கையில் ஏந்திவிடலாம் என்ற நினைப்புடன் களமிறங்கினார்.

அதற்கு தகுந்தவாறே முதல் செற்றை ஆதிக்கப் போக்குடன் 6-1 என கைப்பற்றினார். ஆனால் 2ஆவது செற்றை ரைபிறேக்கர் வரை கொண்டு சென்று தன்வசப்படுத்தினார் அல்கராஸ். அவரது ஆட்டத்திறன் அவர்,ஏன் ரென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கிறார் என்பதை நிரூபிக்கும் வகையில் இருந் தது. அங்கேயே ஜொகோவிச் தனது நிதானத்தையும் ஆட்டத்தின் போக்கை யும் நழுவவிடத் தொடங்கினார். மறு புறம் உற்சாகமாக செயல்பட்ட அல் கராஸ், 3ஆவது செற்றில் ஜொகோ விச்சை எழவிடாமல் 6-1 என கைப்பற்றி அதிர்ச்சி கொடுத்தார். 4ஆவது செற்றில் ஜொகோவிச் மீண்டு வந்து 6-3 என கைப்பற்றினார். வெற்றியை தீர்மானித்த கடைசி செற்றில் ஜொகோவிச் 2-0 என முன்னிலையில் இருந்தார். ஆனால் அல்கராஸ், ஜொகோவிச் செய்த தவறுகளை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு புள்ளிகளை குவித்து முன்னேற்றம் கண்டார். முடிவில் 6-4 என கடைசி செற்றை கைப்பற்றி முதன்முறையாக



விம்பிள்டனில் வாகை சூடினார்.

ரென்னிஸ் அரங்கில் ஜொகோவிச் 50 முறை ரோஜர் பெடரருக்கு எதிராக விளையாடி உள்ளார். இதில் 17 ஆட்டங்கள் கிராண்ட் ஸ்லாம் தொடர்களில் மோதியவை. அதேவேளையில் ரபேல் நடாலுக்கு எதிராக 59 முறை மோதியுள்ளார் ஜொகோவிச். இதில் 18 ஆட்டங்கள் கிராண்ட் ஸ்லாம் தொடரில் மோதியவை. இவர்களுக்கு ஊடாக இங்கிலாந்தின் அன்டி முர்ரேவுடனும் போராட தவறவில்லை ஜொகோவிச். அவருக்கு எதிராக 10 கிராண்ட் ஸ்லாம் ஆட்டங்கள் உட்பட 36 முறை மோதினார்.

பெடரர் ஓய்வு பெற்றுவிட்டார். ரபேல் நடால் காயம் காரணமாக நீண்ட காலம் விளையாடாமல் உள்ளார். 20 வருடங்களில் ரென்னிஸ் உலகை ஆண்ட இரு ஜாம்பவான்களுடன் மல்லுக்கட்டிய ஜொகோவிச், தற்போது 20 வயதான ஸ்பெயின் புயலான அல்கராஸு டன் போராட வேண்டிய நிலையில் உள்ளார். விம்பிள்டன் போட்டி முடிவடைந்துள்ள நிலையில் அடுத்ததாக ஆண்டின் கடைசி கிராண்ட் ஸ்லாம் தொடரான அமெரிக்க ஓப்பன் அடுத்த மாத இறுதியில் நடைபெறவுள்ளது. இதிலும் ஜொகோவிச்சுக்கும் அல்கராஸ் கடும் சவால் அளிக்கக்கூடும். ஏனெனில், அல்கராஸ் நடப்பு சம்பியனாக உள்ளார்.

# வெற்றிக்கான கோல்

உதைபந்தாட்ட உலகின் நட்சத்திர ஆட்டக்காரர்களில் ஒருவர் லயனல் மெஸ்ஸி. ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த இவர் தற்போது இன்ரர் மியாமி உதை பந்தாட்ட அணிக்காக விளையாடி வருகிறார்.

அண்மையில்தான் இந்த கழக அணியில் அவர் இணைந்தார். வெள்ளிக்கிழமை நடைபெற்ற போட்டியில் முதல் முறையாக இன்டர் மியாமி அணிக்காக அவர் களம் இறங்கினார். தனது முதல் போட்டியில் அணியின் வெற்றிக்கு தேவைப்பட்ட கோலை பதிவு செய்து அசத்தினார். அதன் மூலம் லீக்ஸ் கோப்பை தொடரில் குரூஸ் அசூல் அணியை 2-1 என்ற கோல் கணக்கில் இன்டர் மியாமி அணி வீழ்த்தியது.

ஆர்ஜென்ரீனா உதைபந்தாட்ட அணியின் தலைவரான லயனல் மெஸ்ஸி, கடந்த ஆண்டு கட்டாரில் நடைபெற்ற உலகக் கிண்ண உதைபந்து போட்டியில் சிறப்பாக விளையாடி அணிக்கு கிண்ணத்தைப் பெற்றுத் தந்தார்.

கழக அளவிலான போட்டிகளில் பார்சிலோனா மற்றும் பி. எஸ். ஜி. அணிக்காக கடந்த காலங்களில் விளையாடி உள்ளார். தற்போது அமெரிக்க நாட்டு கழக அணியான இன்டர் மியாமி அணிக்காக விளையாட இரண்டரை ஆண்டு காலம் ஒப்பந்தம் செய்துள்ளார். வரும் 2026 உதைபந்தாட்ட உலகக் கிண்ணத் தொடர் அமெரிக்க, மெக்சிக்கோ மற்றும் கனடாவில்தான் நடைபெற உள்ளது. அந்த வகையில் மெஸ்ஸியின் வருகை அமெரிக்க அளவில் உதை பந்து விளையாட்டில் புதிய பாய்ச்சலை ஏற்படுத்தும் என தெரிகிறது.





# அணி மாறும் எம்பாப்பே?

ஆசிய சுற்றுப் பயணத்துக்கான பி. எஸ். ஜி. உதைபந்தாட்ட கழக அணியில் நட்சத்திர வீரர் கிலியன் எம்பாப்பே இடம்பெறவில்லை. இந்நிலையில், அவர் வேறு அணிக்கு செல்கிறாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. அது குறித்து பார்ப்போம்.

24 வயதான எம்பாப்பே, சர்வதேச உதைபந்தாட்ட போட்டிகளில் பிரான்ஸ் நாட்டுக்காக விளையாடி வருகிறார். அந்த அணியின் பிரதான ஸ்ட்ரைக்கராக அவர் உள்ளார். ரொனால்டோ, மெஸ்ஸி போன்ற வீரர்களை தொடர்ந்து அடுத்த தலைமுறையை சேர்ந்த நட்சத்திர ஆட்டக்காரராகவும் அறியப்படுகிறார்.

கழக அளவிலான போட்டிகளில் பிரான்ஸ் நாட்டின் பி. எஸ். ஜி. அணிக்காக கடந்த 2017 முதல் விளையாடி வருகிறார். இதுவரை பி. எஸ். ஜி. அணிக்காக 260 போட்டிகளில் 212 கோல்கள் பதிவு செய்துள்ளார். இந்த நிலையில்தான் அந்த அணியின் ஆசிய நாட்டு சுற்றுப்பயணத்தில் எம்பாப்பே இடம்பெறவில்லை. இந்த பயணத்தில் ஜப்பான் மற்றும் தென் கொரியாவில் பி. எஸ். ஜி. அணி விளையாடுகிறது. இதில் ரொனால்டோ விளையாடி வரும் கழக அணியான அல்-நசர் அணிக்கு எதிராகவும் பி. எஸ். ஜி. விளையாடுகிறது.

வெள்ளிக்கிழமை வரை பி. எஸ். ஜி. அணியில் எம்பாப்பே பயிற்சி செய்து வந்துள்ளார். ஆனால், சனிக்கிழமை ஆசியா புறப்பட்ட 29 வீரர்கள் அடங்கிய அணியில் அவருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. இந்தப் பயணத்தில் அவரின் சகோதரர் எத்தன் எம்பாப்பே இடம்பெற்றுள்ளார்.

அடுத்த தொடரில் ஸ்பெயின் நாட்டின் ரியல் மட்ரிட் கிளப் அணியில் எம்பாப்பே இணைய உள்ளார் என்று சொல்லப்பட்டு வருகிறது. மறுபக்கம் அவரை தக்கவைக்க சுமார் 10 ஆண்டு காலம் ஒப்பந்தம் மேற்கொள்ள பி. எஸ். ஜி. முனைப்பு காட்டியுள்ளது. அதற்கு எம்பாப்பே தரப்பில் முறையான பதில் ஏதும் இல்லை எனத் தெரிகிறது. இந்த நிலையில்தான் அவரை ஆசிய பயணத்துக்கான அணியில் வாய்ப்பு கொடுக்க மறுத்துள்ளது பி. எஸ். ஜி. அணி நிர்வாகம். அவரை உடனடியாக அணியில் இருந்து விடுவிக்க பி. எஸ். ஜி. திட்டமிட்டு வருவதாகவும் பிரான்ஸ் நாட்டில் இருந்து வரும் தகவல்கள் சொல்கின்றன.

# புலம்பெயர் மடல்

**குரு அரவிந்தன்**




# நடேஸ்வரக் கல்லூரி பழைய மாணவர்களின் ஒன்றுகூடல் - 2023

சென்ற சனிக்கிழமை 15-7-2023 கனடாவில் உள்ள காங்கேசந்துறை நடேஸ்வரக்கல்லூரி பழைய மாணவர்களின் ஒன்றுகூடல் ஸ்காபரோ மக்கோவான் வீதியில் உள்ள மிலிகன் பூங்காவில் இடம் பெற்றது. அவ்வப்போது மழை தூறிக்கொண்டு இருந்தாலும், பழைய மாணவர்கள் அதைப் பொருட்படுத்தாது, குடும்பத்துடன் வந்து ஒன்று கூடலில் கலந்து கொண்டனர். கனடாவில் உள்ள பழைய மாணவர்களின் குடும்பத்தினரும், கனடாவின் வெளி மாகாணங்கள், மற்றும் வெளிநாடுகளில் இருந்து வந்த பழைய மாணவர்களும் இந்த நிகழ்வில் பங்கு பற்றிக் கலந்துரையாடிச் சிறப்பித்திருந்தனர்.

போர் சூழல் காரணமாக காங்கேசந்துறை நடேஸ்வரக்கல்லூரி பல இடங்களுக்கு இடம் பெயர்ந்திருந்தது. ஏனைய கல்லூரிகள் போலவே நடேஸ்வரக் கல்லூரியும் கடந்த காலங்களில் இராணுவ முகாமாகச் செயற்பட்டு வந்தது மட்டுமல்ல, அதியுயர்பாதுகாப்பு வலயமாகவும் இப்பகுதி அறிவிக்கப்பட்டது. இதனால் இப்பகுதி மக்களும் தாங்கள் வாழ்ந்த பரம்பரை நிலங்களை விட்டு வெளியேற வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டது. கடந்த 30 வருடங்களாக இப்பகுதியில் வாழ்ந்த மாணவர்களின் கல்வி இதன் காரணமாக மறைமுகமாகத் தடுக்கப்பட்டிருந்தது. ஒரு தலைமுறையினர் தகுந்த கல்வியைப் பெறமுடியாமல், தமது கல்வி கற்கும் வாய்ப்பை இதனால் இழந்திருந்தார்கள்.

இப்பகுதி மக்களின் விடா முயற்சியால் சில பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டு, மீண்டும் மக்கள் தங்கள் சொந்த நிலங்களில் வாழத் தொடங்கியுள்ளனர். வழிபாட்டுத் தலங்கள் தரைமட்டமாக்கப்பட்டதால் அவற்றைக் கட்டி எழுப்ப முற்பட்டனர். போர்க் காலத்தில் புலம் பெயர்ந்த பழைய மாணவர்களில் உதவியுடன் கல்விக்கூடமான நடேஸ்வராக் கல்லூரியும் மீண்டும் ஓரளவு கட்டி எழுப்பப்பட்டிருக்கின்றது. கல்லூரி வீதியின் கிழக்குப் பக்கத்தில் இராணுவ முகாம் எல்லை இப்பொழுதும் இருப்பதால் அப்பகுதி வீதி பொது மக்கள் பாவனைக்கு இன்னமும் திறந்து விடப்படவிலை.

கனடா பழைய மாணவர் சங்கம் கல்லூரிக்கும், ஆசிரியர், மாணவர்களுக்கும் தேவையான பொருளாதார உதவிகளைச் செய்து வருகின்றது. வகுப்பறைகளை உருவாக்கியும், விளையாட்டு மைதானத்தை திருத்தியும், கல்லூரி வளாகத்தில் இருந்த காளி கோயிலைப் புனரமைப்புச் செய்தும் கல்வி கற்பதற்கான சூழலை உருவாக்கி இருக்கின்றது.

மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களையும் வழங்கி வருகின்றது. மாணவர்களின் பாதுகாப்புக் கருதி கல்லூரி எல்லை மதில்களும் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதைவிட போக்குவரத்து வசதியற்ற மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகளும் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பேருந்துச் சேவைகளும் சில பகுதிகளுக்கு ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ள வந்தவர்களுக்கு காலை, மதிய உணவுகளும் சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டன. குடும்பத்தில் ஏற்பட்ட துயர நிகழ்வுகாரணமாகத் தலைவர் ரகுவரனால் நிகழ்வில் பங்கேற்க முடியவில்லை. மன்றத்தின் காப்பாளர்களான பி. விக்னேஸ்வரன், குரு அரவிந்தன் மற்றும் முன்னாள் தலைவர்களும் நிகழ்வில் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். கல்லூரியின் எதிர்கால முன்னேற்றத்திற்கு என்னென்ன உதவிகளை இங்கிருந்து வழங்கலாம் என்பது பற்றியும் உரையாடலின் போது, மன்ற அங்கத்தவர்களின் ஆலோசனை பெறப்பட்டது. அத்துடன் மாலை நேரம் நிகழ்வு இனிதே முடிவுற்றது.

---

# வியுக்தியார் பதில்கள்



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**ஜி.கிருசாந்தன், சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, தமிழ் மக்கள் கண்ணியத்துடனும் மரியாதையுடன் வாழ்வதை இலங்கை உறுதி செய்யவேண்டும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி நமது ஜனாதிபதியை சந்தித்தபோது கூறியிருக்கிறாராமே.?

**வியுக்தியார்:** 'நீங்கள் தான் சொல்கிறீர்கள் பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்தினால் தமிழர்கள் கண்ணியத்துடன் வாழலாம் என்று. ஆனால் அங்குள்ள தமிழர்களின் தலைவர்கள் அப்படிச் சொல்லவில்லையே" என்று ரணிலர் பதிலளித்திருப்பாரோ தெரியவில்லையே.

**கேள்வி:** வைத்தியசாலைகளின் நிர்வாக சபைக்கு, மலர்சாலையின் உரிமையாளரையும் இணைத்துக் கொள்ள வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளாரே?

**வியுக்தியார்:** நாட்டையும் மக்களையும் பாதுகாக்க வேண்டிய இராணுவத்தில் தானும் இருந்ததைப்போல என்று சொல்கிறாரோ தெரியவில்லை.

---

**ந. ராஜேந்திரன் அராலி வடக்கு, அராலி.**

**கேள்வி:** வடக்குக்கு சென்று, தமிழ் மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடிய கனேடிய தூதுவரை நாட்டிலிருந்து அரசாங்கம் உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்று ஆளும்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்திருக்கிறாரே. ஒரு தூதுவர் அப்படி சந்திப்பது தவறானதா?.

**வியுக்தியார்:** ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு பாராளுமன்றத்தில் என்ன பேசவேண்டுமானாலும் பேசுவதற்கு சிறப்புரிமை இருக்கிறது. அவர் தான் நினைப்பதை எதைவேண்டுமானாலும் பேசிவிடலாம். ஒரு தடவை நமது உறுப்பினர் ஒருவரும் யாழ்ப்பாணத்திலுள்ள படையினரை அனுப்பிவைக்க முப்பதாயிரம் சவப்பெட்டிகளை அனுப்பிவையுங்கள் என்று பேசியது உங்களுக்குத் தெரியுமோ தெரியவில்லை. இவை எல்லாமே பாராளுமன்ற சிறப்புரிமை செய்கின்ற வேலைதான். மனிநோயாளி போல செயற்படும் அவரை பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றவேண்டும் என்று நமது ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கூறியதுதான் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

---

**எஸ். சுதர்மன், திமிலத்தீவு, மட்டக்களப்பு.**

**கேள்வி:** இலங்கைத் தலைவர்களை இந்தியா அழைக்கும்போது அவர்கள் கப டத்தனமான விடயங்களை செய்து தப்பித்துக் கொள்கிறார்கள் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குற்றம் சுமத்தியுள்ளாரே. இவர் என்ன சொல்ல வருகிறார் என்று உங்களுக்குப் புரிகின்றதா?

**வியுக்தியார்:** அவர் சொல்வது ஒன்றுதான் எனக்குப் புரிகின்றது. இந்தியாவை இலங்கை ஏமாற்றுகின்றது என்கிறார். அதாவது இந்தியவையே ஏமாற்றுகின்ற திறமை இலங்கைத் தலைவர்களுக்கு இருக்கின்றது என்கிறார் அவர். மறைமுகமாக இலங்கை தலைவர்களை புகழ்கிறாரோ தெரியவில்லை.

**எஸ். சுகிர்தகுமார், திருக்கோவில், அம்பாறை.**

**கேள்வி:** ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களை ஏமாற்றுகிறார் என்றும் அவர் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு தரமாட்டார், அவரிடம் தீர்வை எதிர்பார்ப்பது முட் டாள்தனமானது என்று எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக் கள் சக்தி (ஜே. வி.பி) ஆகிய கட்சிகள் தெரிவித்துள்ளனவே.

**வியுக்தியார்:** ரணில் ஏமாற்றுகிறாரா இல்லையா என்பது இருக்கட்டும். அவர்கள் முதலில் தாங்கள் தமிழ் மகக்ளை ஏமாற்றவில்லை என்பதையல்லவா நிருபிக்க வேண்டும். ரணில் விக்கிரமசிங்க, பதின்மூன்றை பொலிஸ் அதிகாரம் இல்லாமல் என்றாலும் அமுல் படுத்துகிறேன் என்கிறார். ஆனால் இவர்கள் தாம் ஆட்சிக்கு வந்தால் எதனைச் செய்வார்கள் என்பதை பகிரங்கமாக முதலில் சொல்லவேண்டுமே.

---


**கே. அனுராஜ், மட்டுவில், சாவகச்சேரி.**

**கேள்வி:** 'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினைத்தால் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தி நாம் கோரும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்க முடியும். 13ஐ நடைமுறைப்படுத்த அவருக்கு அனைத்துக் கட்சிகளின் ஆதரவும் தேவையில்லை. அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர். பாராளுமன்றத்தின் பெரும் பான்மை பலத்துடனேயே பதவியில் இருக்கிறார்." என்று தமிழரசு கட்சியின் மூத்த தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளாரே. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ, பாராளுமன்றில் தன்னிடம் மூன்றில் இரண்டு பலம் இல்லை என்றும் அதனால் முழுமையாக அதனை அமுல்படுத்த முடியாது என்றும் கூறுகிறாரே? அப்போ யார் சொல்வது சரி என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்.

**வியுக்தியார்:** இதில் யார் சொல்வது சரி என்பது இருக்கட்டும். ஆனால் வடக்கு கிழக்கு தமிழ் எம்.பி.க்களுடனான கடைசிச் சந்திப்பில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்த தன்னிடம் மூன்றில் இரண்டு பலம் இல்லை என்று கூறியதை நானும் கேட்டேன். ஆனால் அவர் அப்படி சொல்கின்றபோது அங்கே நமது சம்பந்தன் ஐயாவும் இருந்தார். ஆனால் அவர் அப்போது வாய்திறக்கவில்லை. ஆனால் மறுநாள் ஊடகங்களிட மேயே மேலே சொன்னவாறு கூறியிருந்தார். சிலவேளை அவருக்கு ரணில் சொல்லும்போது கேட்கவில்லையோ தெரியவில்லை. ஆனால் பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவது என்பது, அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத் தத்தில் இருந்து ஏற்கனவே நீக்கப்பட்டுவிட்ட பல விடயங்களையும் மீண்டும் சட்டமாக கொண்டுவந்து நிறைவேற்றுவதன் மூலமே செய்யமுடியும். அப்படிச் செய்கின்றபோது அந்த சட்டங்களை நிறைவேற்ற மூன்றில் இரண்டு தேவை என்கிறார் ரணில் என்றுதான் தெரிகின்றது. அதுவல்ல எனக்கு உறுத்துவது, பதின்மூன்றை நடைமுறைப்படத்தி நாங்கள் கோருகின்ற அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை வழங்க முடியும் என்கிறார் சம்பந்தன். ஆனால் அவரது கட்சியின் பேச்சாளரோ, பதின்மூன்று நமக்கு தீர்வே இல்லை என்கிறாரே. அதுதான் ஒன்றும் புரியவில்லை.

# சந்தியா அப்பு

நாவாந்துறை
செ.டானியல் ஜீவா



எனக்கு பிடித்த மனிதர்கள் என்று என்னுடைய ஊரில் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் சிலர் தான் இருக்கி றார்கள். அவர்களில் சந்தியா அப்பு மிக முக்கியமானவர். வயது எண்பதை நெருங்கினாலும் சோர்வில்லாமல் உழைத்த மனுஷன். வாளிப்பான தேகம், விறைப்பான முறுக்கு ஏறிய தோல் பட்டைகள். ஒரு காலத்தில் பெயர் போன சிறகு வலைத் தொழிலாளியாக அறியப்பட்டவர். இப்போது விடு வலைத் தொழிலுக்கும், கூடு வைக்கிற தொழிலுக்கும் போய் வருகின்றார். எங்களுடைய ஊர் கோயிலில் இருக்கும் சிறிய அறை ஒன்றிலே நானும் என் தந்தையின் தகப்பனாரான செபஸ்தி என்று ஊரவர் அழைக்கும் செபஸ்தியார் அப்புவும் வசித்துவந்தோம். அப்பு வசிப்பதற்காகவே கோயில் நிர்வா கத்தினர் அந்த அறையை கொடுத்திருந்தார்கள். நாங்கள் எல்லோரும் அப்பையாவை அப்பு என்றுதான் அழைப்பது வழக்கம். அப்பு கோயிலில் சங்கிடத்தார் வேலை செய்கிறவர்.

நான் 14 வயது வரைக்கும் அங்கே இருந்து தான் பள்ளிக்குச் சென்று வந்தேன். ஒரு மார்கழி மாதக்குளிரோடு அப்புவின் உயிரும் அடங்கிப்போனது. அப்பு இறந்த பின்னர் நான் பள்ளிக்கூடத்துக்கு முழுக்குப் போட்டுவிட்டு கடல் தொழிலுக்குப் போகத் தொடங்கினேன். அப்புவோடு நான் இருந்த காலத்தில், ஒரு நாள் ஞாயிறு காலையில் அப்புவை தேடி ஒருவர் வந்தார். அவர்தான் சந்தியா. தென்மோடிக் கூத்தில் போட்ட ஒப்பனை கலையாத முகத்துடன் அவர் அங்கு வந்திருந்தார்.

“இவன் என்ர பேரன் கொஞ்சம் முசுப்பாத்தியாக எப்பவும் கதைப்பான்” என்று. சொல்லிக்கொண்டே அவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார் அப்பு.

முதல் நாள் இரவு நடந்த கூத்தில் கோமாளி வேடமணிந்த சந்தியாவின் நடிப்பை ஏற்கனவே நான் எங்கட அப்புவுக்கு நடித்துக் காட்டியபோது அவர் விழுந்து விழுந்து சிரித்து விட்டு

“அவர் நல்ல நடிகன், அதோட நல்ல மனுஷன். ஒருத்த ரைப் பார்த்து வா போ என்றுகூடக் கதைக் மாட்டார். மிக வும் மரியாதையாகப் பழகுபவர். சிறு வயதில் இருந்தே நாங்கள் நல்ல நண்பர்களாக இருக்கிறம். ஒருவகையில் அவரும் நம்மட சொந்தக் காரர்...!” என்று அப்பு சொன்னார். அவரைப் பற்றி சொல்லும் போது அப்புவின் கண்களில் ஏதோ ஒரு இனம் புரியாத கசிவும், இரக்கமும் கரைந்து இருந்ததை கூர்ந்து அவதானித்தேன். அப்பு தொடர்ந்து ஏதாவது அவரைப் பற்றி கதைப்பார் என்று எதிர் பார்த்தேன். ஆனால் அதற்குமேல் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தார். ஏதாவது சோகம் அவரது நெஞ்சை நிறைக்கும் போது, எதுவும் பேசாமல் அமைதியாகவே இருப்பது அவரது வழக்கம். என்னுடைய ஆச்சியின் மரணம் அவரை நடைப்பிணமாக்கிவிட்டது.

“அவடா சாவு நல்ல சாவுதாண்டா தம்பி. நித்திரையோடு உயிர் போச்சு மனிசிக்கு”. மூக்கை சீறிக்கொண்டு சேலைத் தலைப்பால் துடைத்து சுத்தம் செய்த படியே அம்மா பலமுறை சொல்வதை கேட்டிருக்கிறேன். ஆமாம் ஆச்சிக்கு அப்புவில சரியான பாசம். சந்தியா அப்புவை என்னுடைய கோயிலில் இருக்கும் அறையில் சந்திப்பதற்கு முதலே அவரை ஊரில் பல இடங்களில் கண்டிருக்கிறேன். ஆனால் ஒரு நாள் கூட கதைத்தது கிடையாது. மிகவும் நல்லவர் என்ற பெயர் அவருக்கு ஊரில் இருந்தது மட்டும் எனக்குத் தெரியும்.

அன்றுதான் அவரை முதல் முதலில் நேரில் சந்தித்து உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. அவருக்கும் கிட்டத்தட்ட அப்புவின் வயதே இருக்குமென்பதால், நான் அவரை சந்தியா அப்பு என்றே கூப்பிடத் தொடங்கினேன். அன்றிலிருந்து என்னுடைய அப்புவைப் போலவே அவரையும் நினைத்துப்பழகத் தொடங்கினேன்.

எங்கு கண்டாலும் என்னோடு பகடி விட்டு சிரிச்சுக் கிட்டே கதைப்பார். பொதுவான பேச்சு என்றாலும் சரி, படிப்பு, வாழ்க்கை விடயமானாலும் சரி உண்மை, நேர்மை, நேர்த்தி அவரிடம் நிறைவாக இருப்பதை நாளடைவில் உணர்ந்தேன். திருச்சபையில் உறைந்து கிடக்கும் தத்துவங்கள் அவருடைய வார்த்தைகளில் வழிந்து ஓடிக்கொண்டிருக்கும். ஒவ்வொரு முறையும் கதைக்கும் போது சொற்களை கூர்ந்து கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் போல் தோன்றும். குடிப்பழக்கம், சிகரட் போன்ற தீய பழக்க வழக்கங்கள் அவரி டம் இல்லை. சிறந்த உதை பந்தாட்ட வீரராகவும் ஊரில் திகழ்ந்தவர். சிறு வயதிலேயே தந்தையை இழந்து தவித்த போது அவருடைய அம்மா மீன் விற்று இவரை படிக்க வைத் தார். அதனால் பெற்ற தாய் மீது அளவற்ற அன்பு கொண் டவர். அதனல்தானோ என்னவோ, பெண்களை மதிக்கும் பண்பும் அவரிடம் நிறையவே இருந்ததை அவதானித்தேன். தன் தாய், தன் மீது வைத்திருந்த அன்பையும், அக்கறை யையும் பற்றி என்ணோடு கதைக்கும் போதெல்லாம் அடிக்கடி சொல்லுவார்.

எட்டாம் வகுப்பு வரை எங்கட ஊரில் இருக்கிற றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலையில் தான் கல்வி பயின்றார். அதன் பின் கொழும்புத்துறையில் இருக்கும் கத்தோலிக்க குரு மடத்தில் சேர்ந்து துறவியாக போவதற்காக படிக்கத் தொடங்கினார். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, சில ஆண்டுகள் மட்டுமே அவரால் படிக்க முடிந்தது. பின்னர் அவர் ஊரோடு வந்து ஒட்டிக் கொண்டார். குரு மடத்தில் சேர்ந்து படித்ததால் ஆங்கிலம் சரளமாக பேசவும், எழுதவும், வாசிக்கவும் அவரால் முடிந்தது. அதனால் ஊரில் பலருக்கு இலவசமாக ஆங்கிலம் கற்றுக் கொடுத்தார். ஆங்கிலம் கற்றுக் கொடுத்ததால் அவரை ‘இங்கிலிஷ் மாஸ்டர்’ என்றும் சிலர் அழைப்பதுண்டு. அப்படி அவரிடம் படிக்க வந்தவர்களில் எலிசபெத் என்ற மாணவியும் இருந்தாள். பிற்காலத்தில் நான் ஆச்சி என்று அன்போடு கூப்பிட்ட சந்தியா அப்புவின் மனைவிதான் எலிசபெத். எலிசபெத் ஆச்சி, அப்புவை ஒரு தலைப் பட்சமாக விரும்பினார் என்பது எவருக்குமே அப்போது தெரிந்திருக்கவில்லை. பெற்றோர்களாகவே பேசி இருவரையும் சேர்த்து வைக்க முடிவெடுத்த பின்புகூட எலிசபெத் அப்புவிடம் தன் காதலை வெளிக்காட்டவில்லை.

முப்பது ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் இது..! சந்தியா அப்புவிற்கும் எலிசபெத் ஆச்சிக்கும் திருமணம் செய்து வைப்பதற்கான முன் ஏற்பாடுகள் ஒரு ஞாயிற்றுக் கிழமை அன்று பின்னேரம் பூசை முடிந்த பின் நடைபெற்றது. அன்றுதான் இவர்கள் தனிமையில் சந்தித்துக் கொண்டார்கள். அந்தச் சந்திப்பை இப்போது நினைத்தாலும் சந்தியா அப்பு விழுந்து விழுந்து சிரிப்பார். அவர் சிரிக்கும் பொழுது உலகத் துக்கே கேட்கும் படி இருக்கும். திருமண ஏற்பாட்டுக்கான சம்பிரதாயங்கள் முடிந்த பின்னர், அன்று மாலையில் அவர் கள் இருவரும் தனிமையில் அருகருகே இருந்தபடி இப்படித் தான் கதைத்தார்கள்.

“ என்னை உங்களுக்குப் பிடிக்குமா?” சந்தியா அப்பு கேட்டார்.

“என்னுங்கோ இப்படி கேக்குறீங்க? உங்கள நான் றொம்ப நாளாகவே விரும்பி இருந்தனான். உங்ககிட்ட டியூசனுக்கு வந்ததே உங்களைப் பாக்குறதுக்கு தானுங்க. அப்பவே நான் முடிவெடுத்திட்டேன், கல்யாணம் செய்தா உங்களத்தான் செய்ய வேணும் எண்டு. ஆனா உங்க கிட்ட விருப்பத்தை சொல்லுறதுக்கு பயமா இருந்திச்சு. அதனால் தான் மனசில இருந்த விருப்பத்தை மூடி மறைச்சிட்டேன். இப்ப கூட உங்களுக்கு பக்கத்தில இருந்து கதைக்கிறதுக்கு பயமாகத்தான் இருக்குது” என்று எலிசபெத் ஆச்சி சொன்னதும் அவர் விக்கிப் போனார். சிறிய அமைதியின் பின் சொன்னார்,

“ஓ அப்படியா..? அப்பவே எனக்குத் தெரியாம போச்சே..!” என்று சொல்லியபடி சற்றே தலையை சரித்து ஆச்சியின் காதை ஒட்டி மூச்சுக் காற்று விழுகிற அளவுக்கு நெருக்கமாக உட்கார்ந்து கொண்டார் அப்பு. ஆச்சி அதை எதிர்பார்த்து இருந்த மாதிரி மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டார்.

“ முன்பே தெரிஞ்சிருந்தா என்னங்க செய்திருப்பீங்க..?” ஆச்சி அவருடைய கண்ணைக் கூர்ந்து பார்த்தபடி, காதருகில் மெதுவாகக் கேட்டாள்.

“ என்ன செய்திருப்பேன் என்டா கேக்குறிங்க.. இழுத்துட்டு ஓடிப் போயிருப்பேன்...! ஆனால் என்ன ஒன்று.... இங்கிலீஷ் சொல்லிக் கொடுக்கிறன் - சொல்லிக் கொடுக்கிறன் எண்டு சொல்லிக் கொண்டே பணக்காரப் பொட்டையை ‘அரைச் சுவாமி சந்தியா’ கூட்டிக் கொண்டு ஓடிட்டான் எண்டு சனங்கள் சொல்லுவாங்க, அவ்வளவுதான்!”. என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

“சனத்துக்கு ஏன் பயப்பட வேணும்...? நான் ஏற்கனவே என்ர அம்மாயிட்டேயும், அப்பாயிட்டேயும் சொல்லிப் போட்டன். அப்பா முதலில் கொஞ்சம் தயங்கினார், பிறகு யோசிக்கிறன் என்றார். ஆனால் முடிவில் ஓம் எண்டு சொல்லிட்டாங்க. அம்மாவிடமிருந்து உடனடியாகவே சம்மதம் கிடைச்சிட்டுது. ஆனால், உங்க எண்ணம் தெரியா மலே இருந்தது. தெரிந்திருந்தால், நாம ஓடிப்போய்த்தான் கல்யாணம் செய்ய வேணூம் எண்ட எண்ணமே எழுந்திருக்காது..!” என்று சிரித்துக் கொண்டே எலிசபெத் சொன்னார்.

“அப்படியா சொல்றீங்க. நாம மட்டும் வாழ்ந்தால் போதும்னு நினைக்கக் கூடாது நம்மை சார்ந்தவங்களும் வாழத்தானே வேண்டும்.”

“என்னங்க இப்படிச் சொல்றீங்க.. நீங்க உங்கட அம்மாவை மனசில வைச்சுக் கொண்டு தானே இப்படி சொல்லுறீங்க? நான் உயிரோடு இருக்கும் வரை உங்களுடைய அம்மாவை எந்த கஷ்டமும் இல்லாமல் பாக்குறது என்னு டைய பொறுப்புங்க. நான் வணங்குற மரியாள் மீது சத்தியம் பண்ணுறேனுங்க.”

“ஐயோ நான் அப்படி நினைக்கல. என்னை நீங்கள் தவறாக புரிந்து கொள்ள வேணாம். எங்க அம்மா பாவம். அவங்க சின்ன வயசிலேயே விதவையகிட்டாங்க. அவங்களுக்கு எல்லாமே நான் தான். அவங்களால தனியாக வாழ முடியாது. அதை மனசுல வச்சுத்தான் சொன்னனான். அப்படிச் சொன்னது தவறா இருந்தா மன்னிச்சுக்கோங்க”

“நான் வணங்குற தெய்வத்துக்கு சமமான உங்கள நான் மன்னிக்கிறதா..? ஐயோ! இப்படியெல்லாம் சொல்லாதீங்க என்று சொல்லிக் கொண்டு கண்களில் நீர் கசிய அவருடைய கையை இறுகப் பற்றிக்கொண்டார்.

எங்களுடைய பூர்வீகம் கரையூர் ஆக இருந்தாலும் எங்கள் முப்பாட்டன் காலத்திலேயே அங்கிருந்து இங்கு வந்து குடியேறி வாழ்ந்து வருகின்றோம். எங்கள் ஊரில் மிகச் சிலரே வசதி உள்ளவர்களாக இருக்கின்றார்கள். அவர்களில் எலிசபெத்தின் குடும்பமும் ஒன்று. நாலு அறை கொண்ட வீட்டில் இரண்டு அறையை தவிர மற்ற அறைகள் பாவிக்க படாமலே இருந்தன. எலிசபெத்தின் அறையில் இருக்கும் வானொலிப் பெட்டியில் எப்போதும் தமிழ் பாடல்கள் மெல்லிய சத்தமாக ஒலித்துக் கொண்டே இருக்கும். சில சமயம் பழைய பாடல்கள் ஒலிக்கும் போது தன்னை மறந்து அந்தப் பாடலுடன் எங்கள் ஊரில் இருக்கும் பீடிக் கொம்பனி யில் வேலை செய்யும் பெண்களைப் போல இணைந்து பாடுவார்.

வெளிப்பக்கமாக இருந்த வீதி வழியாக வந்த மோட்டார் சைக்கிள் சட்டென்று ஆச்சியின் வீட்டு வாசலில் நின்றது. கையில் பெரிய உடுப்பு பையுடன் ஆச்சியின் அப்பா இறங்கி நடந்து வந்தார். அவர் மெல்லிய புன்னகையுடன் கையில் கொண்டு வந்த பேக்கை அப்படியே அப்புவிடம் கொடுத்து விட்டு அறைக்குள் நுழைந்தார். அவர் கொடுத்து விட்டு சென்ற பையை விரித்துப் பார்த்ததும் அவர் மகிழ்ச்சி அடைந்தார். அந்த ஆடைகள் எல்லாம் வருகின்ற ஞாயிற்றுக் கிழமையில் இருந்து தொடங்கும் மூன்று கூறல் பூசைக்காக மருமகனுக்காக வாங்கிக் கொண்டு வந்தது.

கத்தோலிக்க திருச்சபையின் முறைப்படி மூன்று கூறல் கூறுவார்கள். பதிவுத் திருமணம் முடிந்த பிறகு தொடர்ந்து வருகிற ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பூசை முடிந்ததும் அவர்கள் திருமணம் செய்யப் போவதாக பங்குத்தந்தை பலிப் பீடத்தில் இருந்து அறிவிப்பார். யாராவது எதிர்ப்பு தெரிவிக்கிறதாக இருந்தால் தனிப்பட்ட முறையில் தன்னிடம் செல்லலாம் என்று சொல்லுவார். யாரும் முறைப்பாடு செய்யாத போது பின்னர் திருமணம் நடைபெறுவது வழக்கம். வீட்டின் வெளிப்பகுதியில் மின்னலுடன் காற்றும் பெரும் மழையும் பெய்யத் தொடங்கியது. ஜன்னல் வழியாக மின்னலைப் பார்த்துக் கொண்டிருந்த எலிசபெத்தை பார்த்து,

“என்ன கடுமையாக யோசித்துக் கொண்டிருக்கிறாய்..!” என்று கேட்டார் சந்தியா. “இன்றைக்கு இரவு நீங்க உங்கட வீட்டுக்கு போகேலாது போலத்தான் இருக்குது..!” என்றாள் எலிசபெத்.

“அதுக்கென்ன.... இன்னைக்கு உங்க வீட்ல தூங்கினா போச்சு..!” சந்தியா சொல்ல, எலிசபெத்தின் முகத்தில் மலர்ச்சி பொங்கி வழிந்தது. சிறிது நேரம் இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். பின் சந்தியா துங்குவதற்கான வசதிகளை செய்து வைத்த எலிசபெத், அவர் ஏக்கத்தோடு பார்த்திருக்க நாணப் புன்னகையை வீசியபடி தன்னுடைய அறையை நோக்கிச் சென்றாள். அவரும் அவளைப் பின் தொடர்ந்து அவளுடைய அறையை நோக்கி பின் தொடர்ந்தார்.

வானம் வன்முறையை கைவிட்டு அகிம்சையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. வெளியில் அள்ளி எறிந்த அடர்ந்த இருள் மட்டும் அப்படியே இனம் தெரியாத மனிதர்களால் வரையப்பட்ட தீர்ப்பால் ஒரு மனிதன் சுட்டுக் கொல்லப் பட்ட உடல் போல் கிடந்தது. எலிசபெத் சமையல் அறைக் குள் சென்று சூடாக இரண்டு கப்பில் பால் தேநீர் போட்டுக் கொண்டு வந்து தனக்கு ஒன்றையும் மற்றதை சந்தியாவிடமும் கொடுத்தார். கட்டிலுக்கு அருகில் இருந்த சிறிய மேசையை இழுத்து தேநீர் கோப்பையை அதில் வைத்தார். கட்டிலின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த சந்தியாவின் பக்கமாக அவரும் உட்கார்ந்து கொண்டார்.

“நான் கூத்தில் நடிக்கும் போது பார்த்து இருக்கிறீர்களா எப்பயாவது?” எனக்கு தென் மோடிக் கூத்து விளங்கவில்லை என்றாலும் உங்களுக்காகவே எங்கட குடும்பத்தோடு அண்ணாவியார் காப்பு பாடுவதற்கு முதலே கூத்து கொட்டைகைக்கு முன்னாலே உட்கார்ந்து விடிய விடிய பார்த்து இருக்குன்னு . புனித பேதுரு கூத்து, புனித செபஸ்தியார் கூத்து, புனித மேரி கூத்து, புனித வேத சகாயம் பிள்ளை கூத்து, புனித அந்தோனியார் கூத்து, சத்திய சீலன் கூத்து என்று ஒவ்வொன்றாக எலிசபெத் சொல்ல சந்தியாவின் கண்கள் அகல விரிந்தன.

“நீங்க ஒவ்வொரு கூத்திலும் கோமாளி வேடத்தில் தானே நடிக்கிறீங்க அண்ணாவியார் கிட்ட சொல்லி ராசா கூத்தில நடிக்கிறதுக்கு கேட்க கூடாதாங்க..?” என்று எலிசபெத் தன் ஆவலை வெளிப்படுத்தியபோது,

“அந்த ஆள், எனக்கு குரல் சரியில்லை என்று தரமாட் டேன் என்கிறார். என்னுடைய இலட்சியமே அண்ணாவியார் பெலிக்கன் உயிரோடு இருக்கும் போதே அவற்ற கையாலே புனித செபஸ்தியார் கூத்தில நடிக்கிறதுக்கு கொப்பி வாங்கி கூத்தில நடக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டே அந்தப் பாடலில் ஒன்றை பாடிக் கொண்டே அயர்ந்து தூ ங்கத் தொடங்கினர். எலிசபெத் அவருடைய தூக்கத்தை கெடுக்காமல் நெற்றியில் மெதுவாக முத்தமிட்டுவிட்டு அவர் அருகிலேயே தூங்கி விட்டார்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நடந்து முடிந்த திருமணம் பற்றி நினைக்கும் போதெல்லாம் சந்தியாவுக்கு மட்டுமல்ல எலிசபெத்துக்கும் எப்போதும் இனிதாகவே இருந்தது. சந்தியா அப்புவுக்கு இரண்டு அழகான பெண் பிள்ளைகள் . அவர்கள் எப்போதும் நேர்த்தியாக தங்கள் விருப்பத்துக்கு ஏற்ப உடையணிந்து இருப்பார்கள். அவர்கள் இருவருக்கும் மிகச் சிறப்பாக திருமணம் பேசி முடித்துக் கொடுத்திருந்தார். மூத்தவள் கனிமொழி, இளையவள் இளவரசி. கனிமொழிக்கு மூன்றும் இளவரசிக்கு மூன்றும் ஆக பேரப்பிள்ளைகள் மொத்தம் 6 பேர். எல்லாரும் சந்தியா அப்பு மீது அன்பாகவும்,பாசமாகவும் இருப்பார்கள். ஆயினும் சந்தியா அப்பு தன் மனைவி மீதே அதிக அளவில் பிரியமான வராக இருந்தார். அல்லது எனது பார்வையில் அப்படித் தோன்றியதாகவும் இருக்கலாம். இரு பிள்ளைகளின் திரும ணத்தின் போதும், அவர் தன்னுடைய சொத்தை சரி சமமாகப் பிரித்து இருவருக்கும் கொடுத்து விட்டு கடற்கரை ஓரத்தில் உள்ள புறம்போக்கு நிலத்தில் காணி பிடித்து, ஒரு

(17ஆம் பக்கம் பார்க்க)

# கொலம்பியாவில் போர் நிறுத்தம் சாத்தியமா? இலத்தீன் அமெரிக்க ஆறு தசாப்த போர் முடிவுறுமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா




கொலம்பியாவில் கடந்த ஜூன் மாதம் கொலம்பிய ஜனாதிபதி குஸ் டாவோ பெட்ரோவின் அரசாங்கம் அமைதியை நோக்கிய அதன் பாதையில் ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியைக் கொண்டாடியது. அதுவே கொலம்பியாவின் மிகப்பெரிய கெரில்லா குழுவான தேசிய விடுதலை இராணுவத்துடன் (ELN) ஆறு மாத, நாடு தழுவிய போர் நிறுத்தம் கையெழுத்தானது.

கொலம்பியாவின் ஆயுதமேந்திய புரட்சிப் படை (Revolutionary Armed Forces of Colombia - People's Army) அல்லது வார்க் (FARC) என்பது தென் அமெரிக்கா நாடான கொலொம்பியாவில் அரசுக்கு எதிராக அறுபது ஆண்டுகளாகப் போராடிக்கொண்டிருக்கும் மக்களின் போராட்ட அமைப்பு ஆகும்.

1964 ஆம் ஆண்டு இந்த அமைப்பு துவங்கப்பட்டு இன்றுவரை போராட்டம் நடத்திக்கொண்டு உள்ளது. இவ்வமைப்பு அதிகமாக ஆயுதப்படையின் போர் உத்திகளை கையாண்டு வருகிறது.

2016 அமைதி ஒப்பந்தத்திற்குப் பிறகு இவ் அமைப்பு நிராயுதபாணியாக்கப் படுவதற்கு வழிவகுத்தது. ஆயினும் தேசிய விடுதலை இராணுவம்

சுமார் 3,000 போராளிகளுடன் எஞ்சியிருக்கும் மிகப்பெரிய கிளர்ச்சிக் குழுவாக அதன் இடத்தை தக்க வைத்தது.

எதிர் வரும் ஆகஸ்ட் 3ம் தேதி முதல் 180 நாட்களுக்கு போர் நிறுத்தம் அமலுக்கு வரும். நெறிமுறைகள், சமூக உரையாடல்கள் மற்றும் ஒரு விரிவான கண்காணிப்பு பொறிமுறையை நிறுவுவதற்கு அனுமதிக்கும் வகையில், இது படிப்படியாக மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படும்.

சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக கொலம்பியாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் பணி மற்றும் கத்தோலிக்க திருச்சபையால் அந்த போர் நிறுத்த கண்காணிப்பு வழிநடத்தப்படும். தேசிய விடுதலை இராணுவம் மற்றும் அரசாங்கம் ஆகிய இரண்டும் ஆறு மாதங்களின் முடிவில் போர்நிறுத்தத்தில் திருப்தி அடைந்தால், அவர்கள் அதை நீட்டிக்க பேச்சுவார்த்தை நடத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆறு தசாப்த உள்நாட்டு ஆயுதமோதல்**

கொலம்பியா ஏறத்தாழ ஆறு தசாப்தகால உள்நாட்டு ஆயுத மோதலால் அழிக்கப்பட்டுள்ளது. குறைந்தது 450,664 மக்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் மில்லியன் கணக்கானவர்கள் தங்கள் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.




ஆயுத போராளிகளில் வலதுசாரி துணை இராணுவக் குழுக்கள், இடதுசாரி கிளர்ச்சியாளர்கள் மற்றும் அரசாங்கப் படைகள், அனைத்தும் பிரதேசத்தின் மீதான கட்டுப்பாட்டிற்காக நீண்ட காலம் ஆயுதங்களால் போட்டியிடுகின்றன.

**கொலம்பிய புரட்சிகர ஆயுதப்படைகள் - FARC**

ஆரம்பத்தில் கொலம்பியாவின் புரட்சிகர ஆயுதப் படைகள் (FARC) நிராயுதபாணியாக்கப்படுவதற்கு வழி வகுத்த 2016 அமைதி ஒப்பந்தத்திற்குப் பிறகு, தேசிய விடுதலை இராணுவம் ஆனது, சுமார் 3,000 போராளிகளுடன் எஞ்சியிருக்கும் மிகப்பெரிய கிளர்ச்சிக் குழுவாக அதன் இடத்தைப் பிடித்தது.

தற்போதய சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தேசிய விடுதலை இராணுவம் முக்கிய அணியாக மாறியுள்ளது.

சமீபத்திய போர்நிறுத்தம் மூன்று வெவ்வேறு நாடுகளில் மூன்று சுற்று பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து வந்துள்ளது.

**பேச்சுவார்த்தை மூலம் தீர்வு**

கடந்த வருட இறுதியில் டிசம்பர் 31 அன்று, கிளர்ச்சிக் குழுவுடனான சமாதானம் இறுதியாகக் கைகூடியது. ஆனால் சில நாட்களுக்குப் பிறகு, தேசிய விடுதலை இராணுவம் அத்தகைய ஒப்பந்தத்தை மறுத்தது.

கொலம்பியாவின் முதல் இடதுசாரித் தலைவரும் முன்னாள் எம்-19 கெரில்லா போராளியுமான பெட்ரோவுக்கு இது ஒரு பாரிய பின்னடைவாகும்.

வன்முறையைத் தீர்க்க முந்தைய கொலம்பிய அரசாங்கங்கள் பயன்படுத்திய இராணுவமயமாக்கப் பட்ட அணுகுமுறையிலிருந்து விலகுவதாக அவர் சபதம் செய்திருந்தார். அதற்குப் பதிலாக பேச்சுவார்த்தைகள் மூலம் வழிநடத்துவதாக உறுதியளித்தார்.



கொலம்பிய ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ தனது அரசாங்கத்திற்கும் தேசிய விடுதலை இராணுவம் இடையே ஆறு மாத போர்நிறுத்தத்தை ஜூன் 9 அன்று உறுதியாக அறிவித்தார். பேச்சுவார்த்தையில் குறைபாடுகள்

போர்நிறுத்தத்தின் முக்கியத்துவமாக இருந்தபோதிலும், கொலம்பியா எதிர்கொள்ளும் வன்முறையை முழுமையாக தீர்க்க முடியாமல் போகலாம் என்று அரசியல் நிபுணர்கள் கவலைப்படுகிறார்கள்.

தேசிய விடுதலை இராணுவ குழுவின் தந்திரோபாயங்களில் பிராந்திய மோதல்கள், மிரட்டி பணம் பறித்தல், கடத்தல், வலுக்கட்டாயமாக சிறைபிடித்தல், சிறார்களை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் பாதுகாப்புப் பணம் வசூலித்தல் ஆகியவை அடங்கும். இரு மாதங்களுக்கு முன்னர் தேசிய விடுதலை இராணுவ தாக்குதலில் கொல்லப்பட்ட ஒன்பது சேவை உறுப்பினர்களுக்காக மார்ச் 31 அன்று கொலம்பிய வீரர்கள் விழிப்புணர்வை நடத்தினர்.

வார்க்2016 சமாதான உடன்படிக்கை

வார்க் உடனான 2016 சமாதான உடன்படிக்கையின் முயற்சிகளில் இருந்து படிப்பினைகள் மூலம், தவறுகளை மீண்டும் செய்வதில் நாடு எச்சரிக்கையாக இருப்பதாகவும், புதிய போர்நிறுத்தத்தை அமல்படுத்துவது குறித்தும் கவலைகள் எழுந்து உள்ளன.

வார்க் இன் சில உறுப்பினர்கள் நிராயுதபாணியாக மறுத்துவிட்டனர். மாறாக கொலம்பிய கிராமப்புறங்களில் தொடர்ந்து போராடும் தங்கள் சொந்த அதிருப்தி குழுக்களை உருவாக்கினர். வார்க் கலைக்கப்பட்ட பகுதிகளில், போதைப்பொருள் கடத்தல் வழிகள் மற்றும் கைவிடப்பட்ட பிரதேசத்தை உரிமை கோருவதற்கு போட்டி குழுக்கள் முன்வந்தன. இது அமைதிக்கு நீடித்த தடைகளை உருவாக்கி உள்ளதும் உண்மையே.

போர் நிறுத்தம் மிகவும் நல்லது. ஒரு வித அமைதிக்கு உத்தரவாதம் அளிக்கிறது, ஆனால் இங்குள்ள உண்மை என்னவென்றால், பிற ஆயுதக் குழுக்களுக்கு இடையே ஒரு வலுவான மோதல் உள்ளது என்றும் கூறப்படுகிறது.

ஆயினும் கொலம்பிய அரசுக்கும் தேசிய விடுதலை இராணுவ அமைப்புக்கும் போர்நிறுத்தம் நீடிக்குமா குறித்த கவலைகள் உள்ளன. ஆயினும் இந்த ஒப்பந்தம் கொலம்பிய அரசாங்கத்திற்கு ஒரு மைல்கல் ஆகும். இருப்பினும் வன்முறையைக் குறைக்கும் அதன் திறன் குறித்து சந்தேகங்கள் பலவும் உள்ளன.





# சந்தியா அப்பு...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறிய குடிசையை அமைத்து, மனைவியுடன் வந்து குடியேறினார்.

நான் அந்தக் குடிசைக்கு அடிக்கடி போய் அப்புவை சந்திப்பதை வழக்கமாக வைத்திருந்தேன். காலையில் சில வேளையில் தொழில் முடிந்து கடற்கரைக்கு வரும் பொழுது அந்த குடிசைக்குப் போய் தேத்தண்ணி குடித்துவிட்டுத்தான் என்னுடைய வீட்டுக்கு வருவேன். எலிசபெத் ஆச்சியின் தேத்தண்ணியே ஒரு தனி சுவையாக இருக்கும். நான் சில வருடங்களாக வெளிநாட்டுக்கு போகும் முயற்சியில் ஈடுபட்டு கொண்டு கொழும்பில் தங்கியிருந்ததால் இடையில் சில காலம் ஊருக்கு வருவதும், அப்புவை சந்திப்பதும் குறைந்தது. நான் கொழும்பில் மனைவியை பிரிந்து இருந்த காலத்தில் அந்த துக்க செய்தி என்னை துரத்தியடித்தது. ஊரில் மலேரியா நோயின் தாக்கம் அதிகரிக்க என்னுடைய மனை வியும் அதில் பலியாகிப்போனாள். மனைவி இறந்த பின்னர் நான் வெளிநாடு போகிற முயற்சியை கைவிட்டு, ஊருக்கு வந்து மீண்டும் மீன்பிடித் தொழிலுக்கு போகத் தொடங்கினேன்.

மலேரியா நோயின் தாக்கத்தால் ஆச்சியும் இறந்து விட்டார். அந்த இழப்பை அப்புவால் தாங்க முடியவில்லை. அதன்பின் அவருடைய போக்கும், வாழ்க்கையும் மெல்ல மெல்ல மாறிக்கொண்டிருந்தது . சரியான தூக்கமில்லை , முறையான சாப்பாடில்லை. அப்படியே தொழிலுக்ககுப் போவதையும் நிறுத்தி விட்டார். பிள்ளைகளின் வீட்டிற்கு கூட போகாமல் அந்தக் குடிசையே கதி என்று கிடந்தார். எழுபது வயதை தாண்டிய போதும் திடகாத்திரமாக இருந்த மனிதன், ஆச்சியின் இழப்புக்கு பின் உடலாலும், மனதாலும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தார். ஒரு நாள் றாத்தலடியில் இருந்து வீட்டுக்கு வரும் வழியில் யாரோ ஒருவர் என் புறமுதுகில் மெல்ல தட்ட நான் திரும்பிப் பார்த்தேன். அது யாருமில்லை அப்புவின் இளைய மகள் இளவரசி தான். பழுப்பு நிறமும் சராசரி உயரமும் கொண்டவர்.கழுத்தில் தாலி அணிந்திருந்தார்.

என்னை விட கிட்டத்தட்ட பத்து வயது மூத்தவர். சாதாரண ஒரு பார்வையிலேயே கிட்டத்தட்ட சந்தியா அப்புவை அப்படியே பிரதி எடுத்தது போல் இருந்தார். ஒரு மெல்லிய புன்சிரிப்பை உதிர்த்துக் கொண்டு பேசத் தொடங்கினார்.

”நம்முடைய அப்புவின் நிலைமை வர வர மோசமா இருக்குது, கேள்விப் பட்டிருக்கிறீர்களா தம்பி”?

”ஓம். கேள்விபட்டிருக்கேன். நான் நேற்று போய் அவரை பார்த்தனான். முடிந்தளவு பக்குவமாக புத்திமதி சொன்னனான். ஆனால் அவர் ஒரு பிடிவாதக் குணத்துடன் இருக்கிறார். சதா உங்க அம்மாவைப் பற்றியே புலம்பிக் கொண்டிருக்கிறார். எப்படித்தான் அவருக்கு விளங்கப் படுத்தினாலும் அவர் விளங்கிக் கொள்ளாத போல் நடந்து கொள்கிறார். ஒரே கவலைப்பட்டுக் கொண்டிருப்பதால் இறந்த உங்க அம்மா திரும்பி வரப்போவதில்லைத் தானே. நான் நாளைக்கு தொழிலுக்கு போயிட்டு வரும் பொழுது இன்னொரு தடவ அவரை போய் பார்ப்பேன்” என்றேன்.

அவர் அதற்கு தலையை அசைத்து கொண்டு மீண்டும் தொடங்கினர்.

“எங்கட அம்மா மீன் குழம்பு சமைத்தால் அந்த கடற்கரையில் இருக்கிற குடிசை எல்லாம் மணக்கும். அப்படி அம்மாவின் சமையல் இருக்கும். ரொம்ப கண்டிப்புடன் எங்களை வளர்த்தவர். அப்பு இதுக்கு நேர் எதிரான குணம் கொண்டவர். நல்லவர், மிக நேர்மையானவர். ஆனால் எந்தக் கண்டிப்பும் இல்லாதவர். அடிக்கடி வாழ்வின் நிலையாமை பற்றிய தன்மையை எங்களுக்கு சொல்லிக் கொண்டே இருப்பார். அம்மாவை முதல் முறையாக சந்தித்துப் பேசியது உட்பட பல்வேறு விடயங்கள் பற்றி அப்பு நாங்கள் இருவரும் சின்ன வயதில் இருந்த போதே எங்க அம்மாவுக்கு முன்னாலேயே சிரிச்சுகிட்டே அப்பு சொல்ல அம்மாவும், நாங்க எல்லாரும் விழுந்து விழுந்து சிரிப்போம்” என்றார். நாளைக் காலையில் எழுந்ததும் களங்கட்டிவலை இழுக்க போய் விட்டு வரும் போது அப்புவையும் பார்க்கலாம் என்று நினைத்துக் கொண்டு கூப்பன் கடையில் இருந்து வீட்டிற்கு திரும்பி வந்தேன்.

நானும் அண்ணனும் அதிகாலையில் எழுந்து தொழில் முடிந்ததும் கடற்கரையை நோக்கி தோணியில் வந்து கொண்டிருந்தோம். நான் கீழே குனிந்து வங்குக் கிடையில் கிடந்த மீனையும் றாலையும் தனித்தனியாகப் பிரித்து அத்தாங்குக்குள் போட்டுக் கொண்டு சாதாளயை கடலுக்குள் வீசிக் கொண்டிருந்தேன். என்னைப் பார்த்து அண்ணன் பதட்டமான குரலில் சொன்னார்.

“அங்க பாரடா தம்பி கடற்கரையில் இருக்கும் குடிசை ஒன்று எரிஞ்சு புகை வந்து கொண்டிருக்கு?” நான் தலையை நிமிர்த்தி பார்த்தேன். எனக்கு திக்கென்று விட்டது.

நான் பொறுக்கிக் கொண்டிருந்த காலையும் வீதையும் விட்டுப் போட்டு கடையாளில் இருந்த மரக்கோலை எடுத்துக் கொண்டு அணியத்துக்கு ஓடிப் போய் வேகமாக வள்ளத்தை தாங்க தொடங்கினேன். அண்ணனும் என்னோடு இணைந்து கொண்டான். தோணி விரைவாக கடற்கரையை நோக்கி போய்க் கொண்டிருந்தது அப்பூட குடிசை மாதிரி இருக்குது என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டிருக் கையிலேயே கடற்கரையை நோக்கி வந்த வேகத்தில் கிழித்துக் கொண்டு ஏறியது வள்ளம். இளவரசியும் கனிமொழியும் கதறிக்கொண்டிருந்தார்கள். கொட்டிலைச் சுற்றி நின்ற மனிதர்களுக்கிடையில் நான் மெல்ல நகர்ந்து உள்ளே போனேன். என்னால் அவருடைய நிலையைப் பார்த்து பொறுக்க முடியாமல் வெளியேறிவிட்டேன் . நாங்கள் எல்லாம் இருக்கும் போது ஏன் அப்பு சாகனும் என்டு நினைச்சீங்க” என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டேன். எனக்கு அவர் சொன்னது மட்டும் என் நினைவுக்கு வந்தது

“நீ என்னுடைய “இளவரசியை முடிச்சு இருந்த என்றால் நீ ஒரு இளவரசன் தம்பி“ என்று சொன்னது மனசில் விழுந்து நினைவுகளில் ஒட்டிக்கொண்டது.

இரவின் அடர்த்தியில் ஒரு அழகான அமைதி தோன்றுமல்லவா, அப்படி ஒரு அமைதி கடல், காற்றுவெளி, களங்கட்டி வலை, இறால்கூடு, சாதளை, கடல் காகம் எல்லாவற்றிலும் படர்ந்து ஒரு சோர்வு நிறைந்து இருந்தன. நான் கண்கலங்கியபடி கடலைப் பார்த்தேன். கடல் என்னைப் பார்த்துக் கொண்டு இருந்தது. பின்னர் நிலத்தை, கடலோரப் பகுதியில் வாழும் மீனவர்கள் சட்டி, பானைகள் கழுவும் பகுதியில் தேங்கிப் போய்க் கிடந்த கழிவு நீரைப் பார்த்தேன். அவர்களின் குடிசைகளில் ஒளியின் பிரகாசத்தை கொண்டு வருவதற்கு எப்போது வேண்டுமானாலும் ஒரு இராஜ குமாரன் வருவார் என்று வாழ்நாள் முழுவதும் காத்திருக்கும் மக்களை ஒரு கணம் நினைத்தேன்.நெடிய வலி என்னுள் மெல்ல இறங்கியது. பேச முடியாமல் உள்ளுக்குள் அழத் தொடங்கி விட்டேன். எங்கோ குடிசை ஒன்றிலிருந்த வானொலியில் இருந்து கிளம்பி வந்த பாடல் ஒன்று என் காதில் விழுந்தது.

“அன்னையின் கையில் ஆடுவதின்பம்
கன்னியின் கையில் சாய்வதுமின்பம்
தன்னையறிந்தால் உண்மையில் இன்பம்
தன்னலம் மறந்தால் பெரும் பேரின்பம்”

ஏதோ சிமிழ் ஒன்றுக்குள் இறுக மூடி வைத்திருந்த வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருப்பது பற்றிய தத்துவம் ஒன்று தடைகள் நீங்கி விலகிக் கொண்டிருப்பது போல் எனக்குள் உணர்ந்தேன்.

கடற்கரையில் வரிசையாக கிடந்த பெரும் கற்களை நகர்த்த பெரும் சீற்றத்துடன் வந்த மாயக் கடல் அலைகள் தோற்றுப் போய் மீண்டும் மீண்டும் கடலுக்குள் திரும்பி கொண்டு இருந்தன. கடல் சாதாளைப் பக்கமாக ஓடிக்கொண்டிருந்து மீன் குஞ்சுகளை பிடிப்பதற்காக செங்குத்தாக நீருக்குள் விழுந்தது. மூழ்கி மூழ்கி அலைந்து திரிந்த போதும் மீன் குஞ்சுகளில் ஒன்றையேனும் தன் உணவுக்காக பிடிக்காமல் முடியாமல் தன் தலையை பாம்பை போல் நெளித்து அசைத்துக் கொண்டு மேல் எழுந்து கடலில் நீந்திக் கொண்டிருந்தது. ஏதோ அந்தக் கடல் காகத்துக்குத் தோன்ற மீண்டும் நீண்டிருக்கும் தன் தலையை கடலுக்குள் உட் செலுத்தியது. தொடர்ந்து நான்கு அல்லது ஐந்து தடவைகள் முயற்சி செய்து விட்டு எதுவுமே அகப் படாததால் வான் நோக்கி பறக்கத் தொடங்கி மீண்டும் களங்கட்டி வலைக் கம்பில் வந்து நின்றது. சிந்தனை வயப்பட்ட வேளை அப்பு என் கண்முன் காட்சியாக விரிந்தார். அமைதியோடு அப்புவின் முகத்தைப் பார்த்தேன். அவருடன் ஆரம்ப காலங்களில் நான் பழகிய முகத்தைப் கண்டேன். கண் எதிரே கலங்கி நிற்கும் அவருடைய பிள்ளைகளைப் பார்தேன். என் உடல் பரவசத்தில் நிலைத்து நின்றது.






# மன்னம்பிட்டி விபத்து
# இனிமேலும் வேண்டாம் அனர்த்தம்

**சந்திப்பும் படங்களும் இ. கீர்த்தனன்**

“வாகனங்கள் சற்று நிதானித்துக் கடக்க வேண்டிய பாலத்தில் சாரதியொருவர் விட்ட தவறின் காரணமாக 12 அப்பாவி உயிர்கள் இழக்கப்பட்டன. நான் ஒரு சாரதி என்ற வகையில் ஏனையவர்களின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டியது அவசியமானதாகும்”, என்று மட்டக்களப்பு நகரில் முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் எம்மிடம் தனது மனக்கவலையை பகிர்ந்து கொண்டார்.

கடந்த 8ஆம் திகதி - ஞாயிற்றுக்கிழமை பொலநறுவை கதுருவெலவில் பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த என். டி 7804 என்ற தனியார் பேருந்து மன்னம்பிட்டிக்கு அருகே கொட்டாலியா பாலத்திலிருந்து விலகி, ஆற்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

மகனைப் பார்க்கச் சென்ற தாய், கல்வி கற்பதற்காக பல்கலைக்கழகம் சென்று திரும்பிய பல்கலைக்கழக மாணவர்கள் என 12 பேரின் உயிர்களை இந்த விபத்து பறித்திருந்தது.

கடந்தவாரம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் மாநாட்டின்போது, அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தனவிடம் ஊடகவியலாளர்கள் இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் கேள்வி யெழுப்பியிருந்தனர்.

இதற்கு பதில் வழங்கிய அமைச்சர், விபத்துக்குள்ளான பேருந்து தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவில் உரிய முறையில் அனுமதியைப் பெற்றிருக்கவில்லை என்றும், கிழக்கு மாகாண சபையால் 2018ஆம் ஆண்டு பேருந்திற்கான பயண அனுமதி வழங்கப்பட் டுள்ளதாகவும் கூறியிருந்தார்.

அத்தோடு இந்த பேருந்தின் உரிமையாளருக்கு முன் னர் ஒருதடவை நீதிமன்றம் அபராதம் விதித்தது என்றும், அந்த அபராதத் தொகையை செலுத்திய பின்னரும் மீள தவறு இழைத்துள்ளார். சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். தற்போது 10 ஆயிரம் ரூபாயாகக் காணப்படும் அபராதத் தொகையை எதிர்காலத்தில் 5 இலட்சம் ரூபாய் வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், வடக்கு - கிழக்கில் பெரும்பாலான பேருந்துகள் அனுமதிப் பத்திரமின்றியே சேவையில் ஈடுபடுகின்றன என்ற அதிர்ச்சித் தகவலையும் வெளியிட்டார்.

விபத்துக்குள்ளான பேருந்திலிருந்து உயிர் தப்பிய இளைஞரான மட்டக்களப்பை சேர்ந்த பவித்ரன் தனது திகில் அனுபவத்தை விபரிக்கையில், “7.30 மணிக்குப் புறப்பட்ட பேருந்து மின்னல் வேகத்தில் சென்றது. பேருந்து பயணத்தை ஆரம்பிக்கின்றபோது 50 முதல் 55 பேர் வரையில் பேருந்தில் இருந்தனர். நான் யன்னல் ஓரமாக இருந்தேன். திடீரென்று பேருந்து நின்றது, அப்படியே ஆற்றினுள் விழுந்தது. யன்னல் ஓரமாக நான் இருந்ததால் உடனடியாக மேலே வர என்னால் முடிந்தது”.என்றார்.

இந்தப் பேருந்து விபத்தில் மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்த மூவர் உயிரிழந்தனர். உயிரழந்தவர்களில் ஒருவரான 3 பிள்ளைகளின் தாயான பீலா பீவி என்ற கணவனை இழந்த பெண்மணி, பொலநறுவை மாணிக் கம்பிட்டியில் கல்வி கற்கும் தனது மகனைப் பார்ப்ப தற்காக சென்றுவிட்டு, மீண்டும் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் இந்த விபத்தில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தார். ஏற்கனவே, தந்தையைப் பறிகொடுத்தி ருந்த 3 பிள்ளைகளும், தற்போது தாயையும் இழந்து மிகத் துன்பத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

விபத்துத் தொடர்பில் மட்டக்களப்பு மக்கள் இங்கு கருத்து வெளியிடுகின்றனர்.

---

**ஸ்ரீஎல். ஜி. உதநீ சிந்தக்க நவரட்ண**
மட்டு. பணிமனை பொறுப்பதிகாரி,
கிழக்கு மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபை



மன்னம்பிட்டியில் இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும். 2009ஆம் ஆண்டு கிழக்கு மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபை ஸ்தாபித்த பின்னர், ஒவ்வொரு பிரதேச மக்களுடனும் அந்நியோன்யத்தை ஏற்படுத்துவதற்காக போக்குவரத்து சேவையை வழங்கி வருகின்றோம். இந்த பேருந்துக்கான போக்குவரத்து அனுமதிப் பத்திரமானது கல்முனையிலிருந்து ரிதென்த வரையிலும் வழங்கப்பட்டுள்ளது.

ரிதென்ன பிரதேசமானது மட்டக்களப்பு மற்றும் பொலநறுவைக்கிடையிலான எல்லைப் பகுதி. பொலநறுவை மாவட்டத்தில் சேவையில் ஈடுபடுவதற்கு வடமத்திய மாகாண போக்குவரத்து அதிகார சபையின் அனுமதியை பெற்றுமே சேவையில் ஈடுபட்டு வந்துள்ளனர். விபத்துக்குள்ளான பேருந்தை போன்றே, மேலும் 17 பேருந்துகள் சேவையில் ஈடுபட்ட நிலையில், மன்னம்பிட்டி விபத்தையடுத்து குறித்த பேருந்துகளின் அனுமதிகள் அனைத்தும் கிழக்கு மாகாண ஆளுநரால் விடுக்கப்பட்ட உத்தரவுக்கமைய, பேருந்து சேவையில் இருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. விசாரணைக்குழு வழங்கும் உத்தரவுக்கமைய அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். கிழக்கு மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளரால் வழங்கப்பட்டுள்ள உத்தரவுக்கு அமைய, கிழக்கு மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபையால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தைத் தவிர வேறு அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட பேருந்துகளின் சேவையினை இடைநிறுத்தியுள்ளோம்.

விபத்துக்குள்ளான பேருந்து தொடர்பில், சமூக வலைத்தளங்களில் பொதுமக்கள் முறைப்பாடுகளை பதிவு செய்திருந்தனர். நாங்கள் கூறிக்கொள்வது என்னவென்றால், இவ்வருடம் ஜூன் மாதம் 27ம் திகதி என் தலைமையிலான அதிகாரிகளினால், குறித்த பேருந்தின் சாரதி மற்றும் நடத்துனர் ஆகியோருக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டு, 7 நாட்கள் சேவையில் இருந்தும் இடைநிறுத்தப்பட்டது. கடந்த வெள்ளிக் கிழமை (விபத்து இடம்பெறுவதற்கு இருநாட்கள் முன்னரே) தண்டப்பணம் செலுத்திய பின்னர் அவர்கள் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்பட்டிருந்தனர். சேவை இடைநிறுத்தப்பட்டு மீண்டும் சேவை ஆரம்பிக்கப்பட்ட மறுநாளே இந்த அனர்த்தமும் இடம்பெற்றுள்ளது.

---



**ஏ.எம்.அன்வர்**
கிழக்கு மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் மட்டு.அலுவலக போக்குவரத்து அதிகாரி

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருக்க, உரிய நடவடிக்கையினை நாம் எடுப்போம்.

இந்தப் பேருந்திற்கான அனுமதிப் பத்திரமானது எமது எல்லைக்குட்பட்ட பகுதியில் வழங்கியிருந்தோம். வடமத்திய மாகாண சபையால் வழங்கப்பட்ட அனுமதிக்கு இணங்கவே அவர் கருதுவெல வரையான சேவையில் ஈடுபட்டு வந்ததை அறியமுடிகிறது. இது தொடர்பில் தற்போது எமது அதிகார சபையினாலும் போக்குவரத்து ஆணைக்குழுவினாலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

---



**சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மட்டு. தலைவர்**

மன்னம்பிட்டிச் சம்பவம் எல்லோரது மனங்களையும் உருக்க வைத்துள்ளது. இதனை ஒரு தேவையற்ற விபத்து என்று நான் கணிப்பீடு செய்வேன். வேகமாக வாகனங்களைச் செலுத்தி, வேகக்கட்டுப்பாட்டை இழந்து இவ்வாறு விபத்துக்கள் இடம்பெறும்போது, போக்குவரத்துப் பொலிஸார் இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும். விபத்துக்குள்ளான இந்த பேருந்து தொடர்பில் ஏற்கனவே சமூகவலைத்தள பதிவின் ஊடாக ஒருவர் எச்சரிக்கையும் விடுத்திருந்தார்.

சமூக வலைத்தளத்தில் 2020ம் ஆண்டு இடப்பட்ட பதிவு தொடர்பில் கரிசனை செய்திருந்தால், இப்படியான ஒரு விபத்தைத் தவிர்த்திருக்கலாம். எனவே அரசாங்கம் இவ்விடயத்தில் கூடுதலான கவனம் எடுத்து, இப்படியான விபத்தை ஏற்படுத்தக்கூடிய சாரதிகள் மற்றும் நடத்துநர்களைக் கண்டுபிடித்து, அவர்களது சாரதி அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்ய வேண்டும்.

---



**பிரசன்னா இந்திரகுமார்**
ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

இவ்வாறான விபத்துகள் தொடர்ந்தும் நடக்காமல் இருப்பதற்கு, வீதி போக்குவரத்துப் பாதுகாப்பு பொலிஸார் மிகவும் கண்டிப்பாக நடந்துகொள்ள வேண்டும். சாரதி அசண்டையீனமாக, பயணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொள்ளாமல் நடந்ததன் விளைவாக இந்த விபத்து நேரிட்டது. இதனை வன்மையாகக் கண்டிப்ப துடன் எதிர்காலத்தில் இவ்வாறான விபத்துக்கள் இடம்பெறாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு போக்குவரத்துப் பிரிவு பொலிஸாரின் கடமை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

---

**ஓட்டோ சாரதி**
மட்டக்களப்பு



இன்றைய நாட்களில் தனியார் பேருந்துகளும், அரச பேருந்துகளும் போட்டி போட்டுக் கொண்டு ஓடுவதை நாங்கள் காண்கின்றோம். போட்டி போட்டு ஓடி வந்தால் அடுத்த ஓட்டம் (வாய்ப்பு) கிடைக்கும் என்ற நினைப்பு அவர்களிடம் காணப்படுகிறது. இதற்காக மக்களின் பாதுகாப்பை கருத்தில் கொள்ளாத நிலைமைகளும் இருக்கிறது. அத்தோடு வாகனத்துக்குள் (சாரதி) தொலைபேசியில் உரையாடுவது. விபத்து இடம்பெற்ற பாலமானது குறுகிய பாலமாகும்.

அந்தப் பாலத்தைக் கடக்கும்போது, வாகனத்தை தரித்து நின்றுதான் பயணிக்க கூடியதாக இருக்கின்றது. இந்த நிலைமை இன்று நேற்றல்ல 10-15 வருடங்களுக்கு முன்பிருந்தே இவ்வாறுதான் நிலைமை இருக்கின்றது. இந்த விபத்துச் சம்பவம் அவசரத்தால் நேர்ந்துள்ளது என்றே கூற வேண்டும். சாரதியின் தவறால், பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நான் ஒரு சாரதி என்ற அடிப்படையில் கூறுகின்றேன், சாரதிக்கு ஏனையவர்களின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்.

---

**சாரதி**
(மட்டு. - வாழைச்சேனை தனியார் போக்குவரத்து)



தனியார் பேருந்து போக்குவரத்தில் ஈடுபடும் அனைவரும் இந்தச் சம்பவம் தொடர்பில் கவலை கொள்கின்றனர். பேருந்து சாரதிகள் என கூறும் நாங்களும் பேருந்தை செலுத்தும் போது, எங்களது உயிருக்கு உத்தரவாதமில்லாத நிலையில்தான் வாகனங்களை செலுத்திக் கொண்டிருக்கின்றோம். அரச பேருந்துகளும் தனியார் பேருந்துகளும் எவ்வித நேரக் கட்டுப்பாடு களும் இன்றி போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. இதனால்தான் விபத்துகள் ஏற்படுகின்றன.

---



**பொதுமகன்**

மன்னம்பிட்டியில் நடைபெற்ற அசம்பாவிதம் மிகவும் வருந்தத்தக்கது. அன்றைய நாளில் நாட்டில் நடைபெற்ற மூன்று விபத்துச் சம்பவங்களில் பல உயிர்கள் பறிபோயிருக்கின்றன.

விபத்துக்களுக்கான காரணங்கள் கண்டறியப்படாத நிலைமைகளில், மக்களது உயிர்கள்தான் இழக்கப்படுகின்றன. விபத்து இடம்பெற்ற பாலத்தை சற்று அகலப்படுத்திக் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும்.

## பொலிஸ்...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுலாக்கவேண்டும் என்பதே இந்தியா வின் நிலைப்பாடாக உள்ளது, இது விடயத்தை இந்தியா எவ்வாறு அணுகும் என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக் கையிலேயே வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மேற்கண்டவாறு கூறினார்.

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர் பில் இந்தியாவுக்கு விளக்கமளிக்கப்பட் டது. பொலிஸ் அதிகாரம் தொடர்பில் தன்னால் தனித்து முடிவெடுக்க முடி யாது, கட்சி தலைவர்கள் கூட்டத்தில் இது பற்றி ஆராய்ந்து முடிவெடுக்கப் படும் என ஜனாதிபதி குறிப்பிட்டார். பொலிஸ் அதிகாரம்தவிர ஏனையவற்றை அமுல்படுத்துவதற்கான எதிர்பார்ப்பு உள்ளது." எனவும் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார்.

அதேவேளை, 13 ஆவது திருத்தச் சட் டம் தொடர்பில் ஆராய்வதற்கு எதிர் வரும் 26 ஆம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வ கட்சிக் கூட்டத்தை கூட்டவுள்ளார் என தெரியவருகின்றது. (அ)

## நாம்...

சொன்னார் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு என்னால் சர்வதேச நாணய நிதியத்திடமும் செல்ல முடியும். மக்களிடமும் செல்ல முடியும் என்று. இறுதியில் அவர் மக்களிடமே சென்று பிரச்னையைத் தீர்த்தார்.

ஆனால், எமது இந்த அரசால் மக்க ளிடம் செல்ல முடியாது. நாம் மக்களி டம் சென்றே - உண்மையைக் கூறியே பிரச்னையைத் தீர்ப்போம். வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவைப்போம். அவர்கள் முதலீடு செய்வதற்காக அவர்க ளிடம் இலஞ்சம் வாங்கமாட்டோம். இன்று நடப்பது இதுதான். வெளி நாட்டு முதலீட்டாளர்கள் ஷங்கிரிலா, ஹில்டன் ஹோட்டல்களுக்குப் பணப் பெட்டியுடன் சென்று அமைச்சின் செயலாளர்களை எதிர்பார்த்துக் கிடக்கின்றனர். இலஞ்சம் கொடுப்ப தற்காக அவர்கள் இவ்வாறு நடக்கின் றார்கள்.

எமது ஆட்சியில் இப்படியெல்லாம் நடக்காது. இலங்கையைப்போல் வரிகள் அதிகம் உள்ள நாடுகள் எங்கேயும் இல்லை. இலங்கையைப்போல் மது வரி அதிகம் உள்ள நாடுகளும் எங்கும் இல்லை. அதேபோல், இலங்கையைப்போல் மக்களால் வாழ முடியாத நாடுகளும் எங்கும் இல்லை.

மது வரியை வைத்தே நாட்டை முன்னேற்றலாம். அந்தளவு அதிகமாக மது வரி இங்கு அறவிடப்படுகின்றது- என்றார். (அ)

## சுகாதார...

எதிர்க்கட்சியில் சுயாதீனமாக இயங்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அணியின் உறுப்பினரான கலாநிதி ஒருவரும், எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் மற்றுமொரு சிரேஷ்ட அரசியல்வாதி ஒருவரும் சுகாதார அமைச்சுப் பதவியை தமக்கு வழங்குமாறு உத்தியோபூர்மற்ற வகையில் கோரியுள்ளதாக கூறப்படுகி றது.

இவர்கள் இருவரும் கடந்த அரசாங்கங்களில் சுகாதார அமைச்சர் களாக பதவி வகித்தவர்கள். எது எப்படி இருந்தபோதிலும் இவர்களின் கோரிக்கை சம்பந்தமாக ஜனாதிபதி செயலகம் இதுவரை எவ்வித பதிலையும் வழங்கவில்லை எனக் கூறப்படுகிறது.

இதனிடையே பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அணியில் அங்கம் வகிக் கும் சிறப்பு மருத்துவரான பெண் பாராளுமன்ற உறுப்பினருக்கு சுகதாரத் துறையின் கண்காணிப்பு பொறுப்பை வழங்க அரசாங்கம் தயாராகி வருவதா கக் கூறப்படுகிறது. (அ)

## ஜனாதிபதி...

ஒன்றில் பேசிய அவர், ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டி யிடுவது தொடர்பான உத்தியோகபூர்வ மாக அறிவிப்பு விரைவில் வெளியாகும்.

அறிவிப்பு வெளியானதும், சில பெரிய மாற்றங்களை பொதுமக்கள் பார்க்க லாம்.

சஜித் பிரேமதாஸ அடுத்த ஜனா திபதித் தேர்தலில் போட்டியிடமாட் டார். அதற்குப் பதிலாக கடந்த ஆண் டைப் போலவே டலஸ் அழகப்பெரு மவுக்கு அவர் ஆதரவை வழங்குவார்.

கடந்த ஆண்டைவிட தற்போது கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள் ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை சரியான பாதையில் இட்டுச் சென்றார்-என்றார். (அ)

## ஒற்றையாட்சி...

தம்பதெனிய தொகுதி கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு கூறினார்.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பு வதற்கும், ஜனநாயகத்தை பாதுகாப்ப தற்காகவுமே ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆதரவு வழங்கினோம். இதற் காக அவர் முன்னெடுக்கும் திட்டங் களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்.

நாட்டைப் பிரிப்பதற்கு அல்ல, ஒற்றையாட்சியின்கீழ் அதனை பலப் படுத்துவதற்கே மக்கள் ஆணை வழங்கி யுள்ளனர். எனவே, மக்கள் ஆணைக்கு புறம்பான பயணத்துக்கு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சி ஒத்துழைப்பு வழங் காது." -எனவும் சாகர காரியவசம் குறிப் பிட்டார். (அ)

# வேம்படி மகளிர் கல்லூரியில் மீண்டும் திறக்கப்பட்ட கன்ரீன்

யாழ்ப்பாணம், ஜூலை 23

சுமார் இரண்டு வருடங்களுக்கு மேலாக நிறுத்தப்பட்டிருந்த யாழ். வேம் படி மகளிர் பெண்கள் உயர்தர பாட சாலையின் உணவகமானது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்ட கோவிட்-19 நோய்த் தாக்கம் காரணமாக பாடசாலை கள் பல மாதங்களாக மூடப்பட்டது.

மீண்டும் பாடசாலைகள் திறக்கப்பட் டும் யாழ். வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையின் உணவகம் செயற்படுத் தப்படாததால் அதிகாலை வேளை தனி யார் கல்வி நிறுவனங்களுக்கு செல்லும் மாணவிகள் பாடசாலையில் உணவு கிடைக்காததால் பாதிப்புக்கு உள்ளாவ தாக பெற்றோரால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

அது மட்டுமல்லாது பாடசாலை களில் விளையாட்டுகளில் ஈடுபடும் மாணவிகள் பாடசாலையில் உணவகம் இல்லாததால் பெரும் அசௌகரியங் களை எதிர் நோக்கினர்.

குறித்த விடயம் தொடர்பில் கவனம் எடுத்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலை வரும் கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா விரைந்து நட வடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

இந்நிலையில் பாடசாலை அதிபரு டன் தொடர்பு கொண்ட அமைச்சர் குறித்த உணவகம் இயங்கமைக்கான காரணத்தை பாடசாலை அதிபரிடம் கேட்டறிந்த நிலையில் இட வசதி பிரச்னை காரணமாக குறித்த உணவ கத்தை மீள செயல்படுத்துவது தொடர் பில் சில நடைமுறைச் செயற்பாடுகளால் கால தாமதம் ஏற்படுவதாகத் தெரிவித் தார் .

இந்நிலையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முன்னாள் யாழ் மாநகர முதல் வர் யோகேஸ்வரி பற்குணராஜாவை குறித்த பாடசாலையின் மாணவர்களுக் கான உணவகத்தை மீள செயல்படுத்து வது தொடர்பில் நிர்வாக ரீதியான நடை முறைகளை விரைவாக மேற்கொள்ளு மாறு பணிப்புரை விடுத்திருந்தார்.

இந்நிலையில் அமைச்சரின் துரித நடவடிக்கையால் பாடசாலை அதிபரின் ஒத்துழைப்புடன் திருநெல்வேலி அம் மாச்சி உணவகத்தின் உணவகம் பாட சாலையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (அ)

## இலங்கை...

- இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்று வதற்கான அழுத்தங்களைக் கொடுப்ப தற்கு முழுமையான தார்மீக உரிமை இருக்கிறது என்பதை இந்தியப் பிரதம ருக்கு அனுப்பிய கடிதத்தில் சுட்டிக் காட்டியிருந்தோம்.

எமது கடிதத்தில் தெரிவித்திருந் ததைப் போன்றே இந்தியப் பிரதமர் மோடியும் இலங்கை ஜனாதிபதிக்கு மேற்கண்ட விடயங்களைத் தெளிவாக எடுத்துரைத்திருந்தது மாத்திரமல்லா மல், இலங்கை தமிழ் மக்கள் கண்ணிய மாகவும் கௌரவமாகவும் வாழ்வதற்கு அவர்களது அபிலாஷைகள் முழுமை யாக நிறைவு செய்யப்பட வேண்டும்.

அதற்கு 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, மாகாணசபை தேர்தல்களை நடாத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதுடன் அதனை இலங்கை அரசு செய்யும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறியுள்ளார்.

அத்துடன், இந்தியாவின் பாதுகாப்பு இலங்கையின் பாதுகாப்பு என்பவை ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தது என்றும் இந்துமகா சமுத்திரத்தின் பாது காப்பிற்கும் அது முக்கியமானது என் றும் குறிப்பிட்டுள்ளதுடன், வடக்கு- கிழக்கு அபிவிருத்திக்கு இந்திய அரசு தொடர்ந்தும் உறுதுணையாக இருக்கும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற் படுத்தப்பட்டு 36 வருடங்கள் கடந் துள்ள இன்றைய நிலையிலும் அதில் அடங்கிய விடயங்களை நடைமுறைப் படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத் திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய நிலையிலேயே இந்தியா இருக்கிறது என்பதையும் நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத் துவதாக டில்லியில் ஒப்புக்கொண்டா லும் மாறிமாறி ஆட்சி செய்யும் இலங்கை அரசாங்கங்கள் அதனை இழுத்தடித்து வருவதையே நாங்கள் பல காலமாகப் பார்த்து வருகிறோம்.

பல்வேறு காரணங்களைக் கூறி அதை நடைமுறைப்படுத்துவதிலிருந்து தப்பித்து வருவதையும் பார்த்திருக்கின் றோம். இந்த முறையும் அவ்வாறில்லா மல், அது முழுமையாக நடைமுறைப் படுத்தப்படுகிறதா என்பதைக் கண் காணிப்பதற்கு இந்தியா ஒரு பொறி முறையை ஏற்படுத்த வேண்டும் என்பது டன், குறிக்கப்பட்ட கால அவகாசத் திற்குள் இவை நடைமுறைப்படுத்தப் படவேண்டும் என்று இலங்கை அரசாங்கத்துக்குச் சுட்டிக்காட்டவேண் டும் என்றும் நாம் கோருகிறோம்.

மலையக தமிழ் மக்கள் இந்த மண் ணில் குடியேறி 200 வருடங்கள் முடி வடையும் இன்றைய காலகட்டத்தில் சரியான ஊதியமில்லாமல், வாழ்விடங்க ளில்லாமல் இன்னமும் லயன்களில் அடிமைகளாக வாழ்கின்ற சூழ்நிலையில் அவர்களுடைய அபிவிருத்திக்காக இந்திய அரசாங்கம் 75 கோடி ரூபாய் களை வழங்குவது வரவேற்பிற்குரியதும் பாராட்டுக்குரியதுமாகும்.

மலையக மக்கள் கௌரவத்துடனும் கண்ணியத்துடனும் வாழ்வதற்கான உதவிகளையும் ஒத்தாசைகளையும் இந்தியா தொடர்ந்து செய்ய வேண்டும் என்றும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

இலங்கை ஜனாதிபதியும் தமிழ் மக்களுக்கும் இந்திய அரசுக்கும் கொடுத்த வாக்குறுதிகளை காலம் கடத்தாது முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்றும் நாம் எதிர்பார்க்கி றோம் - என்றார். (அ)

## இலங்கையும்...

மற்றும் இரு நாடுகளுக்கும் இடையி லான பல்லாயிரம் ஆண்டுகால உறவை மேலும் அபிவிருத்தி செய்தல். இவ்வா றான தொடர்பை உருவாக்குவது குறித்த தான ஆய்வு வெகு விரைவில் ஆரம் பிக்கப்படும்."

- இவ்வாறு இந்திய-இலங்கை கூட்ட றிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருவருக்கும் இடையி லான கலந்துரையாடலைத் தொடர்ந்து இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பில் இரு நாடுகளினாலும் வெளி யிடப்பட்ட கூட்டறிக்கையில் மேற் கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## இலங்கையில் இந்திய ரூபாயை பயன்படுத்த அனுமதிக்க முடிவு!

கொழும்பு, ஜூலை 23

இலங்கையில் இந்திய தொழிலதி பர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள், உள் ளூர் பரிமாற்றத்திற்கு இந்திய ரூபாயை பயன்படுத்த அனுமதி வழங்க முடிவு செய் யப்பட்டு உள்ளதாக வெளியுறவுத் துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில், அமெரிக்க டொலர், சீனாவின் யென், யூரோ ஆகியவற்றை பயன்படுத்தப்படுவது போல், இந்திய ரூபாயையும் உள்ளூர் பரிமாற்றத்துக்கு பயன்படுத்த அனுமதிக்க முடிவு செய் யப்பட்டு உள்ளது. இதன் மூலம், இந்திய தொழிலதிபர்கள் மற்றும் சுற்றுலா பய ணிகளுக்கு பல நாட்டு கரன்சிகளை வைத்திருக்கவேண்டிய கட்டாயம் குறை யும் - என்றார். (அ)

## 74 இந்திய கடற்றொழிலாளர் இலங்கை கடற்பரப்பில் கைது!

சென்னை, ஜூலை 23

ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் 74 இந்திய கடற்றொழிலாளர் கள் இலங்கைக் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய துணை வெளியுறவுத்துறை அமைச்சர் வி.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய கடற்றொழி லாளர்களின் எண்ணிக்கை மற்றும் நிலை குறித்து, மக்களவையில் திராவிட முன் னேற்றக்கழக பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி, வெளியுறவுத்துறை அமைச் சரிடம் எழுத்துபூர்வமாக கேள்விகளை எழுப்பினார்.

இதேபோன்ற கேள்விகளை இந்திய பாராளுமன்ற உறுப்பினர்களான அடூர் பிரகாஷ் மற்றும் ராஜேஷ்பாய் சௌத சமா ஆகியோரும் எழுப்பியிருந்தனர்.

இந்த கேள்விகளுக்கு பதிலளித்த இந்திய துணை வெளியுறவுத்துறை அமைச்சர் வி.முரளிதரன், இலங்கையில் ஆண்டின் இதுவரையான காலப்பகுதி யில் 74 இந்திய மீனவர்கள் கைது செய் யப்பட்டுள்ளமை தொடர்பான தகவல் கள் கிடைத்துள்ளதாக தெரிவித்தார்.

## ரயிலுடன்...

இருந்து காங்கேசன்துறை நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதுண்டே குறித்த நபர் உயிரிழந்தார்.

மீசாலை ரயில் நிலையத்துக்கு அரு கில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் ரயில் கடவையை அண்டி இந்தச் சம்ப வம் இடம்பெற்றுள்ளது.

வயோதிபர் மோட்டார் சைக்கிளில் ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட போதே விபத்தில் சிக்கியுள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu

# யாழ்.ஆலய விழாக்களுக்கு யானைகள் பயன்படுத்த உரிய அனுமதி அவசியம்!

## அரச அதிபர் அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 23

**யாழ். மாவட்டத்தில் ஆலய உற்சவங்கள் மற்றும் ஏனைய விழாக்களுக்கு யானைகளைப் பயன்படுத்த உரிய அனுமதிகள் அவசியம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ஆ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் தெரிவிக்கையில்-

அண்மைக்காலமாக யாழ். மாவட்டத்தில் ஆலய உற்சவங்களின்போது வேறு மாவட்டங்களில் இருந்து யானைகள் வரவழைக்கப்பட்டு அவற்றை எந்த விதமான பாதுகாப்பு நடைமுறைகளும் இன்றி ஆலயச் சடங்குகளிலும் ஊர்வலங்களிலும் ஈடுபடுத்துகின்றனர்.

இதன்போது உரிய பாதுகாப்பு நடைமுறைகள் ஏதும் பின்பற்றப்படாமல் பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் இவ்வாறு யானைகளைப் பயன்படுத்துவது சட்டவிரோதமானதும் பொதுமக்களுக்கு எதிர்பாராதவிதமான ஆபத்துகளை விளைவிக்கக்கூடிய தாகும்.

வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களப் பணிப்பாளரின் அறிவுறுத்தலின்படி இவ்வாறு யானைகளை பயன்படுத்துவதற்கான அனுமதி வனவிலங்குகள் பாதுகாப்பு திணைக்களத்திடம் பெற்றுக்கொள்ளப்படவேண்டும் என்பதுடன் பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் யானைகளை கையாள்வதற்கான பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் அதற்கான ஆளணி ஆகியவை பேராதனை கால்நடை வைத்திய பீடத்தில் மட்டுமே உள்ளதுடன் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் தொழில் பரப்பினுள் அவற்றுக்கான ஏற்பாடுகள் ஏதும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே இவ்வாறு உரிய அனுமதி பெறப்படாமலும், உரிய பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றாது யானைகளை உற்சவங்களில் பயன்படுத்துவதை தவிர்க்குமாறு ஆலய நிர்வாகத்தினர் மற்றும் உற்சவங்களை நடத்துவோரை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்- என்றார். (அ)

# பொலிஸ்மா அதிபர் விக்கிரமரத்ன திடீரென கிளிநொச்சிக்கு விஜயம்!



கிளிநொச்சி, ஜூலை 23

இலங்கை பொலிஸ்மா அதிபர் நேற்று கிளிநொச்சி விஜயம் மேற்கொண்டார்.

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன மற்றும் வடக்கு மாகாண சிரேஸ்ட பொலிஸ்மா அதிபர், வடக்கு மாகாணத்திலுள்ள 61 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுடன் சந்திப்பு ஒன்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, வடக்கு மாகாணத்தில் உள்ள பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் விசேடமாக கலந்துரையாடப்பட்டது. (அ)

# வவுனியா-மன்னார் வீதியில் விபத்தில் சிக்கி இளைஞர் பலி!

வவுனியா, ஜூலை 23

வவுனியா-மன்னார் வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார் என நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, மன்னார் வீதி, 4ஆம் கட்டைப் பகுதியில் நேற்று முன் தினம் நள்ளிரவு இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியாவில் இருந்து மன்னார் வீதி வழியாக இளைஞன் ஒருவர் மோட்டார் சைக்கிளில் சென்ற போது அது சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வீதியோரத்தில் இருந்த மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவத்தில வவுனியா, வாரிக்குட்டியூர் பகுதியைச் சேர்ந்த வவுனியா மின்சார சபையில் கடமையாற்றும் சஜந்தன் (வயது-32) என்ற இளைஞரே உயிரிழந்தார்.

விபத்து தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மரம் முறிந்து விழுந்ததில் இருவர் பரிதாப மரணம்!

## மூவர் படுகாயம்



கொழும்பு, ஜூலை 23

மரம் முறிந்து விழுந்ததில் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் அம்பலாங்கொடை-அக்குரஸ்ஸை பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

அந்தப் பகுதியில் வீசிய கடும் காற்றால் மரமொன்று முறிந்து வாகனம் பழுது பார்க்கும் நிலையத்தின் மீது விழுந்ததில் இருவர் உயிரிழந்ததோடு மேலும் மூவர் படுகாயமடைந்தனர் என்று அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)



# கம்போடியாவில் தேர்தல் கண்காணிப்பில் மைத்திரி

கொழும்பு, ஜூலை 23

கம்போடியாவில் நடைபெறும் தேர்தலில் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக சர்வதேச பிரதிநிதியாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படவுள்ளார்.

இன்று இந்த நடவடிக்கைகளில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணைந்துகொள்ளவுள்ளார்.

சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டு கம்போடியாவுக்கு நேற்று முன்தினம் பயணித்த முன்னாள் ஜனாதிபதி, உலக தலைமைத்துவ மாநாட்டிலும் பங்கேற்கவுள்ளார். உலக சமாதான மாநாட்டின் அழைப்பின் பேரில் மைத்திரிபால சிறிசேன இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

கம்போடியாவை நேற்று முன்தினம் பிற்பகல் சென்றடைந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் வரவேற்றார். (அ)

# மேலுமொரு தாயும் மகளும் மாயம்!

கொழும்பு, ஜூலை 23

ஹங்குரான்கெத்த பகுதியைச் சேர்ந்த தாயும் குழந்தையும் காணாமல் போயுள்ளதாக ஹங்குரான்கெத்த பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஹங்குரான்கெத்த ஹோப் தோட்டத்தைச் சேர்ந்த 20 வயதுடைய தாயும் ஒரு வயதும் 8 மாதங்களுமான பெண் குழந்தையும் இவ்வாறு காணாமல்போயுள்ளனர்.

குறித்த இருவரும் கடந்த 20ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக அந்த பெண்ணின் தாயார் ஹங்குரான்கெத்த பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இருவரும் காணாமல் போன தினத்தன்று பஸ் ஒன்றில் ஹங்குரான்கெத்த, ரிக்கிலகஸ்கட நகருக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் குறித்த பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துனரிடம் ஹங்குரான்கெத்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, அங்குருவத்தோட்ட, ஊருதுடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய தாயும், அவரது 11 மாத பெண் குழந்தையும் கடந்த 18 ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்த நிலையில், நேற்று முன் தினம் காலை வீட்டுக்கு அருகிலுள்ள புதரில் சடலமாக மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 266 மருந்துகள் தட்டுப்பாடு!

கொழும்பு, ஜூலை 23

நாட்டில் மேலும் 266 மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

850 வகையான மருந்துகளில் இந்த 266 மருந்துகளும் பற்றாக்குறையாக உள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

வைத்தியசாலைகளில் மருந்துப் பாவனை அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# உலக மக்கள் தொகையில் 50 வீதமானோர் ஆபத்தில்!

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

ஜெனிவா, ஜூலை 23

உலக மக்கள் தொகையில் 50 சதமானோர் டெங்கு தொற்றால் ஆபத்தில் உள்ளதாக உலக சுகாதார அமைப்பின் சிறப்பு வைத்திய நிபுணர் ராமன் வேலாயுதன் தெரிவித்தார்.

அதன்படி, இந்த ஆண்டு டெங்கு காய்ச்சலின் பாதிப்பு உச்சத்தை எட்டக்கூடும் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

புவி வெப்பமயமாதல் நுளம்புகளின் வளர்ச்சிக்கு காரணமாகியுள்ளதாக அது சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டு முதல் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எட்டு மடங்கு அதிகரித்து கடந்த 2022ஆம் ஆண்டில் 4.2 மில்லியனாக அதிகரித்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் கடந்த மார்ச் மாதத்தில் சூடானில் முதன்முறையாக டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்ததுடன், ஐரோப்பாவில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

டெங்கு தொற்று காரணமாக பெரு நாட்டின் பல பகுதிகளில் அவசர கால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில், டெங்கு தொற்றானது உலகின் மிக வேகமாக பரவி வரும் தொற்றுநோய் என்றும் அது ஒரு "தொற்றுநோய் அச்சுறுத்தலை" பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்தது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கையில் 54,452 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அண்மைய காலங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்பட்டது.

இதன் காரணமாக டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை பரிசீலிக்க பல சிறப்பு வேலைத்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

எவ்வாறாயினும், கடந்த 2022ஆம் ஆண்டு நாட்டில் 76,689 டெங்கு நோயாளர்கள் மாத்திரமே பதிவாகியிருந்தனர். அதனுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.